THE SWADESAMITRAN WEEKLY

சுதேசமித்திரன்

அக், 15, 1950 48 – பக்கங்கள் விலை அணு 4

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள் :

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை தபால் மூலம்)	சென்னை
	ரூ. அ.	ரூ. அ.
1 வருடம்	24—0	22—0
6 மாதம்	12—4	11—0
3 மாதம்	6—4	5—8

தனிப்பிரதி 1 அணு

வெளிநாடு: 1 வருடம் ரூ. 30. 6 மாதம் 15-8.

★

வாரப்பதிப்பு

1 வருடம்	13—0—0
6 மாதம்	7—0—0
3 மாதம்	3-12—0

தனிப்பிரதி 4 அணு

வெளிநாடு: 1 வருடம் ரூ. 15. 6 மாதம் ரூ 8.

குறிப்பு:—தினசரி, வாரப்பதிப்புகளுக்கு 3 மாதத்திற்குக் குறைந்த சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.,

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்.



எவ்வளவு தென்பு!

☆

ஹமாமின் செழிப்பான நுரையால் உங்கள் சருமத்திற்கு புத்துயிர் ஊட்டுங்கள்! தாவர எண்ணெய்கள் மிகுந்த இந்த ஸோப்பு அழுக்கையெல்லாம் போக்கி சருமத்தை பளபளப்பாக்குகிறது ஹமாம் தேய்த்து ஸ்நானம் செய்தபின் நீங்கள் பெறும் தென்பும், அதன் இனிய நறுமணமும் உங்களுக்கு மட்டற்ற உற்சாகம் அளிக்கிறது இந்த ஸோப்பு சர்வ ஜனப் பிரியமாய் விளங்குவதில் ஆச்சரியமொன்றுமில்லை! இன்றே ஹமாம் வாங்குங்கள்—எங்கும் கிடைக்கும்,

ஹமாம்

தீ டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
சிறிய சைஸ் கட்டிகள் எங்கும் கிடைக்கும்.



வாழிய செந்தமிழ் — **சுதேசமித்திரன் வாரப்பதிப்பு** — வாழ்க நற்றமிழர்

Vol XXI] விக்ருதி௵ புரட்டாசிமீ 29உ ★ 1950-௵ அக்டோபர்மீ 15உ No. 37

பொருளடக்கம்

★

		பக்கம்
ராஜ தரங்கிணி	ஜெகசிற்பியன்	5
தென்றல்	குகன் எம். கே. குருசாமி	10
கலாமண்டபம்		11
பாந்தவ்யம்	ஜம்பு	18
நிலாமுற்றம் (தொடர் கதை)	கூ. இ	18
ஹிந்தி பாடங்கள்	பண்டிட்ஜீ	22
உங்கள் காலபலன்	ரால்	27
பட்டணத்துப் படகு	குங்குமம்	31
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	33
சிறுவர் பகுதி	எஸ் ரங்கராஜன்	35
அனுபவ ரேகாசாஸ்திரம்	ரொமேஷ்கே சாஸ்திரி	39
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	42
விலைவாசி		45
நாடக நயம்	ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்	47

“மித்திரன்” வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

மனோபாவம் திருந்துமா?

★

லண்டனில் நடந்தேறிய காமன்வெல்த் மந்திரிகள் மகாநாட்டில் ஆறு வருஷத் திட்டமொன்று உருவாகியிருக்கிறது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலேயா, சிங்கப்பூர், ஸரவக், வட போர்னியோ இந்நாடுகளின் பொருளாதாரப் புனருத்தாரணமே இத்திட்டத்தின் அடிபபடையான நோக்கம். பொதுவாக ஆசியதேசங்களின் பொருளாதார நிலை மிகவும் அவலமானது. அதிலும் சென்ற யுத்தத்திற்குப் பின் அது இன்னும் சீரழிந்து போய்விட்டது. இப்பிராந்தியத்தில் தற்போதுள்ள கொந்தளிப்பு அடங்கி, ஜனநாயக அடிப்படையில் சீரான முன்னேற்றம் ஏற்படவேண்டுமாயின் இங்குள்ள மக்களின் அல்லலைத் தணிக்கத் துரிதமாக வகை செய்வது மிகவும் அவசரமான ஒரு வேலையாகும். இந்த உணர்வுடன் தற்போது காமன்வெல்த் நாடுகளைப் பற்றியவரை, ஒரு ஏற்பாடான முயற்சி துவங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்நாடுகளில் இயற்கை வளங்களுக்குக் குறைவில்லை. இவற்றைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் கூடியவரை துரிதமாக உயரக்கூடும். ஆனால் இவ்வளங்களை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நவீன சாதனங்கள் தற்போது இந்நாடுகளிடம் போதியளவில்லை குறிப்பாக நவீனத் தொழில் முறையில் தக்க பயிற்சி பெற்றவர்களும், இயந்திர சாதனங்களும் நமக்குப் பெருவாரியாகத் தேவை. மேற் குறித்த ஆறு வருஷத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதெனில் சுமார் **2,500.** கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. இதில் பெரும் பகுதி வெளியிடங்களிலிருந்து தருவிக்க வேண்டிய இயந்திரங்களின் மதிப்பே. தொழில் துறை பயிற்சியைப் பற்றியவரை தற்போதையக் குறைபாட்டை நீக்க, இத்திட்டத்தின்படி காமன்வெல்த் நாட்டுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபை ஏற்படவிருக்கிறது. இத்தகைய பயிற்சிக்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும், பிற்பட்ட நாடுகள் அபிவிருத்தித் திட்டங்கள் வகுப்பதில் அவைகளுக்கு உதவி புரிவதும அச்சபையின் முக்கிய

அலுவல். அச்சபை திருப்திகரமாக இயங்குமென்றே வைத்துக் கொள்வோம்.

ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குவேண்டிய மூலதனம் எவ்வாறு வசூலாகப்போகிறதென்று தெரியவில்லை. இவ்வளவு மூலதனத்தையும் இத்திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் நாடுகளே கொடுப்பது சாத்தியமல்லவென்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்தும், இப்பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள நாடுகளிடமிருந்தும் உதவிபெற்றுல்தான் இத்திட்டத்தை நிறைவேற்றிவைக்க முடியுமென்று லண்டன மகாநாட்டைப் பற்றிய அறிக்கை கூறுகிறது. சர்வதேச ஸ்தாபனங்களோ, மற்ற காமன்வெல்த் நாடுகளோ போதியளவு உதவி புரியக்கூடுமென்று நம்ப இடமில்லை. மூலதனம் அல்லது இயந்திர சாதனங்கள் விஷயத்தில் இப்பிராந்தியத்தின் குறைபாட்டைக் கணிசமாகப் பூர்த்திசெய்து வைக்கக்கூடியது அமெரிக்கா ஒன்றுதான். இவ்வளவு நாளும் அதன் கவனமெல்லாம் ஐரோப்பிய நாடுகளின் புனருத்தாரணத்திலேயே திரும்பி யிருந்திருக்கிறது. ஆசியப் பிராந்தியத்தை அலட்சியம் செய்ததால் தற்போது ஏற்பட்ட நிலைமையைக் கண்ட பின்னராவது அதன் மனோபாவம் திருந்துமா என்பது தெரிய வேண்டும்.

☆

சமரஸத்துக்கு வழி

இந்தியாவும், இலங்கையும் அண்டை நாடுகளென்ற முறையில் பரஸ்பரம் நல்லுணர்ச்சியுடன் ஒத்து வாழ்வதே பொருத்தம். அதோடு இரண்டுக்குமுள்ள கலாசாரத் தொடர்பை எண்ணிப்பார்க்கும் யாரும் இவைகளிடையே தீராத தகராறு எதுவும் ஏற்படக் கூடுமென்று எளிதில் நம்ப முடியாது எனினும் சில்லறைச் சிக்கல்களால் இருநாடுகளுக்கும் மனக் கசப்பு வளர்ந்து வருவது ஒரு கொடிய துர்ப்பாக்கியம் இந்த விபரீதத்தை இனியும் நீடிக்க விடுவதற்கில்லை; இதில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளும் கலந்து பேசுவதன் மூலம் தற்போதைய தகராறுகள் எளிதில் தீரக் கூடுமென்று இலங்கை இந்தியர் காங்கிரஸின் மாஜித் தலைவரான ஜனாப் அஸிஸ் வெளியிட்டுள்ள கருத்து முக்கிய கவனத்துக்கு உரியதாகும். இந்நோக்கத்துடன் இருதேச சர்க்காரின் பிரதிநிதிகளும் இலங்கை இந்தியர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்பது அவர் யோசனை. இத்தகைய ஒரு மகாநாட்டில் எல்லாத் தரப்பினரும் நேர்மையையும், நல்லுணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு மனம் விட்டுக் கலந்து பேசுவராயின், பிறகும் தீராத தகராறு எதுவும் எஞ்சியிருக்குமென்று தோன்றவில்லை.

தற்போது வீணாக மாச்சரியத்தை வளர்த்துவரும் பிரச்னைகள் மூன்று. ஒன்று, இலங்கைக்குள் வசிக்க வருவோர், அங்கிருந்து வெளியே செல்வோர் ஆகியவர்களைப்பற்றிய சட்டத்தையும், இன்னொன்று இலங்கையில் வசிப்பதற்கு அனுமதி அளிப்பதில் அங்குள்ள அதிகாரிகள் கையாளும் முறையையும், மற்றொன்று உத்தியோகங்களை இலங்கையர் மயமாக்கும் வகையையும் பற்றியவை. உத்தியோகங்களை இலங்கையர் மயமாக்குவதென்ற கொள்கையைப்பற்றி யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அதை நிறைவேற்றி வைப்பதில் இலங்கை சர்க்கார் நேர்மையான வழியைக் கையாளவேண்டுமென்பதுதான் கோரிக்கையெல்லாம். குறிப்பாக ஏற்கெனவே அங்கு வேலையிலமர்ந்துள்ள இந்தியர்களுக்கு அக்கொள்கையின் அமுலால் தீங்குநேரவிடக்கூடாது. புதிதாக இந்தியர் எவரும் இலங்கைக்குள் வரக்கூடாதென்றோ, அத்தகையவர்களுக்கு அந்நாட்டில் எவ்வித வேலையும் கொடுக்கக்கூடாதென்றோ இலங்கை சர்க்கார் தாராளமாக விதி இயற்றத் தடையில்லை. ஆனால் அவர்கள் ஏற்கெனவே அங்கு வேலையிலுள்ளவர்களை விரட்டியடிக்க முற்படுவது சிறிதும் நியாயமல்ல. இலங்கை சர்க்காரே அது அநீதியென்பதை ஒப்புக்கொண்டு, தாங்கள் ஒருபோதும் அதைச் செய்யப் போவதில்லையென ஏற்கெனவே திட்டமாக உறுதி கூறியிருக்கிறார்கள். இப்போது அதற்கு மாறாக நடக்க சமாதானம் தேடுவது நேர்மைதானா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

உத்தியோகங்களை இலங்கையர் மயமாக்குவதென்ற கொள்கையால் தற்போது பாதிக்கப்பட்டிருக்கும் இந்தியர் அனைவரும் அந்த தேசப் பிரஜைகளாகாதவர்கள், அல்லது அவ்வாறு ஆக முடியாதவர்கள். எனினும் அவர்களில் பலர் ஐந்து வருஷ காலத்திற்கு மேலாக அங்கு வசித்து வந்திருப்பவர்கள். பிரஜா உரிமை இல்லாது போயினும் அங்கு நிரந்தரமாக வசிக்கவாவது அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமல்லவா? ஆனால் அங்கு தற்காலிகமாக வசிக்கத்தான் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஐந்து வருஷங்களுக்குக் குறைவாக அங்கு வசித்து வந்திருப்பவர்கள் பலருக்கு மேற்கொண்டு அங்கு தற்காலிகமாக வசிக்கக்கூட அனுமதி கிடைப்பதில்லை; ஒரு சிலருக்கு ஆறுமாத காலம்மட்டுமே வசிக்க அனுமதிச்சீட்டு கொடுக்கப்படுகிறது. அந்தக் காலம் முடிந்ததும் அவர்களை அதிகாரிகள் வெளியேற்றி விடலாம். இவ்வாறாக அங்கு பிரஜைகளாக முடியாத இந்தியருக்குப் பல வகையிலும் நிர்ப்பந்தம் அதிகரித்த வண்ணமாயிருக்கிறது. இதன் மூலம் இந்தியாவில் தங்கள் மீது எரிச்சல் வளர்ந்து வருவதை இலங்கை சர்க்கார் உணராதிருக்க முடியாது. இருதரப்பினரும் கலந்து பேசுவதன் மூலம் மேற் குறித்த விஷயங்களில் நேர்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமரச முறையை உருவாக்குவது அசாத்தியமல்ல. இது பற்றி ஜனாப் அஸீஸ் வெளியிட்டுள்ள யோசனையை இலங்கை சர்க்கார் எந்த அளவு ஏற்கத் தயாரென்பது தெரியவேண்டும்.

ராஜதரங்கிணி

ஜெகசிற்பியன்

அரண்மனை நந்தவனத்தின் மய்யத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓர் பளிங்கு மேடையில், காஷ்மீரத்தின் மகா மன்னனான முக்தாபீடன் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் அழுந்தி விட்டிருந்தான்.

மேடையின் பின்புறமாக வளர்ந்து நின்ற குங்கும மரம் ரத்தினத்துளிகள் போன்ற தன் மலர்களை, மாலைத் தென்றலின் உலுப்பலால் மன்னனின்மீதும், மண்ணிலுமாக உதிர்த்துக் கொண்டிருந்தது தன்மலரின் பெயரே அந்நாட்டின் பெயராக இருப்பதறிந்து, ஆனந்தத்தால் விம்முவதைப் போல, கிளைகளும் இலைகளும் 'சல சல' வென அசைய ஆடிக்கொண்டிருந்தது அக் குங்கும மரம், ('காஷ்மீரம்' என்றால் வடமொழியில் 'குங்குமப் பூ' என பொருள்படும்.)

இளஞ்சூட்டுடன் இறங்கிக்கொண்டிருந்த சூரியன் மலையின் பின்புறம்போய் ஒளிய ஆரம்பித்தான், கங்கை நதியின் உற்பத்தி ஸ்தானமான அம்மலை அப்போது பூரணத் தாய்மை எழில்கொண்டு பூரித்து நின்றது.

தென்றலார் சுமந்துவந்த வன மலர்களின் நறுமணத்தையோ, அல்லது கூடடையும் புட்கள் இசைக்கும் இனிமையான கீதத்தையோ அம்மன்னன் லட்சியம் செய்யவில்லை, அவன் எண்ணமெல்லாம், நேற்று அரசவையில், ஆஸ்தான கவிஞரான பில்ஹணனால் இயற்றி அரங்கேறிய தனது சுயசரித காவியத்தின் மீதே பதிந்துவிட்டிருந்தது!

கார்கோடக வம்சத்தில் வந்த காஷ்மீர மன்னனான முக்தாபீடன், பல நாடுகளின்மீதும் போர்தொடுத்து அந்நாடுகளை தன் நாட்டுக்கு அடிபணிய வைத்த வீர வரலாற்றை விரித்துக் கூறும் வகையில் எழுந்ததாகும் 'ராஜதரங்கிணி' என்ற காவியம்!

சந்திர குப்தன், சமுத்திர குப்தன் ஆகியவர்கள் ஸ்தாபித்த பரந்த சாம்ராஜ்யத்தைப்போன்று தானும் பாரதத்தையும் அதை அடுத்துள்ள பல நாடுகளையும் ஒன்றாக்கி ஒரு குடையின் கீழ் ஆளவேண்டுமென்ற ஆவல் எழுந்ததும், முக்தாபீடன் முதன் முதலாக கன்னோசியின்மீது போர் தொடுத்தான். அந்த முதற் படையெடுப்பிலேயே விஜயலட்சுமி அவன் பக்கம் வெற்றிக் கொடி யேற்றினாள்!

அடுத்து, தெற்கே தண்டெடுத்தான் அங்குள்ள கலிங்கம், கர்நாடகம், காஞ்சி, கொங்கணம், துவாரகை, அவந்தி, மாளவம், சௌராஷ்டிரம் ஆகிய நாடுகள் அவனுக்கு அடிபணிந்தன, பின்னர் கிழக்கேயிருந்த கௌட நாட்டின்மீதும் பாய்ந்தான் முக்தாபீடன். அதுவும் அவன் கைவசமாகியது, இறுதியில் காஷ்மீரத்தின் வடகிழக்கே அவன் சேனை சமுத்திரம் திரண்டு திரும்பியது. அங்குள்ள காமரூபம் (அஸ்ஸாம்), கடாரம் (பர்மா), திபேத், துருக்கிஸ்தானம் ஆகிய நாடுகள் முக்தா பீடனுக்குக் கப்பம் கட்டி வாழ இசைந்தன.

இவ்வாறு அஷ்ட திக்குகளிலுமுள்ள நாடுகளனைத்தையும் காஷ்மீரத்துடன் சேர்த்து. அகண்ட சாம்ராஜ்யமாக்கி, அதன் அதிபதியாய் வீற்றிருந்தான் அப்போது முக்தாபீடன்.

உங்க பிள்ளையாண்டானுக்கு தமிழ் ரொம்ப நன்னா வறது. ஆனால் இங்கிலீஷ்தான் வர மாட்டேங்கறது!

அட நீரொண்ணு, இங்கிலீசையும் தமிழிலேயே சொல்லிப் போடுங்கய்யா!!

இந்த வரலாற்றை விரிவாக விளக்கும் சரிதைதான், பில்ஹணனால் எழுதப்பட்டு, நேற்று அரசவையில் அரங்கேற்றமும் ஆயிற்று.

'ராஜதரங்கிணி' என்ற அந்த கிஜ காவியத்தால் முக்தா பீடனின் போர்த்திறமையும், ஆட்சித்திறமையும் உலகின் பலபாகங்களிலும் எதிரொலிக்க ஹேதுவாகியது காஷ்மீர் மக்களும், மற்றை நாட்டு மகாஜனங்களும், முக்தாபீடனின் சமர்சதுரை அக்காவியத்தின்மூலமாக அறிந்து மனமாழ்கிக் கிடந்தனர்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் மூல காரணனான முக்தாபீடன் மட்டும், தான் நடத்தியபோரையும், அதிற் கிடைத்த வெற்றிகளையும் ஒரு சிறிதும் நினைத்துக் குதூகலப்படாமல், இன்று இவ்வாறு சோம்பி உட்கார்ந்திருப்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது. சென்றுபோன சம்பவங்களை மீண்டும் எண்ணிப்பார்த்து இன்பங்கொள்வது மனித மனத்தின் இயல்பு. ஆனால் அவ்வியல்புக்கு மாறாகத்தான் இன்று இருந்தான் முக்தாபீடன்! முதுமைப் பிராயத்தை நெருங்கிவிட்டாலும், எப்போதும் சுறு சுறுப்பாயும் குதூகலமாயும் இருக்கும் அவன், இன்று இப்படி சோர்ந்துபோய் அமர்ந்திருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது.

செக்கர் வானத்தை கரும்புகைப் படலம் லேசாக தழுவ ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து பனி மண்டலமும் கிளம்பி வந்து பச்சை மலைகளை வெள்ளை மலைகளாக்கியது,

நந்தவனத்தின் புஷ்பச் செடிகள் சலசலப்பதைக் கேட்டு மெதுவாகத் தலைநிமிர்ந்தான் முக்தாபீடன். அவனை நோக்கி ஆஸ்தான கவிஞனான பில்ஹணன் வந்துகொண்டிருந்தான். கவிஞனைப் பார்த்ததும் மன்னனின் முகம் ஏனோ லேசாக வதங்க ஆரம்பித்தது!

'வணக்கம், மன்னரே!' என பணிவுடன் கூறிக்கொண்டே வந்து முக்தாபீடன் எதிரில் அமர்ந்தான் பில்ஹணன். கவிஞனின் வணக்கத்துக்கு ஒரு சிறு புன்முறுவல் பூத்ததோடு மௌனமானான் மன்னன்!

சற்று நேரம் அவ்விருவர் மத்தியிலும் நிசப்தம் நிலவியது. பின்னர் கவிஞன் மௌனத்தைக் கலைத்துப் பேசினான் :

'மன்னரே! தங்களின் வீரவரலாற்றை நான் எழுதும் வாய்ப்புப் பெற்றது மகா பாக்கியமென கருதுகிறேன்!' என்றான் பில்ஹணன் பெருமிதத்தோடு.

இவ்வளவு நேரம் மௌனம் சாதித்துக்கொண்டிருந்த முக்தாபீடன் சட்டென நிமிர்ந்து 'உண்மைதான் கவிஞரே!...ஆனால்...அதில் எனக்குத் திருப்தி ஏற்பட...வில்லை!' என்றான் அடைத்த குரலில்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் கவிஞன் மன்னன் இப்படிக் கூறுவானென்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. தனது கவித்வத்தை வானளாவப் புகழ்ந்து போற்றுவான் என்றே அவன் கருதி இருந்தான், ஆனால் மன்னனின் பதில்?— பில்ஹணனுக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது.

தன்னை மிகச் சிரமத்துடன் சமாளித்துக்கொண்டு, 'அரசே! தாங்கள் இவ்வாறு கூறுவது எனக்கொன்றும் புரியவில்லை...' என்றான் கவிஞன் ஏமாற்றம் இழையும் குரலில்.

"உண்மைதான்! உமக்குப் புரியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!... எனக்கே 'அது' இன்னும் புரியா புதிராய் இருக்கும்போது உமக்குமட்டும் எங்கே புரியப்போகிறது?" என்று மொட்டையாகக் கூறிவிட்டு, கவிஞனின் முகத்தை உற்று நோக்கினான் முக்தாபீடன்.

கேள்விக் குறிகளும், ஆச்சரியக் கோடுகளும் முகத்தில் தேங்கிய மன்னனையே மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் கவிஞன். தான் இயற்றிய காவியத்தில் மன்னனுக்குத் திருப்தி ஏற்படவில்லை என்று அறிந்த மாத்திரத்தில் அவன் உயிரே உடலைவிட்டுப் பிரிந்துபோவதுபோலிருந்தது !

சற்றுநேரங் கழித்து மீண்டும் பேசினான் மன்னன் :

"கவிஞரே! தாங்கள் சமைத்த காவியத்தின் முதற் படலத்தில், எனது கன்னோசி படையெடுப்பைப்பற்றி விளக்கியிருக்கிறீர். அதிலுள்ளவிஷயம் மேற்போக்கான சம்பிரதாயச் செய்திகளே தவிர, எனக்கு அப்படையெடுப்பில் ஏற்பட்ட ஒரு உண்மையான அனுபவ நிகழ்ச்சி அதில் இல்லவே இல்லை ! அந்நிகழ்ச்சி அப்படலத்தில் இல்லாதது தங்கள் பிழையுமல்ல ! காரணம் என்னைத் தவிர வேறுயாருக்குமே அந்நிகழ்ச்சி தெரியாதிருந்தபோது நீர்மட்டும் அதை எப்படி அறிந்திருக்கமுடியும்?...அந்த நிகழ்ச்சி இவ்வரலாற்று நூலில் இடம் பெற்றுவிட்டிருந்தால் என் வீர பராக்கிரமமெல்லாம் வெறும் வேடிக்கை விளையாட்டாகி விட்டிருக்கும்! ஆகையால், அது விட்டுப்போனதே நல்லதுதான்!" என்று ஈனஸ்வரத்தில் கூறி முடித்தான் முக்தாபீடன்.

'அரசே! தாங்கள் அந்தச் சம்பவத்தை இப்போது கூறினாலும், நாளைக்கே முதற் படலத்தை மாற்றி, விட்டுப்போனதைச் சேர்த்து புதுப்பித்து விடுவேன்! தங்கள் சித்தம்?..." என்றான் கவிஞன் மிகத்தாழ்மையுடன்.

இதைக் கேட்டதும் பலமாகத் தலையசைத்துவிட்டுப் பேசினான் முக்தாபீடன்.

'கவிஞரே! நீர் அப்படி ஒருகாலும் செய்யக்கூடாது! 'செய்யவில்லை' என்று வாக்குறுதியளித்தால், உமக்கு அந்தச் சம்பவத்தை நான் இப்போது சொல்ல முடியும்!......" என்றான் மன்னன் நிதானமாக.

"தங்கள் கருத்துக்கு மாறாக நான் எதையும் செய்ய இன்றுவரை எண்ணியதே இல்லை சாம்ராட்!" என்றான் கவிஞன் உறுதி நிறைந்த குரலில்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் நிமிர்ந்து உட்கார்ந்து. பில்ஹணனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான் முக்தாபீடன்.

* * *

"நிகழும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நான் காஷ்மீர அரியணையில் ஏறியது உமக்கு நினைவிருக்கலாம். அதாவது முப்பது வருஷங்களுக்கு முன்னால்.

அப்போது எனக்கு வயது இருபத்தைந்தே ஆகியிருந்தது. எனது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பை விரி

வாக்க எண்ணி முதன்முதலாக கன்னோசியின்மீது படையெடுத்தேன்

நான் நடத்திய பல போர்களில் வெற்றியடைந்ததற்கு முக்கிய காரணஸ்தன் அப்போது என்னுடன் இருந்த சேனாதிபதி மித்திரசர்மன்தான் என்பதைத் தாங்களும் மறக்காமல் 'ராஜ தரங்கிணி'யில் குறித்திருப்பதற்கு உமக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்...அவ்வீரனுக்கு நானிழைக்கவிருந்த தீங்கை இன்று நினைத்தாலும் என் மனச் சாட்சி என்னைக் குத்திக் கொல்கிறது!......

கன்யாகுப்ஜம் என அழைக்கப்படும் கன்னோசிக்கு அப்போது யசோவர்மன் பூபதியாயிருந்து வந்தான் நிலப் பரப்பிலும், ஆள் வலியிலும் குறைந்தவனாயிருந்தாலும், மனவலி ஒன்றையே நம்பி, நான் திரட்டிச் சென்ற பெரும் படையுடன் எதிர்த்து நின்று, போரிடத் துணிந்தான் அவ்வீரமன்னன்.

ஆகையால், ஒரு வாரத்தில் முடிய வேண்டிய அப்போர், ஆறு மாதமாகியும் எப்பக்கமும் வெற்றி தோல்வி காணாமல் நீண்டுகொண்டே போயிற்று. நாளாக ஆக என் மனம் சோர்வடைய ஆரம்பித்தது. முதற் போரிலேயே புறமுதுகிட்டு ஓடிவிடுவேனோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனினும் என்னிடமிருந்த ஏராளமான சைன்னியத்தின் தைரியத்தாலும், சேனைத் தலைவன் மித்திர சர்மனாலும் என் நம்பிக்கை தளர்ந்து விடாமலிருந்தது. இருதரப்பிலும் பல்லாயிரம் வீரர்கள் பலியாகிவிட்டிருந்தனர்.

அன்றொரு நாள், பகலெல்லாம் உக்கிரமான போர்செய்துவிட்டு இருட்டியதும் அவரவர்களின் கூடாரங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர் போர்வீரர்கள் நாங்கள் தொடுத்தது தர்மப் போரேயானதால், இளைப்பாறும் போதோ தூங்கும்போதோ திருட்டுத்தனமாகப் புகுந்து தாக்கும் கோழைத்தனம் இரு சாராரிடமுமே இல்லை. ஆதலால் இரவில் போர்க்களம் ஓய்வுபெற்றே இருக்கும்!

முதல் ஜாமம் நழுவி இரண்டாம் ஜாமமும் ஆரம்பமாகிவிட்டது, நான் மட்டும் என் பாசறையில் தூக்கம் வராமல் உலாவிக்கொண்டிருந்தேன் வீரர்களெல்லாம் போரிட்ட களைப்பால் சுகமான நித்திரையில் ஐக்கியப்பட்டுக் கிடந்தனர் சேனாதிபதி மித்திர சர்மன் பரிமீதேறி ரோந்து சுற்றிவர கிளம்பியிருந்தான். நரிகளின் ஊளைச் சப்தமும், ஜாமக் கழுகுகளின் அலறலையும் தவிர, மற்றபடி அந்தப் பிரதேசம் பூரண நிசப்தத்தில் ஆழ்ந்து கிடந்தது.

பால்போன்றிருக்கும்நிலவொளியில் சற்று நேரம் வெளியே போய் உலாவி வரலாமென எண்ணி: குதிரைமீதேறிக் கிளம்பினேன் மனம் போன திசையெல்லாம் குதிரை சென்றுகொண்டிருந்தது கடைசியில், சரஸ்வதி நதிக்கரையில் அமைந்துள்ள ஒரு உத்தியான வனத்தினுள் புகுந்தேன் அச்சோலை கன்னோசி மன்னனுக்குச் சொந்தமானதாகும் எனினும் தைரியமாக அதனுள் நுழைந்தேன். சோலையின் வனப்பு என்னை அப்படி ஈர்த்தது.

வனத்தின் வட புறமிருந்த தடாகமொன்றின் அருகில் இறங்கி, குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு கால் நடையாக உலாவக் கிளம்பினேன்.

சிறிது தூரம் நடந்திருப்பேன். எனக்கு இருபது கெஜ தொலைவில் யாரோ இருவர் சேர்ந்து பேசுங் குரல் என் கவனத்தை வெட்டியிழுத்தது! ஆச்சரியமும் பரபரப்பும் அடைந்தவனாய் அங்கேயே தயங்கி நின்று குரல் வந்த திக்கை நோக்கினேன்.

மலர்ச் செடிகள் சூழ்ந்திருந்த ஓர் சலவைக்கல் மேடையில் இருவர் அமர்ந்து ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்தது நில வொளியில் எனக்கு நன்றாகத் தெரிந்தது !

கண்ணையும் காதையும் கூர்மையாக்கி உற்றுக் கவனித்தேன். என்னையோ அல்லது வேறெவரையுமோ சிறிதும் லட்சியம் செய்யாமல் தம் பேச்சிலேயே மெய்ம்மறந்து விட்டிருந்தனர் அவ்விருவரும்! செடிகளின் மறைவில் ஒளிந்து மெதுவாக நகர்ந்துகொண்டே போய் அவ்விருவரையும் உற்றுநோக்கினேன். ஆஜானுபாகுவான ஓர் ஆணழகனும், தந்தச் சிலைபோன்ற ஒரு அற்புத எழில் மங்கையும் அங்கு அமர்ந்து தம்மை மறந்த நிலையில் உரையாடிக்கொண்டிருந்தார்கள் ! இளமை முறுக்குடன் இருந்த என் உடல் அந்த இளங் காதலர்களின் ஏகாந்தத்தைக் கண்டு துடித்தது !

மூச்சுகூட பலமாக விடாமல் பூனைபோல் நழுவி நழுவி, அவர்கள் அமர்ந்திருந்த மேடையின் பின்புறம் ஓர் முல்லைப் பந்தலின் நிழலில்போய் மறைந்து நின்றுகொண்டேன். இப்போது அவ்விருவரையும் நான் நன்றாகப் பார்க்க முடிந்தது.

உலகிலுள்ள பெண்களின் அழகெல்லாம் ஒன்றாகத் திரண்டு வந்து ஒரு உருவானதுபோல், ஒப்பற்ற ரூப சௌந்தர்யத்துடன் விளங்கினாள் அப்பெண்ணரசி அவளைப்போன்ற எழில் படைத்த ஒரு மங்கையை நான் அதுவரை பார்த்தேயிருக்கமாட்டேன் ! சந்திரிகையின் தண்ணொளியால் அவள் தேவமாதாகவே பிரகாசித்தாள் அப்போது. அவளுடைய ரூபலாவண்யத்திலேயே மயங்கிவிட்ட நான், என்னைச் சமாளித்துக்கொண்டு அந்த அப்ஸரஸின் அருகில் அமர்ந்திருந்த ஆண்மகனை நோக்கினேன்.

என்ன ஆச்சரியம்! ஒரே சமயத்தில் ஆயிரம் ஈட்டிகள் என் கண்களில் பாய்வதுபோன்ற பயங்கரதடுமாற்றம் ஏற்பட்டது எனக்கு! வேகமாக ஓடும் நெஞ்சை அழுத்திப்பிடித்துக்கொண்டு



கண்களைக் கசக்கி மீண்டும் நோக்கினேன்.

சந்தேகமில்லை!

என் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரனான சேனாதிபதி மித்திரசர்மனே அங்கு உட்கார்ந்துகொண்டு அந்தப் பெண்ணுடன் உரையாடிக் கொண்டிருந்தான்!

என் உடல் உக்கிரமான கோபத்தால் சூடேறித் துடித்தது. அப்பெண் கட்டாயம் கன்னோசி மன்னன் யசோவர்மனின் புத்ரியாகத்தான் இருப்பாள்! எதிரியின் பெண்ணுடன் என் பிரதம சேனாபதி நட்பு கொண்டிருந்தால் நான் தொடுத்திருக்கும் போர் என்னாவது? என்றைக்கிருந்தாலும் தன் காதலிக்காக என்னையும் என் படைகளையும் காட்டியே கொடுத்துவிடுவான் அவன்! நல்லபாம்பை முத்தாரமென எண்ணி இது நாள்வரை கழுத்திலிட்டுக் கொண்டிருந்ததை நினைக்க எனக்கே பெருத்த பயமாகிவிட்டது. கன்னோசி நாட்டானான இந்தத் துரோகியை நம்பி என் படைகளுக்ுத் தலைவனாக்கியது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போதுதான் நான் உணர்ந்தேன். என்னையும் என் சைன்னியங்களையும் நிர்மூலமாக்கத்தான் தன் காதலியுடன் சதி செய்கிறான் என்று நிச்சயித்தேன், உண்ட வீட்டுக்கு இரண்டகம்செய்த அவனை அந்த க்ஷணமே இரு துண்டங்களாக்கிவிட என் கரங்கள் துடித்தன வாளை அழுத்திப் பிடித்துக்கொண்டு வெறிகொண்டவன்போன்று அவர்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரங்கழித்து இருவரும் எழுந்து விடைபெற்றுக் கொண்டனர். மித்திரசர்மன் பரிமீதேறி தெற்கு நோக்கிப் பறந்துவிட்டான் அந்த மங்கை செடிகளினூடே புகுந்து எங்கோ சென்று மறைந்துவிட்டாள்!

நிலவொளியின் உதவிகொண்டு கடைசியாக ஒரு முறை அவள் முகத்தைப் பார்த்தேன் கோபத்தால் கொதித்துக்கொண்டிருந்த என் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் இனந்தெரியாத ஒருவகை இன்ப உணர்ச்சி சுரப்பதைப் போன்றிருந்தது!

இப்போது மித்திரசர்மனை என்ன செய்யவேண்டுமென்ற பிரச்சனையே என்னுள் தலைதூக்கி நின்றது...... கோபத்தால் கொதிப்பேறியவனாய், குதிரை மீதேறி என் பாசறைவந்து சேர்ந்தேன்,

இரவெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து ஒரு முடிவுக்கும் வராமல் மௌனமாகவே இருந்துவிட்டேன்,

விடிந்ததும், எதிரியுடன் கடுமையான போர்செய்ய பலத்த ஏற்பாடுகள் பண்ணிவைத்திருந்ததால், மித்திரசர்மனை எந்தவிதத்தில் தண்டிப்பதென எனக்குப் புரியவில்லை சேனாதிபதியான அவனை இத்தச் சமயத்தில் நான் கைதுசெய்தால், அது எதிரியின் கை ஓங்க சந்தர்ப்பம் அளித்துவிடும் என்ற ராஜதந்திரம் எனக்குத் தெரிந்தே இருந்தது, எனினும், அவனை நாளைக்குப் போர்முனைசெல்ல விடாமல் தடுத்து, நானே படைகளை நடத்திச்செல்லத் திட்டமிட்டேன்.

பொழுது புலர்ந்தது,

அதிகாலையிலேயே எதிரியின் படைகள் போருக்கு ஆயத்தமாகி விட்டதால், மித்திரசர்மன் எனக்குத் தெரியாமல் தன் மேற்பார்வையிலிருந்த படைகளைத் திரட்டிக்கொண்டு போர்முனைக்குச் சென்றுவிட்டிருந்தான்!

இதையறிந்த என் உள்ளம் கொதித்தது, ஒவ்வொரு நிமிஷமும் தோல்விச் செய்தியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

சூரியன் கரகரவென மேலேறிக் கொண்டிருந்தான் மித்திர சர்மன் எந்த நிமிஷத்தில் எதிரியுடன் சேர்ந்துகொள்வானோ என்ற எண்ணமே என்னுள் தலைதூக்கியிருந்ததால், நானும் போர் முனைக்குப் புறப்பட ஆயத்தமானேன்!

இந்த சமயத்தில் கன்னோசி மன்னன் யசோவர்மன், தனது அரசவைப் புலவர்கள் இருவருடன் என் கூடாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான்!

அவர்கள் வருவதைப் பார்த்ததும், காஷ்மீர்படைகள், மித்திரசர்மனின் துரோகச் செயலால், புறமுதுகிட்டு ஓடிவிட்டன என்றே முடிவு கட்டிவிட்டேன்!

ஆனால் நடந்தது...?

என் எதிரில் வந்து நின்ற ஆஸ்தானப் புலவர்கள் என்னை வணங்கிவிட்டு, யசோவர்மனின் சரணாகதிப் பத்திரத்தை என்னிடம் சமர்ப்பித்தனர்! அதே சமயம் வெற்றி முழக்கமிட்டுக்கொண்டு என் படைகள் வந்தன!..."காஷ்மீர் மகா ராஜாவுக்கு ஜே! சேனாதிபதி மித்திர சர்மருக்கு, ஜே!" என அவர்கள் வானம் முட்டும்படி கோஷித்தது எனக்கு வியப்பை அளித்தது.

நானும் யசோவர்மனும் கன்னோசியின் ஆட்சி ஒப்பந்த விஷயமாகப் பலப்பல பேசி முடித்தோம். சட்டென, நேற்றிரவு சோலையில் பார்த்த அந்த சௌந்தர்யவதியின் நினைவு எனக்கு வந்தது! அந்த எழிலரசியை இந்த ஜன்மத்தில் அடையாதிருப்பது ஒரு பெரும் தோல்வியென்றே கருதியது என் வெற்றி பெற்ற உள்ளம்! உடனே யசோவர்மனிடம் என் அபிலாஷையைத் தெரிவித்தேன், காஷ்மீர் சக்ரவர்த்தி தனக்கு மருமகனாகக் கிடைத்ததைப்பற்றி அவன் பூரித்தே போனான்!

* * *

நட்ட நடுநிசி. வெற்றிபெற்ற குதூகலிப்பில் என் படைவீரர்களெல்லாம் சுகமான நித்திரையில் கட்டுண்டு கிடந்தனர். கன்னோசியின் இளவரசி என் காதற்கிழத்தியாக ஆகப் போவதை நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டே, கூடாரத்தின் வெளியில் உலாவிக்கொண்டிருந்தேன் சேனாதிபதி மித்திரசர்மனின் நோக்கமும் செயலும் எனக்குப் புரியாத புதிராகவே இருந்து வந்தது. மண்டலாதிபதிக்கு மாலையிடவேண்டியவள் கேவலம் ஒரு படைத் தலைவனுக்குச் சொந்தமாவதா என்றுதான் நான் இறுமாப்பு கொண்டிருந்தேன்.

எங்கோ இருந்து. வாயு வேகமாகப் பறந்துவந்த ஒரு குதிரை என் எதிரே வந்து 'டக்'கென நின்றது! திடுக்கிட்டு மிரண்டுபோனவனாய் இடையிலிருந்த வாளை அழுத்திப் பிடித்துக்கொண்டு குதிரையை நோக்கினேன். ஆணுடை தரித்துக்கொண்டிருந்த ஒரு அழகிய பெண் பரிமீதிருந்து குதித்திறங்கி என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள்! ஆச்சரியமும் அச்சமும்கொண்டவனாய் அவளையே விரைத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒரு வீர மிக்க போர்வீரனைப் போன்று கம்பீரமாக நடந்துவந்த அவள் என்னை வணங்கிவிட்டு சற்று ஒதுங்கி நின்றாள்.

"நீ, யார்? எங்கிருந்து வந்தாய்?" என்று சற்று அதட்டியே கேட்டேன்.

"காஷ்மீர மன்னனுக்கு கப்பங்கட்ட இசைந்த கன்னோசி நாட்டின் இளவரசியான உஷா தேவிதான் தங்கள் சமுகத்தில் நிற்கிறாள்!" என்று தாழ்ந்த குரலில் கூறிக்கொண்டே தன் தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்தாள் அந்த மங்கை!

"ஹா! உஷாதேவியா! என் பட்டத்து ராணியா? எனது காதற்......" வாக்கியத்தை முடிக்காமல் ஆச்சரிய மிகுதியினால் கூவிவிட்டேன்.

"பட்டத்து ராணியா? நானா உனக்குப் பட்டத்து ராணியாகப் போகிறவள்?...இல்லை!...இளவரசி உஷாதேவி என்றைக்கோ உமது சேனாதிபதியின் உரிமைச் சொத்தாகிவிட்டாள்...!"

"என்ன சொன்னாய் உஷா! காஷ்மீர மன்னனிடம் கைகட்டி சேவகம் செய்யும் ஒரு சாதாரண மனிதனுக்கு கன்னோசியின் இளவரசி உடமையாவதா? அதுவும் அதை நீ சொல்வதா?...

'ஆம், அரசே! அதைச் சொல்லிவிட்டுப்போகத்தான் இப்போது நான் இங்கே வந்திருக்கிறேன்......இளமை தொட்டே இணைந்துவிட்ட எங்களை. இடையே விதி குறுக்கிட்டுப் பிரித்தது அதன் காரணமாக மித்திரசர்மர் தங்களிடம் வந்து சரண்புக வேண்டியதாயிற்று......நீர் நினைத்திருப்பதைபோல உண்மையில் அவர் ஒரு சாதாரண பிரஜையல்ல; கன்னோசியின் மணிமுடி அவர் சிரத்தை அலங்கரிக்கவேண்டிய நிலையுடையவர்! என் தந்தைக்குப்பின் பட்டத்துக்கு வாரிசு அவ்ரேதான்!......... எப்படியென்று கேட்கிறீரா? என் தந்தைக்கு ஆண் சந்ததியில்லாததால் அவரது சகோதரியின் மகனான மித்திரசமர்ரே அந்நாட்டுக்கு மன்னராக வரக்கூடியவர்! சில ஆண்டுகளுக்கு முன்னால் தங்கைக்கும் தமையனுக்கும் ஏற்பட்ட ஒரு மனஸ்தாபம், நாளடைவில் முற்றி, வளர்ந்துவிட்டதால் மித்திரசர்மர் தன் சொந்த நாட்டைவிட்டு தங்களிடம்வந்து தஞ்சமடைந்தார்!.... மேலும், எங்களிருவருக்கும் எப்போதோ காந்தர்வவிவாகம் நடந்தேறிவிட்டது! இதையறியாத என் தந்தை உமக்கு என்னைக் கொடுக்க வாக்களித்துவிட்டிருக்கிறார்!......ஆதலால், அரசே! தர்மத்தின் பெயரால் தங்களை கெஞ்சுகிறேன், என்னை என் காதலரிடமிருந்து அபகரித்துக் கொள்ளவேண்டாம்!.........நாடு தன்னுடையதாயிருந்தும், பிறர் உப்பைத் தின்று அவர்களுக்குத் துரோகம் செய்யக் கூடாதென்ற சத்திய நெறிக்காக தன் நாட்டின்மீதே போர்தொடுத்து கன்னோசியை காஷ்மீருக்கு அடிமையாக்கிவிட்ட அந்தச் சுத்தவீரருக்கு நீர் காட்டும் கௌரவமாகவாவது இந்த எனது வேண்டுதலை ஏற்றுக் கொள்ளும்! அவர் உம்மைக் கெடுக்க வேண்டுமென நினைத்திருந்தால், இந்நேரம் நீரும் உமது படைகளும் யுத்த பூமியில் நாய்நரிகளின் உணவாகிவிட்டிருப்பீர்கள்!......அரசே! நான் இவ்வளவு கூறியும் உமக்கு நான்தான் வேண்டுமென்றால், இதோ இந்தவாளை என்மார்பில்பாய்ச்சி,என்பிணத்தையே மணந்து கொள்ளும்!..."என்று கூறிக் கதறிக்கொண்டே,என் கால்களைக் கட்டிக்கொண்டாள் கன்னோசியின் இளவரசி உஷா தேவி!

இவ்வளவு நேரம் மௌனமாகக் கேட்டுக் கொண்டுவந்த என் கண்கள் கலங்கி விட்டன, சுத்த வீரன் ஒருவனுக்கு மனதால் தீங்கு நினைத்தோமே என்று எண்ணிய மாத்திரத்தில் என் மீதே எனக்கு வெறுப்பேற்பட்டது...

அடுத்த கூடாரத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மித்திர சர்மனிடம் ஓடி அவனை எழுப்பி, மன்னிப்புக் கோரி அணைத்துக்கொண்டேன்...

காஷ்மீர் வந்து சேர்ந்ததும் மித்திர சர்மனுக்கும், உஷா தேவிக்கும் சிறப்பாகத் திருமணம் நடத்தி வைத்து. அவனுக்கு ராஜா' என்ற கௌரவப் பட்டத்தையும் அளித்தேன்...

இவ்வாறு என் வாழ்க்கையில் அப்போது ஏற்பட்ட அந்த அனுபவம் மட்டும் நேர்ந்திராவிட்டால், நான் வெற்றி வீரனாகவோ, அல்லது இந்த அகண்ட சாம்ராஜ்யத்தின் அதிபதியாகவோ, இவைகளுக்கெல்லாம் மேலாக நீதி நேர்மை, தர்மம் ஆகியவைகளைக் கைக்கொள்ளும் மனப்பக்குவத்தையோ நான் அடைந்திருக்க முடியாது! அப்பேர்ப்பட்ட அந்த உத்தம வீரனைப்பற்றி மறவாமல் தாங்கள் எழுதிய அக்காவியத்தில் குறித்திருப்பதற்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயினும் 'அந்த நிகழ்ச்சி'யை அதில்..."என்று கூறி நிறுத்தினான் மன்னன் முக்தாபீடன்,

பில்ஹணனின் முகமும் உள்ளமும் ஏமாற்றத்தால் வெளுத்து, நைந்துவிட்டிருந்தது, விட்டுப்போன அந்தச் சம்பவம் மட்டும் அவன் எழுதிய அந்த 'ராஜதரங்கிணி'யில் இடம் பெற்றிருந்தால் அது உலக இலக்கியங்களில் ஒன்றாக இடம் பெற்றிருக்கும் என்றே அக்கவிஞன் எண்ணி ஏங்கினான்!

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாத வாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

'தபோ நிதி,

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417

சேலம்

மூன்று தாமரை

பிடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

Estd  1920

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,

கோட்டை சேலம் S. I R.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்று தான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7 சாரங்கபாணி கோவில்
கீழ வீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

தென்றல்!

—குகன், எம். கே. குருசாமி—



1

தென்றல் காற்றே வா! வா! வா!
தேச மெங்கும் வீசி வா!
குன்றின் மேலே ஏறி வா!
'கூ கூ' என்றே பாடி வா!

2

கடலைத் தாண்டி ஓடி வா!
கரிய மேகம் தொட்டு வா!
உடலை ஆவித் தழுவ வா!
உலகை மலரக் கூடி வா!

3

நந்த வனங்கள் சென்று வா!
நல்ல மணத்தை அள்ளி வா!
கந்தம் எங்கும் வீசி வா!
கனியைத் தொட்டு ஆட்டி வா!

4

பழத்தின் வாசம் கிள்ளி வா!
பாப்பா மூக்கில் ஊட்டி வா!
குழலின் கானம் ஏந்தி வா!
கொத்து மலரை முத்தி வா!

5

கானல் சுற்றிப பாடி வா!
காலில் மணியைக் கட்டி வா!
வானம் சென்று பார்த்து வா!
வட்ட மதியைக் கூட்டி வா!

6

செடிகள் நடனம் ஆட வா!
சிறுவர் மகிழ்ச்சி கொள்ள வா!
மடியில தவழ்ந்து திரிய வா!
மகிழ்ந்து ஒன்றாய் வாழ வா!

7

இன்பத் தென்றலே ஓடி வா!
எட்டுத் திக்கும் மூட்டி வா!
அன்பை அள்ளித் தூவி வா!
அவனி எங்கும் நாடி வா!

8

அன்பு மலர்கள் கொய்து வா;
அழகாய் மாலை கட்டி வா!
அன்ப ருக வாழ வா!
நல்ல மாலை சூம் வா!



கலாமண்டபம்

ஸ்ரீ பாபநாசம் சிவன்

★

1890-ம் வருஷம், புரட்டாசி மாதம், தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூகா, போலகம் என்ற கிராமத்தில், பள்ளி உபாத்தியாயர், ஸ்ரீ ராமாம்ருத அய்யரின் இரண்டாவது குமாரராக ராமய்யா என்ற பெயருடன் ஸ்ரீ பாபநாசம் சிவன் ஜனித்தார்

சிறு வயதிலேயே 6-ல் தகப்பனாரை இழந்தார். அனந்தரவாரிசு வியாஜ்யத்தில், கொஞ்சம் பூமியையும் அவர் தகப்பனார் இழந்ததின் நிமித்தம் தாயாருடனும் மூத்த சகோதரர் ஸ்ரீ பி ஆர் ராஜகோபால அய்யருடனும், திருவனந்தபுரம் சேர்ந்தார். மகாராஜா சம்ஸ்கிருத கலாசாலையில், தர்க்க, வியாகரண, அலங்கார சாஸ்திரங்கள் பயின்று. 'உபாத்தியாய' என்ற பட்டம் பெற்றார்,

தாயார் நல்ல சங்கீத ஞானமும் திவ்ய சாரீரமும் உள்ளவர். அவ்வழியில் வந்த ஞானமும், நல்ல சாரீரமும் கலந்து பரமசிவ பக்தரான கரமனை ஸ்ரீ நீலகண்ட தாஸர் அவர்களின் சிஷ்யர்களுடன் சேர்ந்து, ஆயிரக்கணக்கான பக்தி பாடல்களை ராக, தாளங்களுடன் பாடுவதில் பயிற்சி பெற்றார். அந்நாள் சமஸ்தான வித்வான் பாலக்காடு பரமேஸ்வர பாகவதர் குமாரர், நூரணி மகாதேவ பாகவதர் முதலிய மகா வித்வான்கள் வலுவில் இவருக்கு சரளி, அலங்காரம் கீதம், வர்ணம் முதலியன கற்பித்தார்கள். 1910-ல் அதாவது இவருடைய இருபதாவது வயதில். இவருடைய தாயாரும் காலமானார் பிறகு இவர். தமிழ் நாட்டின் 14 ஜில்லாக்களிலும் கால் நடையாகவே க்ஷேத்ராடனம் செய்தும், திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி பரவசமடைய, பக்தி, சங்கீதம் கலந்த தமிழிசையில் பாடிக்கொண்டிருந்தாலும் மனதில் ஒருவித பற்றுதலும் இல்லாதவராய், ஏழாண்டுகளைக் கழித்தார் இடை இடையே சகோதர வாஞ்சையால், அவரிருந்த பாபநாசத்திற்குச் செல்வார் இவருடைய 27-வது வயதில். தஞ்சை ஜில்லாவில் பிரசித்தியாக இருந்த பழய வல்லம் சுப்பையர், மூங்கில்குடி கந்தசாமி அய்யர், திருவாரூர் வக்கீல் மகாதேவ அய்யர் முதலிய பிரமுகர்கள் சேர்ந்து, லக்ஷ்மி என்றொரு கன்னிகையை இவருக்கு மணம் செய்து வைத்தார்கள். 1930 முடிய தமையனுருடன் பாபநாசத்திலேயே இருந்தார் இதுவும், திருவிழாக்காலங்களில் 7 வருஷம் ஒருவித மனப்பற்றுதலுமின்றி சிவநாம கீர்த்தனங்கள் செய்து வந்ததின் நிமித்தம், பாபநாசம் சிவன் என்ற நாமதேயம் பிரஸித்தி.

அந்நாள் மஞ்சக்குடி தேவராஜ அய்யர் என்ற ஒரு பரம ரஸிகர் மூலம்



ஸ்ரீ பாபநாசம் சிவன்.

தமிழ்நாடெங்கும். வெளி மாகாணங்களிலும் சங்கீதம், ஹரிகதை, நாதஸ்வரம் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், பிடில் முதலியவற்றில், மகா நிபுணர்களான எல்லோருடனும் பூர்ண நட்புறவு பெற்றார் முக்கியமாக கோனேரி ராஜபுரம்ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் அவர்களின் சங்கீதக்கச்சேரிகளை விடாமல்கேட்டும், பெரும்பாலும் அவருடன் சேர்ந்திருந்தும், ராகங்களையும் பல கீர்த்தனங்களையும், தனிப் பாணியும், அழகும் சொரிக்க பாடும் திறன் சம்பாதித்துக்கொண்டார். பழகிப் பேசிக்கொண்டிருந்தாலே, கீர் நாடக சங்கீதத்தின் தனிச்சிறப்பைக் கற்பித்துத் தரக்கூடிய சிமிழி சுந்தரமய்யர், கிவளூர் ராமச்சந்திரய்யர் முதலியவர்களின் ஆசியையும், பாராட்டுதலையும் பன்முறை பெற்றார்.

1910-ல் க்ஷேத்ராடனம் செய்யப் புறப்பட்டது முதலே, எளிய தமிழில் புதிய வழியில் அழகிய பாடங்களை இயற்றிப் பாடினார் அவருடைய எல்லாக் கீர்த்தனங்களையும் போற்றி எழுதி வைத்தால் சுமார் 500 க்குக் குறையாது. 1930 முடிய தென்னாட்டில் பெரிய க்ஷேத்திரங்களில் சென்று, வீதிகளில் சிவ பஜனை செய்வதை நிறுத்தவில்லை. வறுமை வாழ்க்கையையே இன்பமாகக் கருதி, வாழ்க்கை நடத்தி வந்த இவரை, பேசும் படத்தில் குசேலராகத் தேர்ந்தெடுத்த ஸ்ரீ கே. சுப்ரமண்யத்தின் அறிவின் திறன் மெச்சத் தக்கது. சென்னையில் 4 வருஷ காலம் அஞ்ஞாதவாசம் செய்த சிவனை, 1933-ல் டாக்டர். வே, ராகவன் முருகதாஸா இருவரும் 'சீதா கல்யாணம்' என்ற கதைக்குப் பாடல்களை எழுதி, சொல்லிக் கொடுக்கும்படி செய்தார்கள் அதைத் தொடர்ந்து, ஸ்ரீ கே சுப்பிரமண்ய அய்யர், 'பவளக்கொடி' என்ற படத்திற்கு, பாட்டுகள் புனைந்தும், அதிலிருந்து தொடர்ச்சியாக, இன்றளவும் சற்றேறக்குறைய 100 தமிழ்ப்படங்களுக்குப் பாட்டெழுதியும், பக்த குசேலா, தியாகபூமி பக்த சேதா. குபேர குசேலா, என்ற படங்களில் நடித்தும் இருக்கிறார்.

கடைசியாக அவர் பிறந்த கிராமம், போலகத்திலுள்ள, சிவாலயத் திருப்பணி செய்தும் கும்பாபிஷேகம் நடத்தினார்

மேற்படியாரின் ஷஷ்டியப்தபூர்த்தி, சென்ற 24—9—50ல் வெகு விமரிசையாய் நடந்தது இவர் இன்னும் பன்னாள் நோயற்ற வாழ்வுடன் தமிழிசைப் பாடல்களைக்கொண்டு பட உலகிற்கும், தமிழ்நாட்டிற்கும் இயன்ற தொண்டு புரியுமாறும், பல கீர்த்தனை மாலைகளைக் கடவுளுக்குச் சூட்டுமாறும் நாம் இறைஞ்சுவோமாக.

'டோலக்' என்ற ஹிந்திப்படத்தில் மீனாவும் யசோதரா கட்ஜுவும்.

நமது பம்பாய்க் கடிதம்

சலியாது உழைக்கும் நார்கிஸ்

★

இந்தியாவின் பிரதம நடிகையான நர்கிஸ் தற்சமயம் கப வியாதியுடன் நோய் வாய்ப்பட்டு காய்ச்சலுடன் படுத்திருக்கிறாள். இப்பேர்ப்பட்ட நிலைமை அவள் அனேக படங்களில், ஒரே சமயத்தில், இரவு பகலாக, வேலை செய்து வந்ததால் உண்டாயிற்றென்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிய வருகிறது

நர்கிஸ், சென்ற வாரம், ஒரு நாள் முழுவதும் ஒரு ஸ்டுடியோவில் வேலை செய்துவிட்டு, அன்றிரவு ஈஸ்டரன் ஸ்டுடியோவில் தயாராகும் 'ஹல்சல்' என்னும் படத்தில் நடிக்கச் சென்றாள். இப் படம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. இப் படத்தில் விடியற் காலை 4 மணி வரையில் நடித்துவிட்டு, வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் இப் படம் கூடிய சீக்கிரத்தில் வெளி வருவதால், இப்பட முதலாளிகள் (டிலிப் குமாரும், கே. ஆஸிப்பும்) நர்கிஸ்ஸை மறு நாள் காலையிலும் நடிக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். படம் ஒருவித தாமதமின்றி முடியவேண்டுமென்று அவர்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதாக, நர்கிஸ் ஒப்புக் கொண்டாள்.

அன்று காலை, சரியாக நித்திரையில்லாததனால், மயக்கமென்று நர்கிஸ் புகார் செய்ததனால், டாக்டர் வரவழைக்கப்பட்டு. அவளை பரிசீலனை செய்யப்பட்டது பரிசோதித்த பிறகு நர்கிஸை காய்ச்சலும், இருமலும் இருப்பதால், அன்று ஷூட்டிங்குக்குச் செல்லவேண்டாமென்று டாக்டர் உத்தரவு போட்டிருந்தார். ஆனால், நர்கிஸ், தான் பட முதலாளிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டுவிட்டதால், டாக்டரின் புத்திமதியை மீறி ஜுரத்துடன் "ஹல்சல்" என்னும் படத்தின் ஷூட்டிங்குக்கு வந்து சேர்ந்தாள் அன்று மிகவும் முக்கியமான கட்டம் எடுக்க வேண்டும்.

நர்கிஸ், தனக்கு ஜுரமென்று ஒருவரிடமும் சொல்லாமல், 'மேக்-அப் ரூமில் போய் "மேக்-அப்" செய்துகொண்டிருந்தாள் தற்செயலாக அவளுடைய தமயன் அக்தர் ஹுஸேன், அங்குவரவே அவளுடைய நிலைமையைக்கண்டு டிலிப்குமாரிடம் சென்று, நர்கிஸின் தேக அசௌகரியத்தினால், அவளுடையபகுதிகளை அன்றே முடித்துக்கொண்டு. அவளை சாயங்காலம் ஐந்து மணிக்குமேல் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஒரு நடிகையின் தேக அஸவுகரியத்தினால். வேகமாக ஷூட்டிங்கு செய்து படத்தைக் குட்டிச்சுவராக்கமாட்டேனென்று டிலிப்குமார் சொல்லவே, அக்தர் ஹுஸேன் பட முதலாளிகளுக்குத் தெரியாமல், நர்கிஸ்ஸை 'மேக்—அப்" ரூமிலிருந்து பலவந்தமாக, வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்

வீட்டிற்கு வந்த பிறகு, நர்கிஸ்ஸின் காய்ச்சலும், இருமலும் அதிகமாகி விட்டது இப்பொழுது சற்று தேவலை. நர்கிஸ்ஸைப்பார்க்க ஒரு நாள் சாயங்காலம், மரீன் டிரைவில் இருக்கும் அவளுடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். உடல்மெலிந்து சோபை இழந்து, ஒரு குழந்தைபோல், ஒரு கட்டிலில்படுத்திருந்தாள். அதிக வேலையினால் உண்டான களைப்பு அவள் முகத்தில் பிரதி பலித்தது. இருந்தபோதிலும், அவளுடைய அழகும், வசீகரமும் கொஞ்சம்கூட குறையவில்லை

"சுவர் இருந்தால் தானே சித்திரம் எழுதலாம். ஆகையால், உங்கள் உடம்பைப் பார்த்துக் கொண்டால் தானே வேலை செய்யலாம்" என்று நான் புத்திமதி சொன்னதற்கு நர்கிஸ் பதிலளித்தாள், "நான் என்ன செய்வேன். நான் எத்தனையோ பட முதலாளிகளிடம், எனக்கு வேலை அதிகமிருக்கிறது, என்னால் அவர்கள் படங்களில் நடிக்க முடியாதென்று எவ்வளவு சொல்லியும், கொஞ்சம்கூட காது கொடுத்துக் கேட்காமல் நயவஞ்சகமாக, என்னிடம் உடன்படிக்கை செய்துகொண்டுவிடுகிறார்கள் நானும், தாக்ஷண்யத்திற்காக, அவர்களிடம் ஒத்துழைத்துவந்தேன். இனிமேல் அப்படிச் செய்யப்போவதில்லை சக்திக்கு மீறி இனிமேல், ஒருக்காலும் அனேக படங்களில் ஒரே சமயத்தில் நடிக்க ஒப்புக்கொள்ளமாட்டேன். எனக்கு பகவான் நல்ல புத்தி கற்பித்துவிட்டார்" என்று சொன்னாள்.

நர்கிஸ் இப்பொழுது நடித்துவரும் "டீடர்" 'அவாரா" "சாகர்" என்ற மூன்று படங்களின் "ஷூட்டிங்கும் தடைபட்டு நிற்கின்றன. இன்னும் மூன்று வாரங்கள் நன்றாக ஓய்வுஎடுத்துக்கொண்டு இப்பொழுது நடித்து வரும் படங்களில் நடித்து, முடித்துவிட்டு சில மாதங்கள் வரையில் ஒரு படத்திலும் நடிக்காமல், கண்காணாத இடத்திற்குப்போய் நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ள தீர்மானித்திருப்பதாக, நாகிஸ் என்னிடம் தெரிவித்தாள் நர்கிஸ். சென்ற ஒரு வருஷத்தில் பதினொன்று ('ஜான்பஹசான்", "பீஷ்மப் பீரிதிஞா" "ஜோகன்" "பிர் ஹாகிராத்" "ஆதிராத்" 'பாபூல்' 'பியார்" "பியார்கிபாதேன்" 'சோடி பாபி" "மீனா பஜார்" "ஹல்சல்") படங்களில் நடித்து முடித்திருக்கிறாள் இது வரையில் ஒரு நடிகையும், பன்னிரண்டு மாதத்திற்குள் பதினொன்று படங்களில் நடித்து முடிக்கவில்லை. இது ஒரு அருஞ்செயலே!

டி. மா. ராமச்சந்திரன்.

பாந்தவ்யம்

-ஜம்பு-

2

வீரராகவன் அவசரம் அவசரமாக ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். 'ஸார் போஸ்ட்' என்ற வார்த்தை அவனுக்குப் பராக்குக் காட்டிற்று. ஒரே எட்டில் வாசலுக்கு ஓடி வந்தான். தபாலை வாங்கிக்கொள்ள, கையெழுத்திலிருந்தோ,விலாசத்திலிருந்தோ யாரிடமிருந்து வந்திருக்கிறதென்று ஊகிக்க முடியவில்லை. ஆபீஸுக்குச் செல்ல வேண்டும் என்ற அவசரம் மேலோங்கவே சாவகாசமாக பார்த்துக்கொள்ளலாம் என்று உள்ளே திரும்பினான், கடிதம் எழுதினவர் யார் என்று ஊகிக்க முடியாததில் மனசில் குறுகுறுப்பு ஏற்பட்டது. பார்த்துவிட்டுத்தான் புறப்படுவோமே என்று உறையைக் கிழித்தான் நாலு வரி படிக்கு முன்னே அவனுக்குத் திகைப்பும் ஆச்சரியமும்தான் மேலோங்கின கடிதத்தின் தலைப்பிலிருந்த பெயரை மீண்டும் ஒரு முறை படித்தான். அட்வகேட் கல்யாண சுந்தரம் என்ற பெயர் அவனுக்குப் புதிசுதான் ஆனால் அவர் எழுதிய சமாசாரம்?......'கோமளம் கோமளம்'என்றுகூப்பிட்டுவிட்டு ஒரே மூச்சில் கடிதத்தைப் படிக்கலானான். அவனுடைய ஆத்திரமான குரலும் திகைப்புடன் பிரித்த கடிதமும் கையுமாக அவன் நிற்பதும் காண கோமளம் திடுக்கிட்டாள் சில தினங்களுக்கு முன்பு ஒரு நாள் அவனை இதே கோலத்தில் பார்த்த ஞாபகம் அவளுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் ஒரே ஒரு வித்யாசம்தான். அன்று அவனுடைய கையில் கடிதம் இல்லை. அதற்குப் பதிலாக பக்கத்தில் ஒரு புது மனிதர் நின்றுகொண்டிருந்தார். ஒரு வேளை அவரைப்பற்றிய செய்தி ஏதாவது இருக்கலாமோ என்று ஒரு 'குருட்டு எண்ணம்' தோன்றிற்று அவளுக்கு. அதற்குள் கடிதத்தைப் படித்து முடித்து விட்ட வீரராகவன் "இந்தா கோமளம், படிச்சுப் பாரு- மாமா கடைசிலே நம்மை ஏமாற்றி விட்டார்" என்றான் அவனுடைய குரலில் ஏமாற்றத்தின் எதிரொலி யிருந்தாலும் வருத்தம் தொனிப்பது தெளிவாக இருந்தது.

சுமார் ஒரு மாசத்துக்கு முந்தி, ஒரு நாள் வீரராகவன் அவசரமாக ஆபீஸுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். சாப்பிட உட்காரும் மட்டும் அவனுடைய போக்கு மந்தமாகத்தான் இருக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே எங்கிருந்தோ அவசரம் வந்து பிடித்துக்கொள்ளும். லபக் லபக் கென்று நாலுவாய் சாதம் எடுத்துப்போட்டுக்கொண்டு, ஒற்றைக் கையை கோட்டுக்குள் நுழைத்துக் கொண்டு கோமளம் மடித்துக்கொடுக்கும் வெற்றிலையை கையில் இடுக்கிக் கொண்டு வாசலுக்கு ஓடுவான் சகுனம் பார்ப்பதற்காக இரண்டு விநாடி தயங்கி நிற்பான் இதற்குள் அவனை வழியனுப்பும் பாவனையில் கோமளமும் வாசலுக்கு வந்துவிடுவாள்.

அன்றும் எல்லாம் மாமூல்படி நடந்தது. வீரராகவன் வாசலுக்கு வந்த சமயம் புறங்கையால் நெற்றியை மறைத்துக்கொண்டு வீட்டு இலக்கத்தைப்பார்த்துக்கொண்டு ஒரு கிழவர் நின்றுகொண்டிருந்தார். அவருடைய பார்வையும் தோற்றமும் வீரராகவனை வசீகரித்துவிட்டது கவலையினால் வரி வரியாக அவருடைய முகத்தில்விழுந்த சுருக்கமோ அல்லது அவருடைய தீட்சண்யமான பார்வையோ அவனை இழுத்துவிட்டது யார் வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"ஏண்டா அப்பா வீரராகவன் வீடு இதுதானே?" என்று கேட்டார் கிழவர்

வீரராவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது அவருடைய குரலில் இருந்த காம்பீர்யம் அவனை அசக்கி விட்டது. ட'காரப்பிரயோகத்தில் அவனைக்கூப்பிடும்படி பந்துக்களோ. வேறு நெருங்கிய நண்பர்களுடைய வீட்டு மனிதர்களோ அவனுக்கு எவருமே கிடையாது. அவர் யார் என்று கேட்டுக்குசலப் பிரச்னம் செய்துகொண்டிருக்கும் அவகாசமும் அவனுக்கு இல்லை. பதில் சொல்லாமல் தட்டிக் கழித்துவிட்டுப்போய்விடவும் மனம் இல்லை "எந்த வீரராகவன்?" என்று கேட்டுக்கொண்டே கையிலிருந்த வெற்றிலையை வாயில் சுருட்டிப் போட்டுக்கொண்டான்.

"வத்திராயிருப்பு வீரராகவன். இங்கே ஏதோ பாங்கியில் இருக்கிறானாம்" என்றார் கிழவர்.

"நீங்கள் யார்?" என்று கேட்டான் வீரராகவன் அவருக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல்

"நானா ...உம்...நானா? அவனுக்கு ஏதோ தூரத்துப்பந்து. டாக்கா ராமுன்னா கேள்விப்பட்டிருக்கிறாயோ?" என்றார் தயக்கத்துடன்.

அவர் யார் என்று அவனுக்குப் புரியவில்லை.

"நீங்கள் கேட்கும் வீரராகவன் அடியேன் தான் என்ன விசேஷம்?" என்றான்- வீரராகவன். மறுபடியும் புருவத்தின் மீது கையை வைத்து மறைத்துக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தார் கிழவர். "அடே நீ தானா. என்னை அடையாளம் தெரிகிறதோ உனக்கு? ஊம்...எப்படித் தெரியும்... எத்தனையோ வருஷங்களாச்சு! நான்... நான்தான் டாக்கா ராமு. அங்கே நடந்த சமாசாரமெல்லாம் பேப்பர்லே வாசிச்சிருப்பாயே..."

உணர்ச்சி வசப்பட்டு அவர் மேலே பேசமுடியாமல் தயங்கினார். ஓரக் கண்ணில் தேங்கிய நீரையும் வீரராகவன் கவனிக்காமல் இல்லை. அவரை அனுப்புவதா வேண்டாமா என்று ஒரு நிமிடம் சிந்தித்தான். "யாரோ எவரோ—அவரை இருக்கச் சொல்வானேன்" என்ற நினைப்புத்தான் மனசில் குதித்தெழுந்தது.

டாக்காவிலிருந்தேன் என்று அவர் சொன்னதுமே. அங்கு நடந்த கோர கிருத்யங்கள் அவன் கண்முன்னே வந்து நின்றன. 'நொந்துபோன மனிதன், அவருக்கு என்ன உதவி

வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் அனுப்பக்கூடாது—' இப்படி ஒரு எண்ணம். அவருக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை அவன் "கோமளம் கோமளம்" என்று கூப்பிட்டான் கோமளம் வாசற் கதவுக்குப் பின்னுலேதான் நின்று கொண்டிருந்தாள். தெரியாத மனிதன் யாரோ வாசலில் நிற்கவே. ஒதுங்கி கதவு மறைவில் நின்று சம்பாஷணையைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

கிழவர் உள்ளே திரும்பிப் பார்த்தார் அதற்குள் கோமளம் வெளிப்பட்டு விடவே கோமளம், மாமா வந்திருக்கிருர் ஸ்நாநம் செய்யும்படி செய்து சாப்பிடச் சொல்லு, நானும் சீக்கிரம் வந்து விடுகிறேன் என்ருன் வீரராகவன். பிறகு 'மாமா, இருங்கோ சாயந்தரம் சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம் என்று வீதியில் இறங்கி நடந்தான். கிழவருடைய முகம் பிரகாசமடைந்தது. "பரம்பரை குணம்டா! எப்படியோ என்னை அடையாளம் கண்டுகொண்டாயே" என்று சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

கோமளத்துக்கு ஒரே திகைப்பு வீரராகவனுக்கு மாமா என்று முறை சொல்லக்கூடிய பந்துக்கள் எவருமே கிடையாது என்று அவனே பலமுறை சொல்லியிருக்கிருன். பால்யத்திலேயே பெற்றோர்களைப் பறிகொடுத்துவிட்ட அவனை ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவன் எடுத்து வளர்த்தான். வீரராகவனுடைய உத்தரவுக்கேற்ப அவள் கிழவரை உள்ளே அழைத்துச் சென்ருள். அவளுடைய உபசாரத்தில் ராமசாமி—அதுதான் அவருடைய பெயர்—மனங்களித்துப்போனுர்.

சில நிமிஷங்களுக்குள்ளேயே பல வருஷங்கள் பழகினவரைப்போல அவர் ஒட்டிக்கொண்டார்.' என்னுடைய பெண்ணுக்கு உன்னோடொத்த வயசுதான் அம்மா. கல்கத்தாவிலே நடந்ததே ரகளை, அப்போ அவள் குடும்பமே பூண்டத்துப் போச்சு' சிரித்துக்கொண்டுதான் பேசினுர் என்ருலும் சோகத்தின் எதிரொலி அதில் தெரியாமல் இல்லை. 'அம்மா, பந்துக்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இந்த நிமிஷத்தில் நீயும் வீரராகவனுர்தான் அட அசடே, என்னைத்தான் சொல்லிக்கிறேன் அம்மா கோமளம்! உனக்கு எத்தனை குழந்தைகள் பள்ளிக்கூடம் போயிருக்கிருர்களா? வீரராகவனோட அண்ணு எங்கே இருக்கிருன்?' இப்படியாக அவர் கேள்வி மேல் கேள்வியாகப் போட்டுக்கொண்டே போனுர்.

கிட்டத்தட்ட குடும்ப விவகாரங்களை ஒட்டியே அவருடைய பேச்சும் இருந்ததால், கோமளமும் அவருக்குத் திருப்தியாகவே பதில் சொல்லி வந்தாள் சாயந்திரம் வீரராகவன் வீடு திரும்பும் வரையில் கோமளத்துடன் வாய் ஓயாமல் ராமசாமி பேசிக்கொண்டுதானிருந்தார் டாக்காவில் வாழைக்காய் கிடைக்காது. வங்காளிகளுக்குமீன் என்ருல் உசிர்-என்று என்ன என்னவோ விஷயங்களைச் சொல்லி வந்தார். கோமளத்துக்கு மட்டும் அவர் யார், வீரராகவனுக்கும் அவருக்கும் என்ன பாந்தவ்யம் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற துடிதுடிப்பு "நீங்கள் வத்தராயிருப்பிலிருந்து கிளம்பி எத்தனை வருஷம் இருக்கும்?" என்று ஒரு கேள்வியைப் போடுவாள் கோமளம்.

"உம், இருபது இருபத்தைஞ்சு வருஷம் இருக்கும் அம்மா, இப்பத்தான் அங்கே போனேனே ஊரே மாறிப் போச்சு. நம்ம மனுஷாள்னு சொல்லிக்க எவருமே காணேம். நீங்க இரண்டு பேரும் இங்கே இருக்கிறதைக் கண்டு பிடிக்க முடிஞ்சுதே அது ஒண்ணுதான் லாபம் நல்ல வேளை உங்களைக் கண்டு பிடித்தேன் இல்லாவிட்டால் ஆவடிக்கோ ஹைதராபாத்துக்கோ போக வேண்டியதுதான். என்பார் ராமசாமி.

"ஆவடியில் யார் இருக்கிருர்" என்று கேட்டாள் கோமளம் அங்கே இருக்கிற பந்துக்களைப்பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று ஆசையில்,

"ஆவடிலே சர்க்கார் விடுதிதான் இருக்கு அம்மா என்னைப் போல அனுதைகளுக்கு சர்க்கார் விடுதிதானே போக்கிடம். அனுதென்னு சொன்னேன். சர்க்கார் வைச்சபேரு அகதி அம்மா. அவன் காட்டற இடத்துக்கு போகணும் இல்லாவிட்டால் நிர்க்கதிதான். நல்ல வேளை உங்களைக் கண்டுபிடித்துவிட்டேனே" என்பார் கிழவர்.

இப்படியாகச் சுற்றிச் சுற்றிதான் அகதியென்பதையும் தன்னுடைய உறவினர் விரராகவனும் கோமளமும் தான் என்பதையும் பேச்சுக்குப்பேச்சு சொல்லிக்கொண்டு வந்தாரே தவிர கோமளத்தினுல் வேறே ஏதும் விசாரித்துத் தெரிந்து கொள்ள முடியவில்லை எப்படியோ அவளுக்கும் அவருடைய பேச்சும் பாவமும் பிடித்துப் போய்விட்டன.

3

வீரராகவனுக்கு ஆபீஸில் வேலையே ஓடவில்லை அந்தக் கிழவர் யாராக இருக்கக்கூடும் என்று சிந்திப்பதில்தான் புத்தி சுழன்றுகொண்டிருந்தது கூடுமானவரையில் தனக்குத் தெரிந்தவர்களையும் அவர்களுடைய பந்துக்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தான். இனம் தெரியவில்லை. சே என்ன பைத்தியம் நான்! இனம் தெரியாத மனிதனை பெயர் சொல்லி அழைத்ததற்காக வீட்டில் தங்கச் சொல்லிவிட்டேன்" என்று அலுத்துக்கொண்டான் அதற்கு மேல் அவனுக்கு வேலை ஓடவே இல்லை. அவசரம் அவசரமாக வீடு திரும்பினுன் வீட்டு வாசலில் கோமளம் நின்றுகொண்டிருந்தாள் வாசலில் நின்றவாறே அவன் "அந்தக் கிழவர் எங்கே?" என்று படபடப்புடன் கேட்டான். கோமளத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

'உங்க மாமாவையா? இப்போத்தான் எங்கேயோ போனுர்?" என்ருள் நிதானமாக.

"மாமா—மண்ணுங்கட்டி—" என்று முணு முணுத்துக்கொண்டான் வீரராகவன்.

கோமளத்துக்கு என்ன பேசுவது என்று புரியவில்லை அவனுடைய பேச்சும் போக்கும் விசித்திரமாகவே இருந்தன என்ன விசேஷம் என்று கேட்டுக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்து உள்ளே நுழைந்தாள் அவளும்,

உள்ளே வந்து உட்கார்ந்த பிறகுதான் வீரராகவன் மனசைச் சாந்தப்படுத்திக்கொண்டான். "யோசித்து யோசித்துப் பார்த்தேன். அந்தக் கிழவர் யார் என்றே புரியவில்லை இன்னிக்கி முழுக்க இங்கே டிகானு போட்டுவிட்டாரே என்ற கவலை... அவனுடைய பேச்சு முடிவதற்குள் கோமளம் குறுக்கிட்டாள் 'எனக்குத் தெரியும் உங்களுக்கு ஆள் நிகா புரியல்லேன்னு ரொம்ப பாந்தமாக நீங்கள் அவரை இருக்கச் சொல்லி விட்டுப் போனேளேன்னு நானும் அவருக்கு உபசாரம் செய்தேன்." என்ருள் 'பேஷ் பர்த்தாவுக்கு ஏற்ற பத்தினிதான்" என்று சிடுசிடுத்தான் அவன்.

'எதுக்கு கோபப்படரேள் உங்களுக்கு மாமாதான் அவர் உங்க அண்ணுவைப்பத்தி விசாரிச்சார் இவர் டாக்காவிலே தான் இருந்தாராம். பாகிஸ்தான் ஏற்பட்ட அப்புறம்கூட



துணிச்சலா அங்கே இருந்தாராம் பாவம்! ஒருநாளைக்கு காலிகள் வீட்டுக்குள்ளே நுழைஞ்சு......

"போதும் போதும், உன்னை அழவச்சுட்டாராக்கும் டாக்காவிலே இருந்தேன்னு சொல்லறப்போவே ஏதோ சோகக்கதைதான் சொல்லுவார்னு நினைச்சேன் அவருடைய முகம்தான் என்னை இழுத்தது".

"சோகமா, எப்படிச் சொல்லட்டும்? கேட்கறத்துக்கே சகிக்கல்லே எல்லாரையும் பறிகொடுத்துட்டு கல்கத்தாவுக்கு வந்தாராம். அங்கே அவருடைய பொண இருந்தாளாம் நொந்துபோன மனுஷன் இங்கே வந்தபோது குட்டிச்சுவர்தான் இருந்ததாம் கையிலே இருந்த காசை வைச்சுண்டு இரண்டு நாள் ஊரிலே சுற்றினுராம் அப்புறம் அகதி நிவாரணக் கமிட்டி அவரை வத்திராயிருப்புக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து கைச் செலவுக்கும் பணம் கொடுத்து அனுப்பினுளாம். வத்திராயிருப்புலேயாரு இருக்கா? என்னவோ சொந்த ஊர் என்ருர். அவர் ரயிலேத்தி விட்டுட்டா? ஊருக்கு போய் பார்த்தா யாருமே இல்லை. அப்போத்தான் உங்க ஞாபகம் வந்ததாம் நேரே இங்கே புறப்பட்டு வந்துட்டாராம்,"

அவருடைய கதையைக் கேட்டு வீரராகவனும் மனங் கசிந்து போனுன்.

ஆனுல் தனக்குப் பந்துவாக அவரை ஏற்றுக்கொள்ள அவனுல் முடியவேயில்லை. சால் சாப்புச் சொல்லி அவரை அனுப்பிவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டான் அதைப் பற்றிக் கோமளத்திடம் சொல்ல ஆரம்பிக்கும் போதே "வீரராகவா" என்று கூப்பிட்டுக்கொண்டே அந்தக் கிழவர் உள்ளே நுழைந்தார்.

"வாங்கோ மாமா" என்ருன் வீரராகவன் தன்னை மறந்து, அவர் கூப்பிட்ட பாணியைக் கண்டு கோமளம் ஆச்சரியப்பட்டாள் ரேஷன் காலத்தில் அனுவசியமாக ஒரு மனிதனை வீட்டோடு வைத்துக்கொண்டு சாப்பாடு போடுவதை தவிர்க்க வேண்டி வீரராகவன் பந்துத்துவத்தை மறைக்கிருனே என்ற சம்சயம்கூட அவள் மனத்தில் எழுந்தது அப்போது.

கிழவர் வந்து அவனுடைய பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார் "இப்பத்தான் ஆபீசிலிருந்து வருகிருயா? சொக்காயைக்கூட அவிழ்க்கல்லேயே! ஏம்மா கோமளம், இவனுக்குக் காபிகூட கொடுத்தாயோ இல்லேயோ? என்னமோ சுவாரஸ்யமா பேசிக்கிண்டே இருக்கேள் நான் வந்துட்டேன் குறுக்கே' என்ருர் சிரித்துக்கொண்டே,

கோமளத்துக்கு நாணத்தால் முகம் சிவந்தது கிழவர் ஞாபகப்படுத்தின பிறகுதான் வீரராகவன் காப்பி சாப்பிடவில்லை என்பதே அவளுக்கு ஞாபகம் வந்தது. விருட்டென்று சமையலறைக்குள் ஓடிப்போய் காபியை எடுத்துக்கொண்டு வந்தாள் பார்த்தாயா! நான் சொன்னது சரியாப் போச்சு! பேச்சு ஸ்வாரஸ்யம்! காத்தாலே போன ஆம்பிடையானைக் காணுமே என்று கண் பூத்துப் போச்சு பார்த்ததும் ஆனந்தம் தன்னை மறக்கடிச்சுடுத்து ஏண்டாப்பா எம் மருமான் வட வடென்று இருக்கானேன்னு பார்த்தேன் இப்படிப் பட்டினி போட்டா!''

மூன்று பேரும் சிரித்தார்கள்,

4

ராமசாமி வீரராகவன் குடும்பத்தில் ஐக்கியமாகி பத்து பதினைந்து தினங்களுக்கு மேலாகிவிட்டன. அவர் பழகுவதும் பேசுவதும் பார்க்கப் பார்க்க வீரராகவனுக்கு அவர் மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது கோமளத்துக்கோ அவருடைய சோகக் கதையே அவர்பால் அன்பூறச் செய்து விட்டது. "நமக்குத்தான் வீட்டில் பெரியவர்கள் என்று இல்லை. இருவரும்தான் அனாதை. வீட்டோடு இருந்து விட்டுப் போகட்டுமே''என்று தான் எண்ணினான் வீரராகவன்.

ஆனால் கோமளம் வேறுவிதமாகவே நினைத்தாள். அந்தக் கிழவர் புதிதாகையால், அவருடைய குண விசேஷங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலோ, ரேஷன் காலம் என்ற நினைப்பிலோதான் வீரராகவன் அவரைத் தன்னுடைய பந்து என்று சொல்லிக் கொள்ளத் தயங்குகிறான் என்று நினைத்தாள். இருந்தாலும் அவளுக்கு அவர் மீது பாசம் ஏற்பட்டு விட்டது.

கிழவரும் சும்மா இருக்கவில்லை பல வருஷங்கள் பழகினவர்போலவே நடந்து கொண்டார் காலையில் எழுந்ததும் மார்க்கட்டுப் போய் வருவார் பிறகு கோமளத்துக்கு ஒத்தாசையாக சமையலறையில் 'வளைய' வருவார். கோமளத்தின் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வருவார் மத்தியான நேரத்தில் அவர் ஏதாவது படித்துக்கொண்டிருப்பார். சாயந்திரம் மறுபடியும் வீட்டுக் காரியங்களில் பங்கெடுத்துக் கொள்வார் விளக்கு வைத்ததும் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பார். சாப்பாடானதும் குழந்தைகளை மடியில் போட்டுக் கொண்டு கதை சொல்லித் தூங்க வைப்பார் அவர் வந்த பிறகு கோமளத்துக்கு ஓய்வு கிடைத்தது. குழந்தைகளும் அவரிடம் 'தாத்தா தாத்தா' என்று ஒட்டிக் கொண்டன.

திடீரென்று ஒருநாள் அவர் கீழே படுத்துவிட்டார் லேசாக ஜுரம் அடித்தது. கோமளம் பதறிப் போனாள். அவர் 'கூடமாட' வீட்டில் நடமாடாததனால் வீடே வெறிச்சென்று இருப்பதுபோல்தோன்றிற்று அவளுக்கு. பத்துப்பதினைந்து நாள்களுக்குள் அவளுடைய மனசில் பலமானதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டார் அவர் 'வீரராகவனிடம் கூடச் சொல்லாமல் அவள் டாக்டரை வரவழைத்தாள்.

"கோமளம் என் பெண் ஜாடை உனக்கு இருக்குன்னு வந்த அன்னிக்கு சொன்னேனே! ஞாபகம் இருக்கோ?'' என்றார் கிழவர் டாக்டர் வந்து போனதும்.

"ஆமாம் மாமா இப்போ என்ன அதுக்கு?'' என்றாள் கவலையுடன்.

அவகூட இத்தனை வருத்தப்படவில்லை வீரராகவன்தான். இரத்த பாசம் ஆனா நீ எனக்காக......

போறும் போறும் உங்க ஸ்தோத்திரம் என்று கடிந்துகொண்டாள் கோமளம்.

''உள்ளதைத்தானே அம்மா? சொல்றேன், இந்தக் காலத்திலே தாயார் தகப்பனாரையே கவனிக்க மாட்டேங்கரா, நான் யாரோ அனாதை'' அவரால் மேலே பேச முடியவில்லை,

கோமளத்தின் கண்களும் கலங்கின.

கிழவருக்கு ஜுரவேகம் அதிகரித்து விட்டது. அவர் அடிக்கடிப் புலம்ப ஆரம்பித்தார் கோமளம் பக்கத்திலிருந்து சிசுருஷை செய்தாள் வீரராகவனுங்கூட இரண்டு மூன்று தினங்கள் லீவு போட்டுவிட்டு கிழவருடைய பக்கத்திலேயே இருந்தான். "யாரோ அனாதை நான்! எனக்கு பாக்கியம் இருக்குபோலிருக்கு—ராகவா அதுதான் கடைசி காலத்தில் உங்களிடம் கொண்டுவந்து சேர்த்து விட்டான் பகவான்'' என்பார் கிழவர்,

இது என்ன பேச்சு மாமா என்னை ஞாபகம்வைச்சுண்டு வந்தேளே, அதுவே எனக்குப் பெருமைதானே. இது கூட நான் செய்யாட்டா என்ன மனுஷன் என்பான் வீரராகவன்.

டாக்டருடைய மருந்து பலத்தை விட, வீரராகவனும் கோமளமும் காட்டிய அன்பினால்தான் அவருடைய உடம்பு தேறியது ஆனாலும் அவரால் முன்போல ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை

'கோமளம் நான் தண்டச்சோற்று ராமனாகிவிட்டேன் அம்மா! சாப்பிட ர சாப்பாட்டுக்கு சரீர உழைப்பாவது படலாம் என்று எண்ணினேன் அதுக்கும் பங்கம் வந்துவிட்டது'' என்று வருத்தப்படலானார் கிழவர்.

"மாமா, இப்படிக் கவலைப்படலாமா? நீங்க வரத்துக்கு முன்னாலே ஆத்துக் காரியம் நடக்காமலா இருந்தது? இன்னும் நாலு நாளிலே உடம்பு தேறிவிடும்'' என்று தைரியம் கூறுவாள் கோமளம்.

எப்படியோ கிழவருக்குப் பழைய உத்சாகம் வரவேயில்லை கவலை தோய்ந்த முகத்துடன் அவர் கட்டிலில் படுத்துக் கிடந்தார். வீரராகவனுடைய ஆறுதல் வார்த்தைகள்கூட பயனளிக்கவில்லை ஒரு வாரத்துக்கெல்லாம் அவர் கண்ணை மூடிவிட்டார்...

5

எங்கிருந்தோ வந்தார். எல்லாருடைய பாசத்தையும் பெத்துண்டு போயிட்டார்'' என்று வருந்தப்பட்டுக் கொண்டாள் கோமளம். ''ஆமாம், அவருடைய குணத்துக்குத்தான் நாம் அடிமையாப் போனோம் இப்பக்கூட நினைத்துப்பார்க்கிறேன். அவர் யார் என்றே புரியவில்லை ஆனாலும் அவரும் மாமாவாக நடித்துவிட்டுச் செத்தார். நானும் மருமகனாக நடித்துவிட்டேன்'' என்றான் வீரராகவன்.

'நடித்தீர்களா?' என்றாள் கோமளம்.

"ஆமாம் கோமளம் எனக்குப் பந்துக்கள் எவருமேகிடையாது என்று உனக்குத்தான்தெரியுமே, அவருடைய சோகக் கதையும் தோற்றமும் என்னை வசீகரித்துவிட்டன நெருங்கிப்பேசின பிறகுதான் எனக்குப் பரிதாபம் அதிகமாயிற்று அவரை வெளியேற்றிவிட வேண்டும் என்று தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தேன் ஆனால் நிமிஷத்துக்கு நிமிஷம் அவர் நம்மை ஆகர்ஷித்துக்கொண்டிருந்தார். மனப்பூர்வமாக, நம்மை தம்முடைய பந்துக்கள் என்று எண்ண ஆரம்பித்துவிட்டார் நொந்துபோன உள்ளம் நமக்கும் ஒத்தாசையாக இருக்கிறார். இருக்கட்டுமே என்றுதான் பேசாமல் இருந்தேன். அவரைத் துரத்திவிடுவது சுலபம் தான் அனாதை என்று அவர் எண்ண ஆரம்பித்தால் உடனே மனசு உடைந்து பிராணனை விட்டுவிடுவார் அத்தனை பலவீனமானது அவருடைய மனசு.

கோமளம் வாயைத் திறக்கவேயில்லை. அவருக்கு மனச் சாந்தியளிக்க வீரராகவன் வேஷம் போட்டான் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ள அவளால் முடியவேயில்லை.

''எப்படியோ புதையல் கிடைச்ச சொத்து பறிபோனதுபோலாச்சு'' என்று பொறுமினாள் கோமளம் கொஞ்ச நேரம் பொறுத்து.

"ஆமாம், அத்தனை வாஞ்சையாகப் பழக யாருக்கும் வராது இடத்தைப் பிடிச்சுக்க அவர் இப்படிப் பழகுறோன்னுகூட நான் நினைச்சேன் முதல்லே'' என்றான் அவன்

'உங்களுக்கு எப்பவும் சந்தேகம் தானே.'' என்று கடிந்து கொண்டாள் கோமளம் அவர்களுடைய சம்பாஷணை சட்டென்று முற்றுப் பெற்றது இருவர் மனசும் வருத்தத்தால் குமுற ஆரம்பித்தது மணியைப் பார்த்துக்கொண்டே வீரராகவன் ஸ்நானம் செய்யச் சென்றான், பிறகு வழக்கம் போல சாப்பிட உட்கார்ந்தான் அவசரம் அவசரமாக 'அள்ளிப் போட்டுக் கொண்டு 'கோட்டை மாட்டிக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்தான். தபால்காரன் கொடுத்த கடிதாசைப் பிரித்ததும் அவன் ஆச்சரியப்பட்டுப் போனான் ஆனால் அந்தக் கடிதங்களைப் படித்ததும் கோமளத்துக்கு துக்கம் பீறிக்கொண்டு வந்தது புடவைத் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அந்தக் கவருக்குள் ஒன்றுடன் ஒன்று ஊசி குத்தி இரண்டு கடிதங்கள் இருந்தன. ஒன்று அட்வகேட் வீரராகவன் எழுதியது. மற்றது கிழவர் ராமசாமி எழுதியது கடிதங்களின் வாசகம் வருமாறு,—

வீரராகவன் அவர்களுக்கு,

தம்முடைய கடைசி காலத்தில் தம்மைப் பராமரித்துக் காப்பாற்றியதற்காக தம்முடைய சொத்துக்களை உம்மிடம் சேர்த்துவிடுமாறு டாக்கா ராமு என்ற ராமசாமி என்னை நியமனம் செய்திருக்கிறார். அவருக்கு கல்கத்தாவில் சுமார் முப்பதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு வீடும் கல்கத்தா பாங்கி ஒன்றின் டாக்கா கிளையில் சில ஆயிரம் ரூபாய்களும் இருப்பதாகத் தெரிகிறது பாங்கிக் கணக்குகளை அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன் கல்கத்தாவிலுள்ள வீட்டை நீங்கள் இஷ்டப்பட்டால், உங்களுடைய அனுமதிபெற்று வீட்டு வாடகையை வசூலித்து அனுப்பிக்கொண்டு இருக்கும்படியும், இல்லாவிட்டால் மேற்படி வீட்டை விற்று ரொக்கத்தை உங்களிடம் சேர்த்துவிடும்படியும், டாக்கா ராமு எனக்கு அனுமதிகொடுத்திருக்கிறார். சில தினங்களுக்கு 'முன்பு தாம் தேக அசௌக்கியப்பட்டிருப்பதாகவும், அநேகமாகப் பிழைப்பது துர்லபமென்றும், அவர் கடிதத்தில் குறிப்பிட்டுவிட்டு, தம்முடைய கடிதத் தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அடுத்த கடிதம் வராவிட்டால், தாம் இறந்து விட்டதாகக் கருதி மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படியும் எழுதியிருந்தார்.

அவர் குறிப்பிட்ட தவணைக்குள் கடிதம் இல்லாததால் இந்தக் கடிதம் எழுதுகிறேன் உங்களுடைய கடிதம் பார்த்து மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

இத்துடன் டாக்கா ராமு விரும்பியபடி, அவர் எழுதிய கடிதம் ஒன்று அடக்கம் செய்திருக்கிறேன்.

இப்படிக்கு
கல்யாணசுந்தரம்

வக்கீலுடைய கடிதத்தைவிட கிழவருடைய கடிதம்தான் வீரராகவனை உலுக்கிவிட்டது. அந்தக் கடிதம் வருமாறு:

அன்புள்ள ராகவனுக்கு,

ஆசீர்வாதம் என்னுடைய தூரபந்து சீமாச்சுவின் குமாரன் வீரராகவனைத் தேடிக்கொண்டுதான் நான் அங்கு வந்தேன். தற்செயலாக நீயும் வத்திராயிருப்புவாசியாக இருக்க நேரிட்டதில் இத்தனை குழப்பமும் நேரிட்டு விட்டது. நீ என்னுடைய பந்து வீரராகவனாக இருந்தாலும் அல்லாவிட்டாலும் ரத்தபாசத்துக்கு மிஞ்சி பழகிவிட்டாய் உன்னை மிஞ்சிவிட்டாள் உன் மனைவி கோமளம் என்னுடைய கடைசி காலத்தில் இத்தனை சந்தோஷமும், நிம்மதியும் எனக்குக் கிடைக்கும் என்றே நான் எண்ணவில்லை அது பகவத்கிருபைதான் நீங்கள் செய்ததற்குப் பிரதியுபகாரமாக நான் என்ன செய்தாலும் தகும் கோமளத்தை என் பெண் என்று முகஸ்துதியாக அன்று சொன்னேன். அவள் என்னிடம் வைத்த பாசம் அதியாக இருந்தது என் குடும்பமும் நான் சேர்த்த சொத்தும் அழிந்துவிட்டன என் மனசில் உங்களுடைய அன்புதான் நிறைந்திருக்கிறது. இதற்கு ஈடுகட்ட முடியாது என்றாலும், என்னிடமுள்ள கொஞ்சம் சொத்தை உங்களிடம் ஒப்பித்துவிடுமாறு என் வக்கீலிடம் சொல்லியிருக்கிறேன், அவற்றின் மதிப்பும் பொறுப்பும் என் காலத்துக்குப்பிறகு உங்களிடம் அவர்சொல்வார். ஆசீர்வாதம் அனேகமாக இதுவே என் கடைசி கடிதமாக இருக்கும்.

—ராமஸ்வாமி.



7

தன் குஞ்சு பொன் குஞ்சு

வீட்டுப் பெருமை என்னைவிட காந்திமதிக்கு அதிகமாக இருந்தது முன் பக்கத்தில் நம்முடைய ராஜ்யபாரம் பின் பக்கத்தில் அவளுடைய ராஜ்ய பாரம் இந்த ராஜ்ய எல்லைக்குள் விரோதிகள் கண்ணோட்டம் வந்துவிட்டது படிப்படியாக இதை வர்ணித்தாக வேண்டும் அதாவது அக்கம் பக்கத்தார் தொல்லையைச் சொல்வதற்குள் வேறு பல ஆபத்துக்கள் வந்து நின்றன,

முன் பக்கத்திலே தளதளவென காய்கறிகளும் பூஞ் செடிகளும் உறவாடி நின்றன இதைக் கெடுப்பதற்கெனவே, திருட்டு மாடுகள் பல நடமாடத் தொடங்கியதோடு முனிசிபால்டியாரும் வந்துவிட்டார்கள் நான் வீடு கட்டியபோதும் தோட்டம் போட்டபோதும் அவர்கள் அனுமதியில் நடை பெற்ற விஷயங்கள். பயிர் பலன் தரும் போது, கடன்காரன் மகளுக்குச் சாக்கு எடுத்துக் கொண்டு வருகிற மாதிரி ரிமாண்டு நோட்டீஸ்கொண்டு வந்தான் நோட்டீஸ்கொண்டு வந்ததில். நிலாமுற்றத்திலே குடியிருக்கும் வீட்டுக்காரராகிய நீர் என்றிருந்தாலும் 37-ம் நம்பர் வீட்டிலே குடியிருக்கும் நீர் என்று ஆரம்பித்திருந்தது நோட்டீஸ்

முனிசிபல் வேலையாள் தலையைக் கண்டதும் எமதூதனைக் கண்ட நோயாளிபோல நடுங்கினேன் 'ஏண்டாப்பா முனிசிபால்டிக்கு வரி கொடுக்கிறது நல்ல பழக்கம் அதை நீ கைப் பிடிக்கவில்லையா?' என்று நீ இரங்காயெனில் கேட்டான். வெந்த புண்ணில் வேலெறிகிறதும், நொந்த புண்ணில் சுடும் எண்ணெய் விடுவதும் அவனது தொழில்கள்.

'வரி அழுதாச்சு'

'வரி ஒரு தரம் அழுதால் போதுமா? முறை வைத்து அழுவதுபோல் அடிக்கடி அழவேண்டாமோ?'

'நீங்க ரெண்டு பேரும் அப்பறம் கட்டிகிட்டு அழுங்க நோட்டீஸ் பெற்றுக்கொண்டதற்கு ஒரு கையெழுத்து நாட்டுங்க' என்றான் சேவகன். அவன் அருகாக வந்தபோது அடித்த மணம் இருக்கிறதே அப்பப்பா. அவன் வைத்திருந்த நோட் புஸ்தகத்தின் மணமா, இல்லை மேலே குறுக்கு வாட்டில் போட்டிருந்த டவாலியின் மணமா என்று தெரியவில்லை டவாலிப்பட்டையில் அழுக்கு அவ்வளவு ஏறியிருந்தது.

நான் நோட்டு புஸ்தகத்தில் நோட்டீஸ் பெற்றுக் கொண்டதற்கு கையெழுத்துப் போட்டுவிட்டு நோட்டீசை எடுக்கப்போனால். சில கோயில்களில் பக்தர்கள் பிரசாதம் கொண்டுவரும்போது ராம பக்தர் லபக்கென பாய்ந்து அடித்துக்கொண்டு போகுமே, அப்படி எடுத்துக்கொண்டான். படிக்க ஆரம்பித்தான். ஐந்தாம் வகுப்பு மாணவன் ராகம் போட்டு படிப்பதுபோல

"இதனால் 37-ம் நம்பரில் குடியிருக்கும் வீட்டுக்காரராகிய நீர் முனிசிபல் சட்டம் பி ஸி கோ 7-2, பி ஷரத்து பிரிவின்படியும் 13 ஏ ஆக்டுபடியும் புறம்போக்கு நிலத்தில்.........

நீ இரங்காயெனில் கற்பனையாக சரடுவிடுகிறான் இல்லை. அதைத்தான் படிக்கிறான்? "டேய் புறம்போக்கு" என்றேன். காந்திமதி முனிசிபல் ஆள் வந்ததில் ஏதோ கஷ்டமிருக்குமென உணர்ந்து சமையலறையிலிருந்து வந்தாள்.

"என்ன தாவா?" என்றாள்

அதாவது இந்த வீட்டிலே முன்படியைத் தவிர முன்னுள்ள 36 அடி நீலமும் புறம்போக்கு. முனிசிபால்டியாருக்குச் சொந்தம். அதை இவன் வாங்கியதோடு வீட்டுக்கு முன் காம்பவுண்டு எடுத்தது ஒரு குற்றம் பயிர் செய்தது மற்றொரு குற்றம் என்று வியாக்யானம் செய்தான்.

"சும்மா அளக்காதே, நோட்டீஸில் இருப்பதைப் படியடா" என்றேன்

"நீயே படியப்பா" என்று என் கையில் கொடுத்தான். நான் விளையாட்டாக வாங்கினேன் படிக்க ஆரம்பித்தால் என் மூஞ்சியில் விளக்கெண்ணெய் வடிகிறது பணம் போட்டது வீணாகப் போச்சு, வீட்டுக்கு முன் வாசலே மூளியாகிவிட்டது. தோட்டச் செலவு நஷ்டம். நோட்டீஸை பார்த்தேன்......

"புறம்போக்கு நிலத்தில் இம் முனிசிபாலிட்டியாருக்குச் சொந்தமான கீழ்மேல் 9 அடியும் தென்வடல் 4 அடியும்

உமது நிலத்தோடு ஆக்ரமித்துக்கொண்ட நீர் இந் நோட்டீஸ் கண்ட இருபத்திநாலு மணி நேரத்தில் ஆக்ரமிப்புச் சுவரை அப்புறப்படுத்தவேண்டியது அல்லாத பட்சத்தில் உமது கட்டடத்தை உம்முடைய செலவில் எங்கள் ஆட்கள் இடித்துவிட நேரிடுமென்றும். இதனால் நேரிடும் சகல கஷ்ட நஷ்ட செலவுகளுக்கு நீர் ஸிவிலிலும் கிரிமினலிலும் தொடரப்படும் வியாஜ்ஜியங்களுக்கு உட்படுவீரென்பதையும் இதனால் நீர் அறிய வேண்டியது

என் தலை சுற்றியது. நான் இனிமேல் பின் வாசலை முன் வாசலாக கட்ட ஆரம்பிக்கிறது என்றால் வீட்டின் பார்வை என்னாகும்?

"ஆமாம் அடுத்த வீட்டுக்காரன் சர்வே கல்படித்தானே நாமும் கட்டியிருக்கிறோம்? என்று காந்திமதி கேட்டாள்

"ஆமாம் அதே கணக்குத்தான் கட்டப்பட்டது என்றேன்.

முனிசிபால்டியார் முன்னதாகவே எனக்கு அறிவிக்காமல் போய்விட்டதால் எத்தனை நஷ்டம் இல்லை யாராவது வம்புக்காரர்கள் தூண்டிவிட்ட காரியமாக இருக்குமோ? எதுவாக இருந்தாலும் வக்கீல் நோட்டீஸ்விட்டாக வேண்டும் கோர்ட்டு வாசல் ஏறி இறங்கி, பட்டினியும் பசியும் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். முன்னதாகவே, வேண்டும் தஸ்தாவேஜுகள் பார்க்காமல் மனை வாங்கியது முட்டாள் தனம் என்று ஒப்புக்கொண்டேன், அருமையாக வளர்த்த செடி கொடிகளை யெல்லாம் அழித்துப் பொசுக்கி முனிசிபல் சர்வேயரே வந்து பெரிய கல்லாகத் தூக்கி எல்லைகட்டிவிட்டார்.

முன்வாசல் பக்கம் இனிமேல் வீட்டுக்குப் பின் வாசல் ஆக்கவேண்டும். பின் வாசலிலே ஒரு பாதையை சிருஷ்டித்து பல சந்துகள் கடந்து பெரிய வீதிக்குள் வரவேண்டும், ஒற்றைமாட்டு வண்டிதான் வீட்டுக்குள் வரலாம் இந்த அலங்கோலத்தில் வீடு முன்வாசல் இழந்து பின் வாசல் முன்வாசலாக மாறி புதுச்செலவை விழுங்கிவிட்டது முன் வாசல் மாறுகிறது என்றால் அதற்கேற்ப சாமான் அறைகள் சமையல் அறை அது இது எல்லாம் மாற்றிக்கட்ட வேண்டும். இதனால் வீட்டிலே பற்பல பகுதிகள் சிலருக்கு பற்கள் தாறுமாறாக முளைப்பதைப்போல முளைத்தன சுவர்களும் அங்கொன்று இங்கொன்றுமாக நின்றன. நாங்கள் திண்டாடியதைவிட வீட்டுக்குள் புகுந்த ஜந்துக்கள் அதிகமாகத் திண்டாடும், புகைபோக்கி வைத்தும் புகை வீட்டை விட்டு வெளியே போகாத விருந்தாளி மாதிரி சுற்றிச்சுற்றி வரும் குட்டிபோட்ட பூனையாக இருந்தாலும் எங்கள் வீட்டுக்குள்ளாக வந்துவிட்டால் அதற்கு வழி தெரியாது. திரும்பத் திரும்ப அறைக்குள்ளாகத்தான் வழி தெரியாது தத்தளிக்கும்,

முகத்திலே கண்ணையும் மூக்கையும் வாயையும் செவியையும் இடமாற்றி அமைத்துவிட்டால் எவ்வளவு கோரமாக இருக்குமோ அப்படி மாறிவிட்டாலும் எங்களுக்கென்னமோ வீடு அதுவும் ஒரு அழகாகவே கண்ணுக்கு காட்சி தந்தது, என்னுடன் படித்த நண்பன் என்வீட்டு பிராபல்யத்தையும் நான் அவனுக்கு எழுதிய வர்ணனையும் கேட்டு குற்றாலத்திற்கோ, கோடைக்கானலுக்கோ போக இருந்தவன் வந்து சேர்ந்தான்.

பழைய ஞாபகத்தில் வண்டிக்காரர்கள் முன் வாசல் பக்கம் வந்துவிட்டால் பிறகு பின் வாசலுக்கு வரவேண்டும். பின் வாசலுக்கு வரும் ரோடு ஒன்றை மைல் சுற்றி வரவேண்டும் இந்த சிரமம் புதிதாக வருபவர்களுக்குத் தெரியாது இதனால் வண்டிக்காரர்கள் வாடகை பெறும் போது வந்த விருந்தாளிகளுடன் மல்லுக்கு நிற்காமல் போவதில்லை. முரட்டு மாடாகவும் வண்டியாகவும் இருந்தால் சந்துக்குள் வரமுடியாமல் தலைச்சுமையாக மூட்டைமுடிச்சுகளை வண்டிக்காரனே சுமந்துகொண்டு வரவேண்டும்? இதற்காகத் தனி கூலி கேட்பார்கள். இப்படித்தான் நாகுவும் வந்து சேர்ந்தான். வண்டிக்குள் நிறைய சாமான் இருந்ததால், வண்டிக்காரன் சாமான்களோடு வந்துகொண்டிருந்தான் பிறகு நாகு வந்து சேர்ந்தான்.

'பேஷ் பேஷ் ரொம்ப நல்ல பாதையப்பா வண்டிகூட வரமுடியாத ரோடு' என்றான். அவனிடம் முன் வாசலை முனிசிபாலிடியார் முன் செய்த கதையைச் சொல்வதா? மௌனம் சாதித்தேன், அவன் பெரிய பங்களாவில் வசிப்பவன். அதற்காக மெத்தையில் தனிரூம் கொடுத்தோம்,

'மெத்தையில் தனியறை உனக்காக விட்டிருக்கிறேன்.

'அடடா நீ எழுதிய கடிதத்தைப் பார்த்தால், மயன் வந்து கட்டினானோ என நினைத்தேன் முன்வாசல் இல்லாமல் துதிக்கையில்லா யானை மாதிரி இதுவும் ஒரு வீடா என்றான் இந்த நாளில் யாருக்கும் எதற்கும் உவமை கிடைக்கிறது துதிக்கையில்லா யானை. கொம்புள்ள குதிரை மாதிரி ரஸமாக இருக்கிறது

'முன்வாசல் இப்போ பாஷன் இல்லை?' என்றேன். இதே கதையாகத்தானே முன்பு நான் வீடு பார்க்கப்போன காலத்தில் எனக்குச் சொன்னார்கள் அந்தப் பழையகதை நினைவிற்கு வந்தது. நாகு என் பதிலைக்கேட்டு சிரிக்க

வில்லே. 'இதென்ன வழி செடுக கல்லுங்கட்டியுமாக இருக்கிறது?' என்ருன்

புதிதாக வேலை நடப்பதை விளக்கினேன். நான் அவனை கூட்டிப் போவதை தவருக எண்ணிக்கொண்டு 'மாடிக்குப் போக வேண்டாமா' என்ருன்.

"மாடிக்குத்தான் போகிருேம்"

"ஏதோ மர்ம சுரங்கங்கள் மாயக் கொலைகள் நடக்கும் துப்பறியும் நாவலைப் பார்ப்பதுபோல இருக்கிறது." என்ருன்

"முன் பக்கத்தில் இருந்த மாடிப் படியைத் தென்பக்கமாக மாற்றி இருக்கிருேம். கிணற்றடி வராந்தாவுக்கு வந்து சின்ன சந்து வழியா மாடிப்படி"

"பேஷ் பேஷ் ரொம்ப அபாரம்." என்று கையாண்டி செய்தான். படாரென்று நெற்றியில் ஒரு இடி கொடுத்தது.

"ஓ கவனித்துப் போகக்கூடாது நான் முன்னே போகிறேன்."

"ஏண்டாப்பா மாடிக்குப் படியை, வீட்டுக்கு முன்னுலே கட்டக்கூடாதா?

"ரெண்டு படி கட்டி செலவை வளர்ப்பானே. வீட்டுக்குள் இருந்தபடியே பொண்டுகளும் மாடிக்கு வர இந்த வழி கண்டு பிடிக்கப்பட்டது."

"இதென்ன குழி."

"ஓ அதுவா. இந்த மாடிக்கு காத்துக் கொடுக்க ஒரு வேப்பங் கன்று நட்ட இடம். ஏனே வளரவே மாட்டேன் என்கிறது?"

"சூரிய வெளிச்சமில்லாமல் எப்படி ஜீவிக்கும் சரி சரி. பகல் பன்னிரண்டு மணிக்கே இத்தனை இருட்டு, நான் எந்த வீட்டிலும் பார்த்ததில்லை லைட் போடு"

"லைட்டுக்கு உரிய ஸ்விச் வெளியே இருக்கு."

இந்த நிலையில் எங்களைப் பின்பற்றி வந்த வண்டிக்காரன் வழி தவறி குளிக்கு மறைக்குள் கொண்டுபோய் சாமான்களை அடுக்கிவிட்டான். எங்களை அந்த அறைக்குள் காணுமல் 'சாமீ, சாமீ' என்ருன். நாங்கள் குரல் கொடுத்து அவனை நின்ற இடத்திற்கு வந்து சேரும்படி செய்ய முடியாமற் போகவே மாடிப்படியில் நாகுவை நிறுத்திவிட்டு வண்டிக்காரனை இழுத்து வந்தேன் நான் வரும்வரை நாகு பொறுமையுடன் இருக்காமல் மேலே போய்விட்டான். போனவன் உளற ஆரம்பித்தான்,



காரணம் என்னவென்ருல் மாடிப்படியில் ஏறிப்போகிறவர்கள் கீழே பார்த்தால் ஒரு திருப்பத்தில் கீழே கிணறு தெரியும் அதை அவன் பார்த்துவிட்டான் மயக்கமடைந்து தலை சுற்றும் போது உளறி இருக்கிருன். வண்டிக்காரனை இழுத்துக்கொண்டு படியில் ஏறிவந்தால் நாகு மயக்கமாக சுவரில் சாய்ந்திருந்தான்.

நான் சொன்ன இடத்தில் அதாவது மாடிப்படியிலிருந்து கீழே பார்த்தால் அதில் பாதாள கிணறு தெரிகிறதே அதேயிடத்தில் மயக்கமாக நின்ருன்.

'என்னடா பத்துப் படி ஒரு உயரம் வருகிறது. பிறகு ஒரு உயரம்? என்ருன்.

கிணற்றை அவன் பார்க்கவில்லையென்று தீர்மானித்துக் கொண்டு 'இது பலகை மச்சுக்கு வழி இது நேரே மாடிக்கு வழி" என்றேன். அவன் பலகை மச்சைப் பார்த்தான். அப்போது கிணறு அவன் பார்வையில் விழுந்து விட்டது. அடுத்த விநாடி உருண்டு கீழே விழ இருந்தவன் வண்டிக்காரன் வந்ததால் தடங்கல் பட்டான்.

மெதுவாக மாடிக்கே வந்துவிட்டோம். மாடி அறைக்குள் படுக்கை திரும்ப முடியவில்லை பெட்டியும் நுழையவில்லை, பெட்டிப்படுக்கைகளை பலகை மச்சில் வைக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனேம்' மச்சில் ரொம்ப சௌகர்யம் அங்கேயே ஆசாரி வந்து கட்டில்களை பூட்டிவிட்டான், அதனுல் கட்டில்களை வெளியே இறக்க வேண்டுமானுல் கயிறு கட்டி தெருவழியாக இறக்கவேண்டும்.

மாடியின் வர்ண அமைப்பு காற்ருேட்டம் நாகுவுக்கு பிடித்திருந்தது. பெட்டியையும் பிரித்து அந்த அறையில் அடுக்கிக்கொண்டிருந்தோம் பெட்டி மட்டும் பலகை மச்சில் கிடந்தது. வந்த களைப்புத்தீர, காருேட்டமாக ஜன்னலைத் திறந்தான். மச்சிலே ஜன்னல் ஒன்றுதான் மிகவும் கஷ்டந்தரும் பொருள். எந்த ஜன்னலைத் திறந்தாலும் மாடிக்குள் புகை மண்ட ஆரம்பிக்கும்

'என்னடா பக்கத்திலே காளவாய் இருக்கிறதோ?' என்ருன்.

'நம்ம வீட்டுப்புகைதான். அதுக்குப் பாரு நன்னூல் இலக்கணப்படி புகைபோக்கி என்பது புகையே படாத இடம் அதை ரிப்பேர் செய்யணும் இந்தஜன்னலைத் திறந்தால் புகையெல்லாம் இதன் வழியாகப்போய்விடும், என்றேன். ஜன்னலை இருவருமாகத் தட்டிக்கொட்டித் திறக்க முயற்சிசெய்தோம் கம்பிக்கு அந்தப் பக்கம் உள்ளங்கையைக் கொடுத்துத் தட்டினேம். ஒரு கதவு மட்டும் திறந்தது.

'பார்த்தாயா' இந்த ஜன்னல் கதவுகளில் எப்பேர்ப்பட்ட பூ வேலைகள்.'

'இத்தனை பூ வேலைகள் செய்த உன் புத்திக்கு ஒரு வளையம் போடவேண்டுமென உதிக்காமல் போயிற்றே' என்ருன். வாஸ்தவந்தானே, காலணு வளையம் இருந்தால் கதவைத் திறக்க இவ்வளவு சிரமம் வேண்டாமே எல்லா கதவுகளுக்கும் வளையங்கள் போடவேண்டுமென்று முடிவு கட்டினேன்.

நாகுவை மாடியிலிருந்து கீழே அழைத்துச் செல்லும் போது கிணற்றைப் பார்த்துவிடாதிருக்க வேண்டுமே என்று சாதுர்யமாக பேசிக்கொண்டே காட்டச் சென்ருல் இந்த சமயத்தில்,

அரிய நல் கிரவுண்டு வாங்கி

ஆழமாய் வாணந் தோண்டி

என்ற பாடல் கேட்டது நீ. இர. யெனில் வந்தால் வீட்டைப் பற்றி ஏதாவது இட்டிக்கட்டிக்கொண்டு வருகிறதென தீர்மானித்திருந்தான்.

'என்ன பாட்டு ரேடியோவா? என்ருன்.'

'நடமாடும் ரேடியோ இது இவன் பெயர் நீ இரங்காயெனில் கீழே போய் பார்க்கலாம்" என்றேன். நாங்கள் கீழே வரவர பாட்டு மேலே போய்க்கொண்டிருந்தது.



"என்ன ஓய்! திருப்பதியா? வைதீஸ்வரன் கோவிலா?"

"உள்ளூர்தான் ஸ்வாமி!"

கருநிற கருங்கல் கொண்டு
கட்டியாய் காங்கிரட் போட்டு
சுவரினை எழுப்பி யெங்கும்
சுண்ணும்பு லொகுசாய்த் தீட்டி
பவரான லைட்டுகள் மாட்டி
பவுஷான புது வீடு அம்மா

எரி விறகு விராட்டி. மண் எண்ணெய் சீசாக்கள் திண்ணைக்கு வருவதற்குள் நெல் மூட்டைகளை தாண்டி வரவேண்டும். வீட்டுக்குள் நெல் மூட்டை அடுக்குவதில் சுகாதாரக் கேட்டை விளக்கினுன், நாகு 'மகரிஷிகள் வந்தால் கூட பொறுமையிழந்து விடுவார்கள். குளிக்குமறைக்கும் மாடிக்கும் போகிறது கோடைக்கானலிருந்து குற்ருலம் போகிறதுமாதிரி." என்று பேச்சு வாக்கில் மாடியென்று ஏற ஆரம்பித்தான்

நீ இரங்காயெனில் பாட்டுக்கு மேலாக, பூனையின் அலறல் கேட்டது நாகு ஒரு கதகளி ஆடி முடித்தான். அடடா பாம்போன்னு பயந்து போனேன்? இருட்டிலே என்னு தெரியுது பூனைவால்தானு? என்ருன் வீட்டுக்குள் எந்த இடத்திலும் பூனைவால் இருக்கும். மிதித்து விடக்கூடாது என்பவனைப்போல சர்வ ஜாக்கிறதையாக வந்தவன், ஸ்நான அறைக்குள்ளும் அப்படியே வந்திருக்கிருன், காலை வாரிவிட்டது. நீ இரங்காயெனில் யாரிடம் சிட்சை? என்ருன் விழித்துக்கொண்டு, நாகு ஒரே வழுக்கல் பிரதேசமாக இருக்கிறதே மேல்நாட்டிலே பனிக்கட்டு விளையாட்டு மாதிரி எங்கள் வீட்டு ஸ்நான அறைக்குள்ளும் விளையாடலாம் என்ருன் நாகு.

இது சாமான் அறை என்று அறிமுகம் செய்தேன். நாகு உள்ளே மூச்சுவிட சிரமப்பட்டான் பச்சைக்காய் வைத்த நிமிஷம் பழமாகிவிடும் அவ்வளவு புழுக்கம் இருக்கிறதாம் சமையல் கட்டில் பெரிய ஜன்னல் இருப்பதால் மாடிக்கு புகை வருகிறதென்ருள் எனது புஸ்தக அறையைப் பார்த்துவிட்டு ஏண்டாப்பா நீ புஸ்தகங்களை நிறுத்து வாங்குகிருயா? இல்லை அளந்து வாங்குகிருயா? என்ருன் இரண்டுமில்லை இரவல் என்பதை வெளியே சொன்னுல் வெட்கம்.

நீ இரங்காயெனில் பாடினுன்.

கந்தமிகும் சுணக்கான சாமனறை
அந்திரத்தில் உலா அழகான கொடிகள்

காசியில் குளிக்கிறது கன்னியாகுமரியில் உலரப்போடுகிறதா? என்ருன் எங்கே கொடிகட்ட வளையங்கள் பதிக்கப்பட்டிருந்தனவோ அங்கேதானே கொடி கட்டலாம். வழியெல்லாம் உமிச்சாக்கு, எரி விறகு, விராட்டி, மண்ணெண்ணெய் சீசாக்கள், திண்ணைக்கு வருவதற்குள் நெல் மூட்டைகளைத் தாண்டி வரவேண்டும் வீட்டுக்குள் நெல் மூட்டை அடுக்குவதில் சுகாதாரக் கேட்டை விளக்கினுன் நாகு மகரிஷிகள் குளிக்குமறைக்கும் மாடிக்கும் போகிற கோடைக்கானலிருந்து குற்ருலம் போகிறது மாதிரி என்று பேச்சு வாக்கில் மாடியென்று ஏற ஆரம்பித்தான்.

"டேய் டேய் அது கொட்டிலுக்குப் போகும்வழி" என்றேன்.

நீயிரங்காயெனில் மந்தமுள்ள மகிஷம் மகிழ்துறங்கும் கொட்டில் என்று ராகமிழுத்தான். இப்படிப்பாடவும் தெருவுக்குப் போக அவன் முயற்சி செய்ய அந்தப் பாதை பலகை மச்சுக்குப்போகும் வழியென அறியவில்லை எங்கள் வீட்டின் மர்மம் புரியாமல் மூர்ச்சையாகிவிட்டவனை காப்பி கொடுத்து எழுப்ப காந்திமதி காப்பி கொண்டுவந்தாள்

காப்பி குடித்தும். "அப்பனே இந்த வீட்டுக்குள் நம்மால் ஒரு மணி இருக்கமுடியாது நமஸ்காரம்" என்று பெட்டி படுக்கையை எடுக்காமல் புறப்பட்டான் நாகு. சந்தர்ப்பம் தெரியாத நீ இரங்காயெனில் பாடிக்கொண்டிருந்தான்.

சந்திரரும் சூரியரும் வந்திறங்கும் வாசல்
பந்துவொடு மித்திரரும் வந்து தங்கும் மாடி
அந்த மிகும் பட்டாலை அழகான வெந்நீரறை
இந்த அறைக்குள் தூரம் இருநூறு மைல்தான்.

(தொடரும்)



பேப்பர் படிக்கும் பையன்:— 'கள்ளமார்க்கெட் காரர்களுக்கு 7 வருஷம் சிறை தண்டனை' மத்ய சர்க்காரின் தீவிர நடவடிக்கை......

தகப்பனுர்:—டேய் பையா...பத்திரிகையை மூடி வெச்சிட்டு கிளாஸ் புஸ்தகத்தை எடுத்துப் படி.



பயிற்சி 30-अभ्यास 30

விடைகள்—उत्तर

மொழிபெயர்ப்பு—अनुवाद

டண்டன்ஜீயின்ப்ரஸங்கம்

காங்கிரஸின் தலைவர் பாபூ புருஷோத்தம்தாஸ் டண்டன்ஜீயினுடைய நாஸிக் ப்ரஸங்கத்தின் சில முக்ய விஷயங்கள் இவ்வாறு உள்ளன:—

இந்தியாவின் புதிய அரசியல் சட்டம்

"இந்தியாவில் அநேக மதங்களின் (மதங்களைச் சேர்ந்த) ஜனங்கள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லோருக்கும் இந்த தேசத்தின் மீது உரிமையுண்டு ஹிந்துக்கள், முஸல்மான்கள், ஸிக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், ஜைனர்கள், பௌத்தர்கள். எல்லோரும் இந்த தேசத்தின் மக்களே. அவர்களுடைய மதங்கள் வெவ்வேறானவை யெனினும் அவர்களெல்லோரும் ஒரே பாரத ஸமுதாயத்தின் (Nation) அங்கங்களே (உறுப்பினர்களே). ஆதலால் அவர்களெல்லோருடைய உரிமைகளும் இங்கே ஸமமாக இருக்கும், இந்தியாவின் புதிய அரசியல் சட்டத்தின் இந்தக் கொள்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது இதுதான் புத்திசாலித்தனமான கொள்கை. இந்தியாவில் லௌகிக (மதச் சார்பற்ற) ஆட்சிதான் நடத்தவேண்டியிருக்கும் எல்லோரும் இதே கொள்கையை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும் எந்த ஒரு மத நூலின் அடிப்படை மீதும் (நூலை அடிப்படையாகக் கொண்டும்) நம்முடைய ஆட்சி நடக்க முடியாது. பாகிஸ்தானிடமிருந்து மதச் சார்புள்ள ஆட்சியின் கொள்கையை நாம் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை"

தேசீய பாஷை ஹிந்தீ

"ஹிந்தீ நம்முடைய தேசிய பாஷை இதை நாம் மனத்தினால் (மனப்பூர்வமாக) தனதாக்கிக் கொள்ள (ஏற்றுக் கொள்ள) வேண்டியிருக்கும் அரசியல் சட்டத்தின்படி, பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு ஹிந்திதான் இந்தியாவின் அரசாங்க பாஷையாக இருக்கும், என் அபிப்ராயத்தில், நாம் பதினைந்து வருஷங்கள் வரையில் கூடக் காத்திருக்க வேண்டியதில்லை. தேசம் முழுவதிலும் ஹிந்தீயை நன்றாக ப்ரசாரம் செய்ய வேண்டியிருக்கும் பதினைந்து வருஷங்களுக்குள்ளாகவே அதை அரசாங்க பாஷையாக ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கும் இந்தியாவின் ஒற்றுமைக்கு இந்தக் கார்யம் மிகவும் அவச்யமானது ஆங்கிலம் பிறநாட்டு பாஷை; ஹிந்தீ நம் நாட்டு பாஷை ஆகையால் ராஜ பாஷை (அரசாங்க பாஷை)யாக இருக்கும் கௌரவம் ஹிந்தீக்கு சீக்ரத்தில் கிடைக்கவேண்டியிருக்கும் எல்லா பாரத வாஸிகளும் (இந்தியக் குடிகளும்) சேர்ந்து இதற்கு முயற்சி செய்ய வேண்டியிருக்கும்."

க்ராமத் தொழில்களும், காதியும்

"மஹாத்மா காந்தியின் வேலைத் திட்டத்தில் க்ராமத் தொழில்களுக்கும், காதிக்கும் (கதருக்கும்) மிக முக்யமான இடம் உண்டு எல்லா காங்கிரஸ் காரர்களும் அந்த வேலை திட்டத்தை ஒப்புக்கொள்கிறார்கள் நம் ராஜ்யங்களின் காங்கிரஸ்-ஸர்க்கார்களும் அதை ஒப்புக் கொள்கின்றன. ஆனால் இப்பொழுது தேசத்தில் க்ராமத்தொழில்களினுடையவும் காதியினுடையவும் ப்ரசாரத்துக்காக மிகக் குறைந்த (ஸ்வல்பமான) முயற்சிகளே நடந்துகொண்டிருக்கின்றன. இது நல்லதல்ல, எது வரையில் க்ராமத் தொழில்களினுடையவும் காதியினுடையவும் ப்ரசாரம் நன்றாக நடக்கவில்லையோ அது வரையில் (க்ராமத் தொழில்களையும் காதியையும் நன்றாக ப்ரசாரம் செய்யாத வரையில்—செய்தாலொழிய) க்ராமங்களின் முன்னேற்றம் ஏற்பட முடியாது (க்ராமங்கள் முன்னேற முடியா.) க்ராமங்கள் முன்னேறாத வரையில், தேசமும் முன்னேற முடியாது ஆகையால் எல்லா காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ்—ஸர்க்கார்களும் க்ராமத் தொழில்களையும். காதியையும் அதிக ப்ரசாரம் செய்து உபயோகிக்க வேண்டியிருக்கும் மஹாத்மா காந்தியின் ஆத்மா அப்பொழுதுதான் ஸந்தோஷப்படும்; தேசமும் முன்னேறும்."

नमस्ते

☆

பரீக்ஷை 2-க்கு விடையளித்த ஏராளமான ஹிந்தீ வாசகர்கள் தத்தம் மார்க்குகளைத் தெரிவித்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் இத்தனை ஆண்களும், பெண்களும். சிறுவர்களும், பெரியவர்களும் மிகுந்த ச்ரத்தையுடன் ஹிந்தீ கற்று வருகிறார்களென்பதை நினைத்துப் பார்க்கும் போது பூரிப்புஏற்படுகிறது "மித்திர"னின் இந்தப் பெரு முயற்சியையும், ஹிந்தீ பாடங்களின் நம் முறையையும் எல்லோரும் வெகுவாய்ப் பாராட்டியிருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் 'மித்திர''னின் நன்றி சிலர் அடியேனையும் விசேஷமாக விசாரித்து வாழ்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் அஞ்ஜலி.

பத்திரிகையில் மார்க்குகளை ப்ரசுரிக்கும் விஷயத்தில் எல்லோரும் ஒரு முகமான அபிப்ராயத்தை வெளியிடவில்லை சிலர் ஸங்கோசப்படுகிறார்கள்; சிலர் விளம்பரம் வேண்டாம் என்கிறார்கள். மற்றும் சிலர் தாராளமாக ப்ரசுரிக்கலாம் என்கிறார்கள். எனவே அனுமதி கொடுத்த சிலரின் மார்க்குகள் மட்டும் கீழே ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன, சிலர் கேட்டுள்ள ஸந்தேஹங்களும், அவற்றிற்கான பதில்களும் கூட கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன இம்மாதிரி உங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் ஸந்தேஹங்களைக் குறிப்பிட்டு எழுதுங்கள். அவற்றிற்கெல்லாம் संदेह-निवारण என்ற இந்தப் பிரிவில் பதில்கள் ப்ரசுரிக்கப்படும். இந்தப் பிரிவும் உங்களுக்குப் பயன்படுமென்று நம்புகிறேன்.

"पंडितजी"

ஸந்தேஹ நிவாரணம்

संदेह-निवारण

எம் உபைதுல்லா:—விஜயபுரம் (2-மணி நேரம்—67 மார்க்குகள்)

கே:—ஆண்பால்—பெண்பால் விஷயத்தில் அடிக்கடி குழப்பம் ஏற்படுகிறது......सूचना+को = सूचने को அல்லவா?... ஹிந்தீ பயின்ற பின்பு உர்தூ லிபியைமட்டும் கற்றுக்கொண்டு விட்டால் உர்தூ பாஷை புரியுமா?

ப:—ஆண்பால்—பெண் பால் விஷயத்தில் குழப்பம் ஏற்படுவது ஸஹஜம்தான் படித்துப்பேசும் பழக்கம் அதிகரித்த பின்பு அந்தக் குழப்பம் நீங்கும் சில பொதுப்படையான விதிகளைப்பற்றிப் பின்னொரு பாடத்தில் குறிப்பிடுவேன் அதுவரை பொறுத்திருங்கள்...आ—வில் முடியும் ஹிந்தீ ஆண்பால் சொற்களுக்குப் பிறகு வேற்றுமை உருபுகள் வரும்போது தான் आ என்பது ए யாக மாறும். सूचना என்பது பெண்பால் வார்த்தை; தவிர ஸம்ஸ்க்ருத வார்த்தையும்கூட. எனவே, அதைத் தொடர்ந்து வேற்றுமை உருபு வரும்போது ना என்பது ने என்று மாறாது...ஸாதாரண ஹிந்திக்கும், ஸாதாரண உர்தூக்கும் நடையில் வித்தியாசம் கிடையாது. எனவே லிபியை மட்டும் தனியாகக் கற்றுக்கொண்டுவிட்டால் ஸாதாரண உர்தூபாஷை புரியும் ஆனால் உர்தூ காவ்யங்களைப்படித்து ரஸிக்கவேண்டுமானால் அதற்கு அதிகப்படியான பயிற்சி வேண்டும்.

எஸ். வஸந்தா, அஹமதாபாத். (1½ மணி நேரம்—77 மார்க்குகள்)

கே:—किन - किन लोगों में लड़ाई होनेवाली है? என்ற கேள்விக்குப் பதிலாக நான் किन-किन लोगों की लड़ाई होनेवाली है? என்று எழுதியிருக்கிறேன் இது சரியா?

ப:—முதல் கேள்விக்கு 'எவர் எவர்களுக்குள் சண்டை நடக்கப் போகிறது' என்று அர்த்தம் இரண்டாவது கேள்விக்கு 'எவர்—எவர்களுடைய சண்டை நடக்கப்போகிறது' என்று அர்த்தம். குறிப்பிட்ட ஸந்தர்ப்பத்தில் முதல் கேள்விதான் பொருத்தமானது என்பதை நீங்களே இப்பொழுது தெரிந்துகொள்ளலாம்.

கே:—बाहर என்பதற்கு எதிர்ப்பதம் भीतर என்று கொடுக்கப்பட்டிருக்கிறது நான் अंदर என்று எழுதினேன். இது சரியா?

ப:—ரொம்ப சரி

எஸ் ஸ்வயம்ப்ரகாசம், திருவேங்கட நாதபுரம் (2¼ மணி நேரம்—71 மார்க்குகள்,)

கே:—ஹிந்தீ எண்களை ஏன் சொல்லித்தரவில்லை?

ப:—அவை வேண்டாமென்று அரசியல் நிர்ணய ஸபை தீர்மானித்திருப்பதுதான் முக்ய காரணம். எனினும் அடுத்த பாடத்தில் அவற்றையும் சிறிது விளக்குகிறேன்.

கே:—लड़का என்பதற்குப் பதிலாக छोकरा என்றும் சொல்லலாமாமே, உண்மைதானா?

ப:—உண்மைதான், ஆனால் பதிலாக என்று சொல்லமுடியாது. लड़का என்றால் 'பையன்' என்று அர்த்தம்' छोकरा என்றால் 'பயல்'. 'பொடியன் என்று அர்த்தம். छोकरा என்பதில் சிறிது அலக்ஷ்யம் த்வனிப்பதைக் கவனிக்கவும்,

எஸ் கமலா, மயிலாப்பூர் (1½-மணி நேரம்—55 மார்க்குகள்)

கே:—கேள்வி வாக்யங்களில் क्या என்ற சொல் சில ஸமயங்களில் முன்னும், மற்றும் சில ஸமயங்களில் பின்னும் வருகிறதே! எது சரியான உபயோகம்?

ப:— இரண்டும் சரியான உபயோகங்களே. சொல்லமுருக்காகச் சில ஸமயங்களில் வார்த்தைகள் வரிசைமாறி வருவது பாஷையின் இயல்பு, அவ்வளவுதான்.

ஏ. கே சந்த்ரிகா, தோணிமுடி (1½-மணி நேரம்—95 மார்க்குகள்)

கே:—நான் மலையாளியாகையால். பயிற்சிக் கேள்விகளை தமிழில் மொழிபெயர்க்கும்போது என் தமிழில் தவறுகள் ஏற்படுகின்றன அந்த தவறுகளுக்காக மார்க்குகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமா?

ப:—வேண்டாம். மலையாளப் பெண் இவ்வளவு ஆர்வத்துடன் ஹிந்தீ கற்கும்போது, தமிழில் சிறு தவறுகள் ஏற்படுவதற்காக ஹிந்தீ மார்க்குகளைக் குறைத்துக்கொள்ளவேண்டாம்

எம் ராஜலக்ஷ்மி:—தோணி முடி (1½ மணி நேரம்-97 மார்க்குகள்)

கே:—நான் மலையாளத்துக்காரி. தமிழில் உங்களுக்குக் கடிதம் எழுதுவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது, தமிழை வேகமாகப் படிக்கமுடியும், பேச முடியும், ஆனால் எனக்கு எழுத வரவில்லை. மலையாளத்தில் எழுதலாமா?

ப:—மன்னிக்க வேண்டும். எனக்கு அவ்வளவு மலையாளம் தெரியாது. (ஞான் கொறச்சு மலையாளம்தான் அறியும்!) தப்பானாலும் தற்போதைக்குத் தமிழிலேயே எழுதுங்கள், அப்புறம் ஹிந்தீயில் எழுதலாம்.

முஹம்மத் ஜஹீருத்தீன்:—பெரம்பலூர் (75 மார்க்குகள்)

கே:—தங்கள் பாடங்களில் வரும் பாட்டுக்களை யெல்லாம் நான் மிகவும் ஆவலுடன் பாடம் செய்து வருகிறேன். இன்னும் அதிகப் பாட்டுக்கள் கொடுக்கக்கூடாதா?

ப:—ஸந்தோஷம். கொடுக்கிறேன். பொறுங்கள்

திருநாகவல்லி:— பொறையாறு (2 மணி நேரம்-69 மார்க்குகள்)

சிவராம்ஸ்

இங்கு வாங்கி திருப்திபெறுக.

இன்று முதல் மீண்டும் உங்கள் சேவைக்குத் தயார்!

வித விதமான பட்டுப் புடவைகள் எல்லா நிறங்களிலும் நீளங்களிலும் மற்றும் ஜரிகை & பட்டு வேஷ்டிகள் முதலியன வழங்கக்கூடும்.

தி மதராஸ் ஸ்டோர்ஸ்
96, பேர்ட் ரோட்,
புது டில்லி.

எப்பொழுதும் போல உங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளோர்

ஏராளமான தினுசு பட்டுப்புடவைகள் சரிகை வேஷ்டிகள் கிடைக்கும்.

துரிதமாக விஜயம் செய்து வேண்டியதை வாங்குக.

சிவராம் & Co.,
34, கீழ மாட வீதி,
மைலாப்பூர்.

கே:—அ, ஆ, இ, ஈ பிரிவுகள் என்ருல் என்ன?

ப:—ஒவ்வொரு பாடத்தையும் இலக்கணம், ஸம்பாஷணை, குறிப்புக்கள், சொற்களஞ்சியம் முதலிய பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிரேமல்லவா? அவற்றைத்தான் அ-பிரிவு, ஆ-பிரிவு, இ-பிரிவு, ஈ-பிரிவு என்றெல்லாம் சொல்கிரேம்.

தங்கராஜ்:—போடி நாயக்கனூர் (2 மணி நேரம்-72 மார்க்குகள்)

கே:— **भाई** என்ருல் 'ஸஹோதரன்' என்றுதானே அர்த்தம்! அப்படியிருக்க அதை மொழி பெயர்க்கும்போது நீங்கள் ஏன் சில ஸமயங்களில் அண்ணு' அல்லது 'தம்பி' என்று எழுதுகிறீர்கள்?

ப:—தமிழில் நாம் யாரையும் 'ஏ ஸஹோதரா!" என்று கூப்பிடமாட்டோம். 'அண்ணு' அல்லது 'தம்பி' என்று சொல்லித்தான் கூப்பிடுவோம். அதனுல்தான்.

எஸ். வெங்கடேச்வர ராவ்:—தோட்டம்பட்டி (2 மணி நேரம்—80 மார்க்குகள்)

கே:—இந்த ஹிந்தீ பாடங்களைப் படித்துவிட்டு 'ஸபாவின்' ஹிந்தீ பரீக்ஷைகளில் உட்கார முடியுமா?

ப:—எந்தப் பரீக்ஷைக்கும் உங்களைத் தயார் செய்வது இந்தப் பாடங்களின் தற்போதைய நோக்கமல்ல, பாஷையைக் கற்றுக் கொடுக்கத்தான் முயற்சி செய்யப்படுகிறது. பரீக்ஷைகளில் உட்காரவேண்டுமானுல் அவற்றிற்காக ஏற்பட்ட பாடப் புத்தகங்களையும் படிக்க வேண்டியது அவச்யம்

மார்க்கு விவரங்கள் மட்டும்

டி. எஸ். கமலா மஞ்சேரி ($1\frac{3}{4}$ மணி-76 மார்க்குகள்)—கே பட்டம்மாள், ஜார்ஜ்டவுன் (1 மணி—98 மார்க்குகள்) எஸ். மீனு அஹமதாபாத் ($1\frac{1}{4}$ மணி—53 மார்க்குகள்)-ப்ரஸன்ன வெங்கடேச ராவ் பாலூர் (2 மணி-60 மார்க்குகள்.)

பாடம் 31—पाठ 31

(அ) இலக்கணம்—व्याकरण

चाहिए (வேண்டும்)

चाहिए என்ற ஹிந்தீ வார்த்தைக்குத் தமிழில் 'வேண்டும்' என்று அர்த்தம் இந்த 'வேண்டும்' என்ற வார்த்தையைத் தமிழில் முக்யமாக இரண்டு வித வாக்யங்களில் உபயோகிக்கிரேம்.

1. அவனுக்கு ருபாய் வேண்டும்
2. அவன் மதராஸ் போக வேண்டும்.

முதல் வகை வாக்யத்தில் 'வேண்டும்' என்பதே முக்யவினை. இத்தகைய வாக்யங்களில் தமிழ் நடை எப்படி இருக்கிறதோ அப்படியேதான் ஹிந்தீ நடையும் இருக்கும். இதோ பாருங்கள்,

அவனுக்கு ருபாய் வேண்டும்.

—उसको रुपया चाहिए।

எனக்குத் துணி வேண்டும்.

—मुझको कपड़ा चाहिए।

உங்களுக்கு என்ன வேண்டும்?

—आपको क्या चाहिए ?

ராமனுக்குப் பேனு வேண்டும்.

—राम को क़लम चाहिए।

ஸீதைக்குப் புஸ்தகம் வேண்டும்.

—सीता को पुस्तक चाहिए।

எல்லோருக்கும் தண்ணீர் வேண்டும்.

—सबको पानी चाहिए।

இந்த உதாஹரண வாக்யங்களில் தமிழ் ஹிந்தி இரண்டிலும் ஒரே மாதிரியாக எழுவாய் நான்காம் வேற்றுமையில் இருப்பதைக் கவனிக்கவும்

அடுத்தபடியாக, இரண்டாம் வகை வாக்யங்களைக் கவனியுங்கள் அவன் மதராஸ் போக வேண்டும்' என்ற வாக்யத்தைச் சில ஸமயங்களில் அவனுக்கு மதராஸ் போக வேண்டும்' என்றும் தமிழில் சொல்வதுண்டு. ஆனுல் ஹிந்தீயில் இப்படி இருவித ப்ரயோகங்கள் கிடையா. பின்சொன்ன முறைப்படி எழுவாயை நான்காம் வேற்றுமையில் வைத்துத்தான் எழுத வேண்டும் எனவே பயனிலையில் **चाहिए** (வேண்டும்) என்பது துணை வினையாக வரும்போது, அந்த ஹிந்தீ வாக்யத்தின் எழுவாயுடன் **को** சேர்ந்து எழுவாய் நான்காம் வேற்றுமையில் இருக்கும் தவிர, முக்யவினை அதன் தொழிற்பெயர் வடிவத்தில் இருக்கும். (உ—ம்)

அவன் மதராஸ் போகவேண்டும்.

-उसको मदरास जाना चाहिए।

நீ இங்கே உட்கார வேண்டும்.

-तुमको यहाँ बैठना चाहिए।

அவர்கள் உள்ளே வரவேண்டும்.

-उनको अंदर आना चाहिए।

நாங்கள் இப்பொழுது தூங்க வேண்டும்.

-हमको अब सोना चाहिए।

'அவன் மதராஸ் போகவேண்டும்' 'அவன் மதராஸ் போகவேண்டியிருக்கிறது. 'அவன் மதராஸ் போக வேண்டியிருக்கும்' முதலிய வாக்யங்களெல்லாம் கருத்தில் கிட்டத்தட்ட ஓரே மாதிரியானவையே. இவ்வகை வாக்யங்களையெல்லாம் ஹிந்தீயில் மொழிபெயர்க்கும்போது எழுவாய் நான்காம் வேற்றுமையில் இருக்கும். எழுவாய்க்கும் பயனிலைக்கும் எண், பால், இடம் ஸம்பந்தமான எவ்விதத் தொடர்பும் கிடையாது;

பயனிலையில் முக்யவினை செய்யப்படுபொருள் குன்றிய வினையாக இருந்தால், அப்போது அந்த முக்ய வினை **ना** சேர்ந்த தொழிற் பெயர் வடிவத்திலேயே இருக்கிறது.

இப்படிக்கின்றி பயனிலையில் முக்ய வினை செயப்படுபொருள் குன்ருவினையாக இருக்குமேயானுல் செயப்படு பொருளின் எண், பால். இவற்றையொட்டி அந்த முக்ய வினையின் தொழிற் பெயர் வடிவமும் மாறும்.

(உ—ம்)

राम को एक केला खाना चाहिए।

—ராமன் ஒரு வாழைப்பழம் சாப்பிட வேண்டும்.

राम को दस केले खाने चाहिए।

—ராமன் பத்து வாழைப் பழங்கள் சாப்பிட வேண்டும்.

राम को एक मिठाई खानी चाहिए।

—ராமன் ஒரு மிட்டாய் சாப்பிட வேண்டும்.

राम को दस मिठाइयाँ खानी चाहिए।

—ராமன் பத்து மிட்டாய்கள் சாப்பிடவேண்டும்.

செயப்படு பொருள் **केला** என்று ஆண்பால் ஒருமையாக இருக்கும் போது முக்யவினை **खाना** என்றும் **केले** என்று ஆண்பால் பன்மையாக இருக்கும்போது முக்ய வினை **खाने** என்றும் மாறுகிறது பெண்பாலில் மட்டும் செயப்படு பொருள் **मिठाई** என்று ஒருமையாக இருந்தாலும் சரி, அல்லது **मिठाइयाँ** என்றும் பன்மையாகஇருந்தாலும்சரி, முக்யவினை **खानी** என்ற ஒரே ரூபத்திலேயே இருந்துவிடுகிறது எல்லா செயப்படுபொருள் குன்ருவினைகளுக்கும் இந்த விதி பொருந்தும்.

ஆனுல் ஒரு விஷயம். பயனிலையின் முக்யவினை செயப்படு பொருள் குன்ருவினையாக இருந்தாலும்கூட, வாக்யத்தில் செயப்படுபொருளையடுத்து **को** வந்தாலும் அல்லது செயப்படு பொருள் குறிப்பிடப்படாமலோ அல்லது தெளிவற்றதாகவோ இருந்தாலும், அந்த முக்ய வினையின் தொழிற் பெயர் வடிவம் ஆண்பால் ஒருமையிலேயே மாருமல் இருக்கும். (உ—ம்)

செ,பொ.வை. அடுத்து **को** வருகிறது

मुझे लड़के को बुलाना चाहिए।

मुझे लड़कों को बुलाना चाहिए।

मुझे लड़की को बुलाना चाहिए।

मुझे लड़कियों को बुलाना चाहिए।

செ. பொ குறிப்பிடப்படவில்லை

मुझे खाना चाहिए।

उसे पीना चाहिए।

हमें पढ़ना चाहिए।

செ. பொ. தெளிவாக இல்லை

मुझे कुछ खाना चाहिए।

उसे क्या पीना चाहिए ?

हमें सब पढ़ना चाहिए।

(ஆ) ஸம்பாஷணை बातचीत

रोग और चिकित्सा

डाक्टर:-आइए, मुदलियार जी, कैसे हैं ?

मुदलियार:-क्या कहूँ, डाक्टर साहब ? किसी तरह जीता तो हूँ; मौत नहीं आती !

डा:-क्यों, क्या बात है ?

मु -यह खांसी मेरी जान ले रही है, डाक्टर साहब ! और बुख़ार भी है।

डा.-फिर वही खांसी ? आपसे उसकी अच्छी दोस्ती है, क्या ?

मु.-आप मज़ाक कर रहे हैं, मगर मैं मर रहा हूँ !

डा.-मज़ाक नहीं, मुदलियार जी ! मैं सच कह रहा हूँ। आपसे इस खांसी की बड़ी दोस्ती है। जानते हैं, क्यों ?

मु.-मैं क्या जानता हूँ ?

डा.-आप उसी घर में रहते हैं, न ?

मु.-हाँ डाक्टर साहब। और कहाँ जाऊँ ? आजकल अच्छा घर कहाँ मिलता है ? आप भी तो जानते हैं कि घर मिलना आसान नहीं है !

डा.—वह सब ठीक है। मगर मेरा कहना यह है कि आप जब तक उस गंदे घर में रहेंगे, तब तक यह बीमारी भी आपका साथ नहीं छोड़ेगी।

मु.-यह क्या, डाक्टर साहब ! वह घर छोटा तो ज़रूर है; मगर गंदा कहाँ है ? कितना साफ़ है ! आप क्या कहते हैं !

डा.-अजी, मुदलियार जी, मेरी बात ज़रा मानिए। साफ़-सुथरे और हवादार घर में रहनेवालों को कभी खांसी की बीमारी नहीं होती ! बुख़ार भी नहीं आता !

मु.-तब तो मेरे घर में क्या बुराई है ? मुझे क्यों यह खांसी अकसर सताती है ?

डा.—यही तो मैं भी कह रहा हूँ। आपके घर के चारों तरफ़ खेत हैं। खेतों में गंदी खाद और गंदा पानी बहुत हैं। वहाँ बहुत मच्छर पैदा होते हैं, जो आप के घर में भी उड़ आते हैं और आप का भोजन वग़ैरह गंदा कर देते हैं। यही कारण है कि आप को अकसर बुख़ार आता है।

मु.—यह बुख़ार का कारण हो सकता है। मगर खांसी की बीमारी क्यों मुझे सताती है ?

डा.—उसका भी करीब-करीब यही कारण है। आपको अच्छे घर में रहना चाहिए। अब आपका घर नीची ज़मीन पर है; ऊँची ज़मीन पर नहीं। इसलिए उस घर का फ़र्श सूखा नहीं होता है; हमेशा नम होता है। फिर उस घर में काफ़ी खिड़कियाँ भी नहीं हैं। इसलिए वहाँ न काफ़ी हवा आती है, न काफ़ी रोशनी। ऐसे घरों में रहनेवालों को खांसी, दमा, क्षयरोग आदि फेफड़े की बीमारियाँ अकसर आती हैं।

मु.—फिर कैसे घर में रहना चाहिए, डाक्टर साहब ?

डा.—आपको अभी अपना घर बदलना चाहिए। तुरंत एक दूसरा अच्छा घर ढूंढना चाहिए। आज ही से आपको एक अच्छे, साफ़-सुथरे और हवादार घर में रहना चाहिए, जहाँ की ज़मीन ऊँची हो, फ़र्श सूखा हो और अंदर की रोशनी भी काफ़ी हो।

मु.—ठीक है, डाक्टर साहब, वैसा ही करूँगा। अब इस रोग के लिए क्या करूँ ?

डा.—अभी इसके लिए मैं पिचकारी दूँगा; पीने के लिए कुछ दवा भी दूँगा। आपको तीन दिन यहाँ आना चाहिए। रोज़ पिचकारी लेनी चाहिए। इसके अलावा रोज़ दवा भी पीनी चाहिए।

मु.—दवा कैसे पीनी चाहिए ?

डा.—यह दवा खानेके पहले पीनी चाहिए। इसके चार हिस्से कर लेने चाहिए। इस बोतल में चार आउन्स दवा है। हर बार एक आउन्स दवा पीनी चाहिए। अगर प्यास लगे, तो गरम पानी ही पीना चाहिए। शाम को कुछ देर तक खुली हवा में टहलना भी चाहिए। खाना,

मामूली खाना खा सकते हैं। आप तीन दिनों में चंगे हो जाएँगे। डरिए मत, मुदलियार जी !

मु.—अच्छा ! नमस्ते, डाक्टर साहब।

डा.—नमस्ते !

(இ) குறிப்புகள்—नोट

1. चाहिए (வேண்டும்)என்ற துணை வினை அர்த்தத்திலும், ப்ரயோகத்திலும் கிட்டத்தட்ட हो, पड़ என்ற துணைவினைகளைப் போன்றதே.

2 'அவன் போகவேண்டும்,' 'அவள் பாடவேண்டும்', 'இவன் வரவேண்டும்' 'இவர்கள் வாசிக்கவேண்டும்' முதலிய வாக்யங்களை ஹிந்தியில் மொழிபெயர்க்கும்போது அந்த வாக்யங்கள் 'அவனுக்குப் போகவேண்டும்' 'அவளுக்குப் பாடவேண்டும்' 'இவனுக்கு வரவேண்டும்', 'இவர்களுக்கு வாசிக்கவேண்டும்' என்றிருப்பதாகக் கருதி மொழிபெயர்க்கவேண்டும்.

3 न काफ़ी हवा आती है, न काफ़ी रोशनी என்றால் 'போதிய காற்றும் வருவதில்லை, போதிய வெளிச்சமும் வருவதில்லை' என்று அர்த்தம்.

4, ஸம்பாஷணையின்போது நம் வாக்யங்கள் பெரும்பாலும் குறை வாக்யங்களாகவோ அல்லது வரிசை மாறிய வாக்யங்களாகவோ தாம் இருக்கும். இந்தப்பாடத்திலுள்ள பல வாக்யங்கள் அந்த முறையில்தான் அமைந்திருக்கின்றன. கவனித்துப் படிக்கவும்.

5. रोज़ पिचकारी लेनी चाहिए என்றால் आपको रोज़ पिचकारी लेनी चाहिए என்றுதான் அர்த்தம். இந்த आपको முதல் வாக்யத்தில் மறைந்திருப்பதைக் கவனிக்கவும்.

6. डरिए मत என்றால் मत डरिए என்றுதான் அர்த்தம். வார்த்தைகளின் இத்தகைய வரிசை மாற்றம் சொல்லழகை முன்னிட்டுச் சில ஸமயங்களில் செய்யப்படுவதுண்டு-''கண்டேன் ஸீதையை'' என்ற மாதிரி!

7. साहब என்பது जी போன்ற ஒரு மர்யாதைச்சொல். அதை முஸல்மானின் பெயருடன்தான் உபயோகிக்கவேண்டுமென்பதில்லை; ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய எல்லோருக்கும் உபயோகிக்கலாம்.

(ஈ) சொற்களஞ்சியம்

शब्द-भंडार

रोग (ஆ. பா)—बीमारी (பெ. பா.) ரோகம், வ்யாதி, நோய்

चिकित्सा—(பெ. பா)इलाज (ஆ. பா.) சிகித்ஸை (Treatment)

जीना—உயிர் வாழ்தல்,

मौत—(பெ. பா.)சாவு.

खांसना-இருமுதல்; खांसी-(பெ. பா.) இருமல்.

जान—(பெ. பா.) உயிர்; जान लेना —உயிரை வாங்குதல், கொல்லுதல், மிகவும் வருத்துதல்.

बुखार (ஆ பா)—ज्वर (ஆ. பா.) —ஜ்வரம் (Fever.)

मज़ाक़—(ஆ. பா) கேலி, கிண்டல், தமாஷ்

साथ छोड़ना—விட்டுத் தொலைத்தல் தொடராமலிருத்தல்,

अजी—(பேச்சு வழக்கத்தில் जी என்ற வார்த்தையே சில ஸமயங்களில் अजी என்றும் உச்சரிக்கப்படுவதுண்டு.)

साफ़-सुथरा-साफ़-साफ़ (சொல்லழகுக்காக இப்படி ஒரே அர்த்தமுள்ள இருசொற்களை சேர்த்து உபயோகிப்பதுண்டு.)

हवा—(பெ. பா.) காற்று; हवादार—காற்றோட்டமுள்ள.

बुरा—கெட்ட; बुराई—(பெ. பா.) கெடுதி

सताना—தொந்திரவு செய்தல், உபத்ரவித்தல், வருத்துதல்.

खाद—(பெ. பா.) எரு (Manure)

मच्छर—(ஆ பா.) கொசு.

नीची ज़मीन—தாழ்ந்த நிலம், பள்ளம்

ऊँची ज़मीन—உயர்ந்த நிலம், மேடு.

फ़र्श—(ஆ பா.) தளம் (Floor)

सूखना—உலர்தல், सूखा—உலர்ந்த

नम—நமுப்பான, ஈரமான;

नमी—(பெ பா)நமுப்பு, ஈரம்.

खिड़की—(பெ. பா) ஜன்னல்

रोशनी—(பெ. பா) வெளிச்சம்

दमा—(ஆ பா.) மார்ச்சளி—இழுப்பு நோய் (Asthma)

क्षयरोग—(ஆ பா.) க்ஷயரோகம்

फेफड़ा—(ஆ பா) ச்வாஸப்பை (Lung)

बदलना—மாற்றுதல்

ढूंढना-खोजना-तलाश करना-தேடுதல்.

पिचकारी—(பெ. பா.) பீச்சாங்குழாய் (Syringe)

पिचकारी देना—'எனிமா' வைத்தல், ஊசி போடுதல், இஞ்ஜெக்ஷன் செய்தல்; पिचकारी लेना—'எனிமா' வைத்துக்கொள்தல், ஊசி போட்டுக் கொள்தல், இஞ்ஜெக்ஷன் செய்து கொள்தல்.

हिस्सा (ஆ பா.) — भाग (ஆ பா)— பாகம், பகுதி.

बोतल —(பெ பா)பாட்டில் (Bottle)

आउन्स—(ஆ. பா.) அவுன்ஸ் (Ounce)

टहलना—உலாவுதல்.

मामूली—साधारण—ஸாதாரணமான,

चंगा—स्वस्थ—ஸ்வஸ்தமான, ஸ்வஸ்தமாக

பயிற்சி 31-अभ्यास 31

"रोग और चिकित्सा" என்ற அம்சத்தைத் தமிழில் மொழி பெயர்க்கவும்

"रोग और चिकित्सा"—इस अंश का तमिल में अनुवाद कीजिए।

(விடைகள் அடுத்த இதழில்)

(उत्तर अगले अंकमें)

जय हिंद! जय हिंदी!

மேஷ ராசி

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

சனி குரு போன்ற பிரபல கிரகங்கள் இம் மாதம் மேஷ ராசிக்காரர்களுக்குச் சாதகமான நிலைமையிலேயே இருக்கின்றன. ஆனால் சில்லரைக் கிரகங்கள் அவ்வப்போது தற்காலிகமாக ஏமாற்றங்களையும், ஹிம்ஸைகளையும், உண்டு பண்ணலாம், முதல் வாரம் பண விஷயத்தில் சந்தோஷத்தைக் கொடுப்பதாக இல்லை. அக்டோபர் மாதம் 23 ந்தேதி முதல் திட்டமாகப் பண விஷயத்தில் வசதிகள் அபிவிருத்தி பெறுமென்பதற்கான ருசுக்களுண்டு இதேபோல நிர்ப்பந்தமான செலவுகளும் ஏற்படும் அக்டோபர் 29-ந் தேதியிலிருந்து செவ்வாய் பெறும் இட விசேஷத்தால் ஹேஷ்ய விவகாரங்களில் ஈடுபாடு ஏற்படும் இது லாபகரமாக முடியாது மனோபலம் பலவீனப்பட்டு நேர்மையாக, திட்டப்படி யோசித்து எதையும் செய்ய முடியாதிருக்கும் குழந்தைகளில் ஒருவருக்கு நிலைமை சுகமாயிராது கலியாணமாகாதவர்களுக்கு இந்த கட்டத்தில் விவாகமாகலாம். இதன் மூலம் அனுகூலமும் அடையலாம் இரண்டாம் பகுதியில் குடும்பத் துறையில் சந்தோஷமாயிருக்கலாம் கிட்டிய பந்துக்களினால் ஏதேனும் கவலைகளிருக்கும். வயிற்றுக் கோளாறினால் ஆரோக்கிய நிலை பாதிக்கப்படும் சிலருக்கு வயிற்றுக் கடுப்போ கடும் ஜுரமோ ஏற்படும் தூர இடத்துப் பிரயாணம் ஒன்றும் சம்பவிக்கக் கூடும். உத்தியோகத்தில் உபாயமான அபிவிருத்தியிருக்கும், இரண்டாம் பகுதியிலிருந்து செய்யும் சேவைக்கான பாராட்டுக் கிடைக்கும் இது கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி யடைந்துவரும், பிறர் பணத்தையோ அல்லது ஆபீஸ் பணத்தையோ கையாளும்போது உஷாராயிருக்க வேண்டும், இது சம்பந்தமாகச் சில தவறுகளேற்பட்டு சிறிது காலம் கவலைப்படும்படி நேரும் வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதிதான் ஏற்றது, இதற்கிடையில் பண முடை ஏற்படும் கூட்டு வியாபாரம லாபகரமாயிருக்கும் இதைப்பொறுத்த நிபந்தனைகள் சற்று அபிவிருத்தி பெறும். சில இனங்களில் புதிய கூட்டு வியாபார முறையில் இறங்கலாம்.

அக்டோபர் 18 21, 25, 26, 31 நவம்பர் 3, 4, 8, 9, 12, 14 16, தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரம்.

விருஷப ராசி

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய

இம்மாதம் விருஷப ராசிக்காரர்களுக்குள்ள கிரக மாற்றங்கள் காரணமாக கெடுதலான சக்திகள் அதிகரித்திருக்கின்றன எனவே சென்ற மாதத்தைப் போலக்கூட இம் மாதம் இருக்குமென்று சொல்வதற்கில்லை. 8-வது இடத்துச் செவ்வாயினால் குடும்பத் தொல்லைகளோ அல்லது அனாவசியமான அவதூறுகளோ ஏற்படும். மனைவியின் தேக சுகம் இந்த கட்டத்தில் பாதிக்கப்படும், செலவு கட்டு மீறிப் போவதாயிருக்கும். தேகத்தில் சூடு அதிகரிப்பதாலும், வயிற்றில் கோளாறு ஏற்படுவதாலும் நவம்பர் முதற் பகுதியில் சொந்த ஆரோக்கியம் பற்றிச் சிறிது கவலை ஏற்படும். சமூகத்தில் சந்தோஷமாயிருக்கமுடியாது சில இனங்களில் இம்மாத முதற் பகுதியில் கல்யாணங்கள் நிகழலாம் இரண்டாம் பகுதியில் விவாக முயற்சிகள் வீணாகும். அக்டோபர் கடைசிப் பகுதி முதல் பணமுடை அதிகரித்து கைமாற்று கடன்வாங்க நேரும் பண விஷயமாக உறவினர்களிடம் ஜாக்கிரதையோடிருக்கவேண்டும் இல்லையானால் அவர்களுடைய அதிருப்திக்கு ஆளாக நேரும். சொத்து விஷயமாக எடுக்கும் நடவடிக்கைகளிலும் ஜாக்கிரதைவேண்டும் உத்தியோகத்துறையில் கவலைகளிருக்கும் அருகிலிருப்பவர்களுடன் சந்தோஷமாயிருக்கமுடியாது சிறிது காலத்துக்கு லீவ் எடுத்துக்கொள்ளலாமாவென்று கூடத் தோன்றும், வீட்டுப் பிரச்னைப்பற்றி இந்தக் கட்டத்தில் கவலை மூளும், வியாபாரிகளுக்கு முதற்பகுதி ஓரளவு சாதகம் பணக்கஷ்டம் அதிகமாகத் தெரியும். இரண்டாம் பகுதியில் கூட்டு வியாபாரம் சுகப்படாது குதிரைப் பந்தய வியவகாரங்களில் நஷ்டமே.

அக்டோபர் 18, 21, 24, 25 26 30, 31 நவம்பர் 1 முதல் 5, 8, 9, 13, 14, 16 தேதிகள் இவர்களுக்கு உதவிகரமான தினங்கள்

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3-ம் பாதம் முடிய

இந்த ராசிக்காரர்களுக்கு குருவும், சுக்கிரனும் இம்மாதம் முறையே 9, 5-வது இடங்களில் சாதகமாயிருப்பதால் சேவைசெய்யும் இலாகாவிலும் பொது விஷயங்களிலும் ஆதரவிருக்கும், மற்ற கிரகங்களெல்லாம் சரியாக அமையக்காணோம் மேலே சொன்ன இரண்டு நல்ல கிரகங்களும் இம்மாத இறுதிக்குள் தெளிவாக நன்மைகளைச் செய்யும். அக்டோபர் 29-ந் தேதிக்குப் பிறகு பண விஷயத்தில் அனுகூலமுண்டு இந்தத் தடவை திடீரென்று ஏதாவது ஒரு வகையில் பண லாபம் ஏற்படுமெனக் காண்கிறது வருமான வழிகள் அதிகரிக்கும் சகோதரர் போன்ற உறவினர்களிடம் அனுதாபம் ஏற்படும் 24-ந் தேதி முதல் மனோ பாவத்தைப் பொறுத்த கிரகம் ஸ்வக்ஷேத்திரமடைவதால் புதிய விஷயங்களைப்பற்றி ஆழ்ந்துயோசிக்கும்படியிருக்கும். 5-வது வீட்டுக்குடையு சுக்கிரன் நீசமாயிருப்பதால் குழந்தைகளில் ஒருவரைப்

பற்றி கவலைப்படும்படி நேரும் வெகுகாலமாகக் குழந்தைகளை விட்டுப் பிரிந்திருந்தபெற்றேர்கள் இம்மாத இரண்டாம் பகுதியில் அவர்களைச் சந்திக்கும்படி ஏற்படலாம். முதல் பகுதியில் ஆரோக்கியம் எதிர்பார்த்த அளவு திருப்திதருவதாயிராது. உத்தியோகத்தில் வேலைப் பளுவும், பிறருடன் ஏற்படும் தகராறும் மனதைத் தீவிரமாகக் கவர்ந்து நிற்கும் மேலதிகாரிகளுடன் தகராறே சண்டைகளோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் வயதில் சிறிய ஊழியர் ஒருவரால் மேலதிகாரிக்குத் தொந்திரவேற்படலாம் வேலையில் சொற்ப மாறுதல் இம்மாத மேற்படலாம் எதிர்பாராத தடைகள் இடையே குறுக்கிட்டபோதிலும் வியாபாரிகள் இம்மாத இரண்டாம் பகுதியில் நல்ல ஹேஷ்ய வியாபாரங்களைச்செய்ய முடியும். கூட்டு வியாபாரத்துக்குச் சாதமாயில்லை

அக்டோபர் 18—26, 28 31. நவம்பர் 3 4, 5, 9, 13, 14, 16 தேதிகள் இவர்களுக்குச் சிறப்பானவை.

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய

இந்த ராசிக்காரர்களுக்குப் போன மாதத்திலிருந்ததைப் போல இம்மாதம் அவ்வளவு மோசமான நிலைமையிராது. குடும்பத்தில் அபிவிருத்திகரமான மாறுதலேற்படுவதே இம்மாதத்தில் நிகழக்கூடிய முக்கியமான விஷயம் செவ்வாயைச் சனி பார்க்கிறுர் இதனுல் குழந்தைகள், உத்தியோகம், முதலீடுபற்றிய விஷயங்களில் அனுவசியமாக உணர்ச்சி பொங்கும்படியான நிலைமைகளேற்படலாம். இரண்டாம் பகுதியில் இவர்களுக்கு சௌகரியமேற்படும் சிலருக்கு ஜாகை மாற்றமோ அல்லது பணக்காரர்களானுல் வீட்டின் பேரில் பணம் போடுவதோ ஏற்படும். 4-வது வீட்டில் சுக்கிரனிருப்பதால் வாகனப்பிராப்தி ஏற்படவும் இடமுண்டு நண்பர்களின் உதவி இந்த சமயத்தில் உருப்படியாகவிருக்கும். பாக்கியாக நின்ற தொகை வசூலாகும். பண அபிவிருத்தி தெளிவாகத் தெரியும் வெளியிடப் பழக்கங்களுக்கு இது சந்தோஷமான மாதம் செலவு முன்னையும்விட அதிகரிக்கும் அனுகூலம் தரும் வகையில் புதிய நண்பர்களேற்படுவர் முதல் பகுதியில் 3-வது இடத்தில் 4 கிரகங்களிருப்பதால் உறவினர்களால் கவலைகளேற்படும் தெற்கு திக்கில் ஒரு பிரயாணம் நேரலாம். திடீரென்று விவாகம் நிகழக்கூடும் உத்தியோகத்தில் உபாயமாக அபிவிருத்தியிருக்கும், செய்யும் வேலை மகிழ்ச்சி தருவதாக விளங்கும். சூழ்நிலையும் உற்சாகமூட்டத்தக்கதாயிருக்கும்

வியாபாரிகளுக்கு சுமாராயிருக்கும் லாபத்துக்கு இரண்டாம் பகுதி ஏற்றது கூட்டு வியாபாரம் அதிக லாபம் தருவதாயிருக்கும். ஆபீஸில் ஏதேனும் மாறுதலேற்படும்.

அக்டோபர் 18—26 31 நவம்பர் 1, 3, 4. 5, 8, 9, 12. 13, 14. 16 தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

> **1950-ம் ௵ அக்டோபர் ௴ 18௳ முதல் 1950-ம் ௵ நவம்பர் மாதம் 16௳ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.**

ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

இம் மாதத்தில் ஸிம்மராசிக்காரர்களுக்கு மிகவும் முக்கியமாக விளங்கக்கூடிய விஷயம். பண விவகாரத்தைப் பொறுத்ததாகும் கொடுக்க வேண்டிய பாக்கி, வரவேண்டிய பாக்கி இவற்றைப் பற்றிய கவலைகளிலிருந்து வரும். செலவு கடுமையாயிருந்தபோதிலும் அவசியமான தேவைகளுக்குப் பண வசதி உரிய காலத்தில் கிட்டுவதாகும். சரியானபடி கவனித்துச் செய்யும் பட்சத்தில் பழைய வருமான இனம் மிகவும் பயன் தருவதாயிருக்கும். இரண்டாம் பகுதியில் உறவினருக்கு உதவுவதோ அல்லது அவர்களிடம் உதவி பெறுவதோ நிகழும். அபூர்வமாகவுள்ள உறவினரையோ அல்லது சகோதர சகோதரியையோ சந்திக்கக்கூடும் தீவிரமாக நேரில் சிரத்தை கொள்ளும்படியாக ஏதாவது சுப நிகழ்ச்சிகள் வரலாம், ஒரு பிரயாணம் சம்பவிக்க இடமுண்டு படிப்பதும், எழுதுவதும் முக்கியமாகப்படும், சமூகத்தில் மிகவும் தீவிரமான ஈடுபாடுகளிருக்கும். அக்டோபர் மாத இறுதிக்குள் குடும்பத்தில் திடீரென்று ஏதாவது மாறுதலேற்படும் இல்லையானுல் இப்போது இருக்கும் ஜாகையைபற்றி தொடர்ந்து பூசல்களிருந்துவரும், இம்மாத இரண்டாம் பகுதியில் குழந்தைகளில் ஒருவர் ஆரோக்கிய நிலை கெட்டிருக்க நேரிடும். குடும்பத்திலும், உத்தியோகத்திலும் மன நிம்மதியிராது. உடம்பில் சூடு அதிகமாயிருக்கும், ஆகவே இவ்விஷயமாக முக்கிய கவனம் செலுத்தவேண்டும் பணக்காரர்கள் ஏதாவது முதலீடுகள் செய்யவேண்டுமென்றிருந்தால் அது முதல் பகுதியில்தான் சாத்தியம் உத்தியோகத்தில் ஏதாவது அனுகூலம் இருக்கலாம் பெரியவர்களுடன் வைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஜாக்கிரதைவேண்டும். இல்லையேல் மனஸ்தாபம் வந்துசேரும் செய்யும் வேலை மகிழ்ச்சிகரமாயிருக்கும். இரண்டாம் பகுதியில் ஒரு மாற்றமேற்படுமென்று கிரகநிலையிலிருந்து காண்கிறது. வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்லது இத்துறையில் ஏதாவது மாறுதல்கள் தென்படலாம்

அக்டோபர் 18 - 26, 29 31, நவம்பர் 1, 2 3 4 9, 10. 12, 13, 14 16 தேதிகள் இவர்களுக்கு அனுகூலம்.

கன்னியா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய

பிரபல கிரகங்களான குருவும், சனியும் இன்னும் இந்த ராசிக்காரர்களுக்கு மோசமான நிலைமையிலேயே இருக்கின்றனர். ஆனுல் சனி 12-வது இடத்திலிருந்ததைவிட லக்னத்தில் இருப்பது விசேஷம் சகல விஷயங்களிலும் பொறுப்பு நிறைந்திருக்கும் அன்றுட வாழ்வில் நம்பிக்கை பிறக்கும். முதல் பகுதியில் ஆரோக்கிய நிலையோ, குடும்ப நிலையோ திருப்திகரமாகயிராது இரண்டாம் பகுதியில் குடும்பத்தில் திடீரென மாறுதலேற்படும். முதலீட்டுக்கு இது தகுந்த தருணமன்று முதற்பகுதியில் உறவினர்பற்றி ஏதேனும் கவலைமூளும். வருமானம், வசதி இரண்டுக்கும் இரண்டாம் பகுதி எவ்வளவோ சிரேஷ்டம் ஒரு வைபவம் நிகழும் பிறருக்குத் தரகராயிருந்து சரக்குகள் வாங்குவதும் விற்பதும் நிகழும். செலவு கடுமையே. சூரியன், சுக்கிரன் இவர்கள் காரணமாகக் கண்ணில் ஏதாவது கோளாறு வராமற்போகாது. ஏற்கனவே இதனுல் கஷ்டப்படுபவர்களாயின் நிலைமை இன்னும் மோசமடையும் அவசரத்துக்குக் கடன் வாங்கும்படியிருக்கும் தடைகள் காரணமாகக் கல்யாண முயற்சிகள் வெற்றி பெருமல் போகும் உத்தியோகத்தில் வேலை பலம். இரண்டாம் வாரமுதல் காரியாலய விஷயங்கள் பற்றி கவலைகளேற்படும். மேலதிகாரி

களுடன் தகராறு வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். முதல் பகுதியில் காணுமல் போகும் ஒரு கடிதம் பற்றி கோளாறு ஏற்படும். இந்த கட்டத்தில் எழுத்துப்பட எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது இரண்டாம் பகுதி தான் வியாபாரிகளுக்கு ஏற்றது. முதல் பகுதியில் ஹேஷ்யங்களை முன்பின் பாராமல் செய்யலாகாது.

அக்டோபர் 18,—26, 31. நவம்பர் 2, 5, 4, 9, 10, 12 14, 16 தேதிகள் இவர்களுக்கு சிலாக்கியம்,

துலா ராசி

சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய

இந்த ராசிக்காரர்களுக்கு சென்ற ஸெப்டம்பர் 20-ந் தேதியிலிருந்து 7½ நாட்டுச் சனியன் ஆரம்பம். இந்த இடத்துக்கு சனி வருவது இரண்டாம் தடவையாயிருக்குமானுல் அது எதிர்கால அதிருஷ்டத்துக்கு மிகவும் ஆக்கமளிக்கக்கூடியதாயிருக்கும். இம்மாதம் சுமாராகவும் விளங்கும். ஏற்கனவே உச்சத்திலிருந்துவரும் செலவுகள் ஒருபுறமிருக்க இப்போது திடீரென்று சற்றும் எதிர்பாராத செலவுகளும் வந்துசேரும். பலமாகச் செலவுகளைச் செய்யும்படியாக ஏதேனும் விவாகங்கள் நிகழலாம் வருமான மார்க்கம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. பாக்கி நின்ற தொகையை வசூலிப்பது மிகவும் தாமதமாக நடக்கும். கடன் கொடுப்பது, வாங்குவது சரியாக முடியாது கடன் கொடுத்த தொகை அளவுக்கதிகமான காலம்வரை முடங்கிக் கிடக்கும். சொந்த ஆரோக்கியமோ அல்லது மனைவியின் ஆரோக்கியமோ திருப்திகரமாயிராது இரண்டாம் பகுதி முதல் பண விஷயங்களிலுள்ள வசதிகள் அபிவிருத்தியடையும் கூடியவரை குடும்ப வட்டாரத்தில் தகராறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலருக்கு யாத்திரை போக நேரும். வயதில் முதிர்ந்த உறவினர்களைச் சந்திக்குப் வாய்ப்பு கிட்டலாம் வெளியிடப் பழக்கங்களில் சந்தோஷமுண்டு. ஆத்மார்த்த விஷயங்களைப் பற்றிய நூல்களை படிக்கும் உணர்வு இரண்டாம் பகுதியில் ஏற்படுவதாகும் வயது, உறவு, இதை ஆதாரமாகக் கொண்டு யோசனை சொல்லுபவர்களை நம்பி அவற்றில் இறங்கக்கூடாது. புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். பொறுப்பு அதிகமாகும் என்பது ஒன்றைத் தவிர உத்தியோகத்தில் எவ்வித ஆதாயமும் இல்லை வேலையில் மனேகரமான மாறுதலேதேனும் ஏற்பட்டாலும் ஏற்படும். ஆனுல் அங்ஙனம் நேருமாயின் அது பளுவானதாகவேயிருக்கும், வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதி ஏற்றது வியாபாரம் அபிவிருத்திகரமான மாறுதல்களையடையும்.

அக்டோபர் 18,—26 30. 31 நவம்பர் 1, 2. 3, 5, 9, 12, 13. 14, 16 தேதிகள் இவர்களுக்கு வசதிகரம்.

விருச்சிக ராசி

விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய

சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் தரமாகும் கிரக நிலைமையெல்லாம் இப்பொழுது அனுகூலமாயிருக்கிறது சனி ஏகாதச ராசியில் பிரவேசிக்கிறுர். இதனுல் உத்தியோக நிலை உறுதிப்படுவதுடன், இது முதல் காரியாலயத்திலும். லோகாதய உடைமைகளுக்கும் உதவி ஏற்படும். இரண்டாம் பகுதியைக் காட்டிலும் முதற் பகுதியில் குடும்பத்தில் சந்தோஷமாயிருக்க இயலும் லக்னத்தில் செவ்வாய் இருப்பதாலும், சனி லக்னத்தைப் பார்ப்பதாலும் மனைவியின் தேகசுகம் குறித்துக் கவலையேற்படும், தீவிரமாகச் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி ஏதாவது விவாகம் நிகழலாம். பண சம்பந்தமான அபிலாஷைகள் கைகூடும். புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள் இவர்களால் நன்மை பிறக்கும் வாழ்க்கையின் மனேபாவத்திலிருந்து வேறுதிக்கில் கவனத்தைத் திருப்பும்படி நண்பர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. வெகுகாலம் பிரிந்திருந்த உறவினரையோ அல்லது நண்பரையோ சந்திக்கக்கூடும். வெளியிடப் பழக்கங்கள் எவ்வித பாதகமும் இல்லாமல் சந்தோஷத்தைத் தருவதாயிருக்கும் பணக்காரர்களானுல் முதற் பகுதியிலேயே நிலம் வீடு அல்லது குறைந்த பட்சம் காரிலேயாவது பணத்தை முதலீடு செய்யும்படி நேரும். நடவடிக்கைகளில் அதிக அவசரப்பட்டு உணர்ச்சி வசமாகி எதையும் செய்யக்கூடாது இல்லையானுல் பின்னர் வருந்தவே நேரும். உத்தியோகத்தில் ஏதாவது மாறுதலேற்படும். அதிகமான பொறுப்பேற்க நேரும், ஆபீஸரானுல் பெரிய அளவிலுள்ள சிப்பந்திகளை நிர்வகிக்கும்படியாயிருக்கும். அவசரப்பட்டு எதையும் நிதானிக்கக்கூடாது வியாபாரிகளுக்கு இந்த கட்டம் நல்லதென்பதில் சந்தேகமில்லை. இவர்களது வியாபாரம் திருப்திகரமாயிருக்கும். லாபமோ ஆச்சரியப்படும்படி யிருக்கும். கூட்டு வியாபாரம் மிக்க லாபகரமாய் விளங்கும் கூட்டு வியாபாரத்தில் நாட்டமுள்ளவர்கள் அதில் பிரவேசிக்க இதுவே தருணம். குதிரைப் பந்தயக்காரர்களுக்கு முதல் பகுதிதான் லாபகரம்

அக்டோபர் 18-26 29 31 நவம்பர் 1, 5 8, 9, 10, 12, 14, 16 தேதிகள் இவர்களுக்கு மேலானவை.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

இந்த ராசிக்காரர்களுக்குச் சனி ஜீவனஸ்தானத்தில் பிரவேசிக்கிறுர் இதனுல் உத்தியோகம் குடும்பம் ஆகிய இரு துறைகளிலும் அதிகப் பொறுப்புகள் ஏற்படும் பண விஷயத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி காணப்படும். 11—வது இடத்தில் சூரியனிருப்பது வாழ்க்கையின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ள உதவும் 12—வது இடத்திலுள்ள செவ்வாயைச் சனி பார்ப்பதால் திடீர் திடீரென்று அதிகமான செலவுகள் வந்துசேரும் விஷமமும். பொருமையும் உள்ள எதிரிகள் அவதூறு செய்வார்கள் இரண்டாம் பகுதியில் இதன்வேகம் தணியும். புத்திரர்களில் ஒருவரைப்பற்றிக் கவலை ஏற்படும். இதன்பயனுகச் செலவேற்படும் சகோதரர் போன்ற கிட்டிய பந்துவின் நிலைமை தரமாயிராமல் இந்த ராசிக்காரர்களுடைய பண சகாயத்தை எதிர்பார்க்கும்படி நேரலாம். வாழ்க்கை உருவாவதுபற்றிச் செய்யும் முடிவு இம்மாதம் அடியோடு தவருகவிருக்கும். கூடியவரை அவசரமான, கண்மூடித்தனமான முடிவுகளைச் செய்யவேண்டாம். பண வசதிகளுக்கு இரண்டாம் பகுதி பரவாயில்லை. புதிய நண்பர்கள், உறவினர்கள் தொடர்புகளும் ஏற்படும். பாக்கிகளைத் திரும்ப வசூலிக்க முடியும் பெரியவர்கள் ஆதரவிருக்கும். இம்மாதத்தில் சொந்த ஆரோக்கியமும்

1950-அக்டோபர் ௴ 18-ந்தேதியுள்ள கிரக நிலை

ராகு			உரானஸ்
குரு	ராசி		
ந்திரன்	செவ்வாய்	சூரியன்	சனி புதன் சுக்கிரன் கேது நெப்டியூன்

திருப்தி கொடுக்காது உத்தியோகத்தில் வேலை கடுமை. கீழ்த்தரச் சிப்பந்திகளின் ஒத்துழைப்பு திருப்திகரமாயில்லாதிருப்பினும் செய்யும் வேலை பாராட்டுக்குரியதாகவிளங்கும். வேலைக்காரர்கள் விஷயத்தில் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாம். இல்லையானால் அவர்களால் மன நிம்மதி கெடும் முதல் பகுதி வியாபாரிகளுக்குச் சுகமாயில்லை. சகல விதத்திலும் இவர்களுக்கு இரண்டாம் பகுதியே உற்சாகம் தருவதாயிருக்கிறது முதல் பகுதியில் செலவு கடுமை

அக்டோபர் 18, 26, 29 31, நவம்பர் 1. 2, 3, 4 5 8, 9, 10 12, 14, 16 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய

இந்த மாதத்தில் மகர ராசிக்காரர்களுக்குச் சாதகமான கிரக நிலைமை தென்படுகிறது. சூழ்நிலை முன்னைக்காட்டிலும் உற்சாகம் தருவதாயிருக்கும். ஆரோக்கியம் திருப்திகரமான நிலைமையை அடையும். சென்ற மாதத்தைவிடப் பண விஷயத்துக்கு இம்மாதம் எவ்வளவோ மேல். முதற் பகுதியில் திடீரென்று திரவியம் கிட்ட சந்தர்ப்பமேற்படலாம். கடனுகப் பணம் கொடுப்பதற்கில்லை இரண்டாம் பகுதி வெளியிடப் பழக்கத்தில் சந்தோஷத்தைக் கொடுக்கும். வாழ்க்கையை முன்னணிக்குக் கொண்டுவரத் தக்கபடி பணக்கார உறவினர்களைச் சந்திக்கலாம் புதல்வர்களில் ஒருவர் தமது வாழ்க்கை அபிவிருத்தி மூலம் ஆச்சர்யத்தை உண்டு பண்ணலாம் உறவினர்களிடம் ஆதரவு காட்டி அவசியமானபோது அவர்களிடம் ஆதரவு காட்டி அவசியமானபோது அவர்களுக்கு உதவிசெய்யலாம் முதல் பகுதியில் தூர இடத்திலிருந்துஒருஉறவினரைப்பற்றி கேட்கத்தகாத சேதியைக் கேள்விப்பட நேரலாம். பணக்காரர்கள் நிலத்தின் பேரிலோ, விலை உயர்ந்த ஆபரணங்களிலோ அல்லது காரிலோ பணத்தை முதலீடு செய்ய இது தகுந்த தருணம். இரண்டாம் பகுதியில் செலவு கடுமை நண்பர்களிடம் அந்தரங்க சுத்தியோடிருக்க நேரும். ஆனுல் அவர்கள் அப்படியிருக்கமாட்டார்கள் முதற் பகுதிக்குப் பிறகு அவர்களை நம்பிப் பிரயோசனமில்லை. இவர்கள் அனுவசியமாக இந்த ராசிக்காரர்களைத் தூற்றுவார்கள் வீடு மாற்றிக் கவலை ஏற்பட இடமுண்டு உத்தியோக விவகாரத்துக்கு இது சிறந்த மாதம் மகிழ்ச்சிகரமான மாறுதலை இத் துறையில் எதிர்பார்க்கலாம். இது இரண்டாம் பகுதியில் பலன் கொடுக்கும். வியாபாரிகளுக்கு முதற் பகுதியில் நல்ல நடப்பு உண்டு, திடீரென்று ஏதாவது இவர்களுடைய வியாபாரத்தில் லாபமடிக்கும். இம்மாத முதல் எதிர்கால நிலை பிரகாசப்படும் அயல் நாட்டு வியாபாரத்தில் வெற்றிகரமாக முயற்சி செய்யலாம்

அக்டோபர் 18, 26, 29, 31, நவம்பர் 1. 3 4. 5, 9. 12, 13. 14, 16 தேதிகள் இவர்களுக்கு பயன் தரத்தக்க தினங்கள்.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய

இம்மாதத்தில் இந்த ராசிக்காரர்களுக்குள்ள கிரகப் போக்கு வெற்றிக்கான நம்பிக்கைகளைக் கொடுப்பதாயிருக்கிறது முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி விசேஷம், குடும்பத்தைப்பற்றியும், எடுத்துக்கொள்ளும் காரியங்கள் குறித்தும் முதல் பகுதியில் அதிகக் கவலையிருக்கும், இரண்டாம் பகுதி முதல் குடும்பத்தவருடைய தேக அசௌகரியம்பற்றிய பிரச்னைகளிராது. சொந்த ஆரோக்கிய விஷயத்திலும் தீவிரமான மாறுதலேற்படும். சென்ற மாதம் வரை வயிற்றுக்கோளாறினுல் கஷ்டப்பட்டுவந்திருக்கும்பட்சத்தில் இனி அவ்வுபாதை இராது. ஆகார விஷயங்களை தேக நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள நேரும், வாயு உபத்திரவத்தினுலேயே இனி மேல் தொந்திரவுகள் ஏற்படும். தூர இடத்துக்குப் போகும்படி ஒரு பிரயாணம் வரும். குடும்பத்தில் வயோதிகர் யாரேனும் நோய்வாய்ப்பட்டு அதனுல் சிறிது காலம் கவலைப்படும்படி யிருக்கும், அனுகூலகரமான நண்பர்களும், தொடர்புகளும் ஏற்படுவதாகும். வாழ்விலுள்ள அந்தஸ்துக்கு ஏற்றவாறு அக்டோபர் கடை சிவாரம் அன்ருட நிகழ்ச்சியில் முக்கியமாக விளங்கும் உயர்தர அந்தஸ்திலுள்ளவர்களை அப்போது சந்திக்கக்கூடும், வெளியிடப் பழக்கத்துக்கு இரண்டாம் பகுதி ஏற்றது அதிகமாகச் சிரத்தை கொள்ளும்படி ஏதேனும் சுப நிகழ்ச்சிகள் வரலாம் நண்பர்கள், அபிமானிகள் இவர்கள் பார்வையில் கண்யமான ஸ்தானத்தை வகிக்கலாம். உத்தியோகத்திலும் முக்கியமாக விளங்கும் மாதமிது அக்டோபர் இறுதிக்குள் பொது வைபவத்தில் ஏதாவது முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும்படியிருக்கும். உத்தியோகத்தில் ஏதேனும் மாறுதலிருக்கலாம். பொது ஆதரவும், மேலதிகாரியின் ஆதரவும் இரண்டாம் பகுதியில் தேடிக் கொள்ளலாம், வியாபாரிகளுக்கும் நல்லதுதான். முதல் பகுதியில் தூர இடத்து வியாபாரமும் இரண்டாம் பகுதியில் அயல்நாட்டு வியாபாரமும் லாபகரமாயும் உற்சாகம் தருவதாயும் விளங்கும்

அக்டோபர் 18 26 28 31 நவம்பர் 1 3 4, 5, 8 9, 12, 13, 14 16 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்தவை.

மீன ராசி

பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய

சனிப் பெயர்ச்சியால் இந்த ராசிக்காரர்களுடைய விவகாரங்கள் அபிவிருத்தியடைந்துவிடக் காணும். ஆனுல் விரோதமான சக்திகள் குறைந்திருக்கின்றன 7-வது இடத்தில் உள்ள சனியை 'கண்டக சனி' என்று சொல்வார்கள். கெட்ட தசா புக்தி நடப்பிலிருந்தால் அப்போது இந்த இடத்திலுள்ள சனி எதிர்பாரத கெடுதலான நிலைமையை உண்டுபண்ணக்கூடும். மனைவியின் ஆரோக்கியத்தைக் கோளாறு அடையச் செய்வதும், பண விஷயத்தில் அபிவிருத்தி ஏற்படச் செய்வதும், இந்தக் கிரகத்தின் வேலை நீச சூரியன் 8-லும், நீசமுற்ற 8-வது வீட்டுக் கிரகத்தினுலும் எதிர்பாராத சங்கடங்கள் ஏற்படும். தேக சுகவீனத்தைக்கூட உண்டு பண்ணும். 4-ல் புதன் இருப்பது ஒரு கல்யாணத்தைக் குறிப்பதாகும் கிட்டிய பந்து பிணிவாய்ப்படலாம் பண விஷயத்தில் இம்மாதம் திடீரென்று நேரடியாகவோ அல்லது அப்படியின்றியோ பண லாபம் வரக்கூடும். 8-ல் சூரியனிருப்பதால் ஒரு பிரயாணம் நேரலாம். அல்லது உறவினர்களின் விரோதம் காரணமாக அவதூறுக்கு ஆளாக நேரலாம் எந்த உதவிக்காகவும் கோர்ட்டுக்குப் போகக்கூடாது பண விஷயத்துக்கு இரண்டாம் பகுதி ஏற்றது உறவினர்களிடமிருந்தோ அல்லது மனைவி வட்டாரத்திலிருந்தோ இப்போது பணம் வரும் செலவு இம்மாதம் முதல் இன்னும் அதிகரிக்கும் உத்தியோகத்தில் வேலை பளுவடையும். வேண்டுமானுல் ஓய்வுபெற இப்போது லீவுக்கு மனுச் செய்யலாம். மேலதிகாரியை இந்தக் கட்டத்தில் திருப்தி செய்ய முடியாது. வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதி தான் சிறந்தது அப்போது பண லாபம் திடீரென்று வரக்கூடும் கூட்டு வியாபாரமும் இரண்டாம் பகுதியில் தான் அபிவிருத்திபெறும்

அக்டோபர் 18, 26. 28, 30 நவம்பர் 3. 4. 6, 9. 12, 13. 16 தேதிகள் இவர்களுக்கு நலம்

பதிலுக்கு ஸ்டாம்போ, கார்டோ அனுப்பவேண்டும்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்

நெ. 5, வாசுதேவபுரம்.

ஐஸ் ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.

அன்புள்ள விமலாவுக்கு!

7

நல்லவேளை நீ கொஞ்சம் அதிர்ஷ்டசாலி என்றுதான் சொல்லவேண்டும் பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி நம்முடைய ஒரு பிரயத்னம் இல்லாமலே நல்லது சம்பவித்திருக்கிறது என்றுதான் உன் கடிதத்திலிருந்து தெரிகிறது. உன்னுடன் இருக்கும் குடித்தனக்காரர்கள் உனக்கு உதவியாகவும் அனுசரணையாக இருக்கிருர்கள் என்று எழுதியிருக்கிருயே அதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

இந்தக் காலத்தில் சென்னைப் பட்டிணத்தில் குடியிருக்க இடம் என்று ஒன்று அகப்படுவது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அதிலும் நமக்குத் தகுந்த மாதிரியில் இடம் அமைவது மிகமிக துர்லபம் நல்ல கணவனுக அமைவது எவ்வளவு அதிர்ஷ்டமோ அந்த மாதிரிதான் வீட்டு விஷயமும்.

நான் முதல் முதலில் சென்னைக்கு வந்தபோது ஏற்பட்ட ஒரு அனுபவத்தை நினைத்துக் கொண்டால் இப்பொழுதுகூட சிரிப்பாய் வருகிறது

வீடு பேஷான வீடு மாடியில் இரண்டு அறைகள். அதையடுத்து விசாலமான தாழ்வாரம் எதிரே தென்னந்தோப்பு தலையைப் பிய்த்துக் கொண்டு போகிற காற்று. கீழே மூன்று சமையலறைகள். மூன்று படுக்கையறைகள் இது தவிர கூடம் தாழ்வாரம். தெருத் திண்ணை தனித் தனியாக ஸ்நான அறைகள். குழாய் கொட்டினபடி இருக்கும் மூன்றே குடித்தனங்கள். மாடியில் ஒரு அறை. ஒரு சமையலறை. மற்ருெரு அறை ஆக இந்த போர்ஷனை நாங்கள் வைத்துக் கொண்டோம். வாடகை பதினெட்டு ரூபாய்.

மூர்ச்சித்து விழுந்துவிடாதே நான் சொல்வது பதினெட்டு வருஷங்களுக்கு முன்னுல். இப்பொழுதிருந்த வீட்டைப் போய் பார்த்தால் அடையாளமே தெரியவில்லை தெருத் திண்ணை கூடம், தாழ்வாரம் ஒன்றையும் காணும் எல்லாம் சிறு சிறு அறைகளாகத் தடுக்கப்பட்டுவிட்டது மாடியில் ட்டும் ஒரு அறைக்கு இருபத்தைந்து ரூபாய் வாங்குகிருர்கள். இப்பொழுது அந்த வீட்டில் பத்து குடித்தனங்கள் இருக்கின்றன. அப்பொழுது பதினைந்து பேர் புழங்கிய அந்த வீட்டில் இப்பொழுது அறுபது பேர் புழங்குகிருர்கள்.

நல்ல வீடாக அகப்பட்டுவிட்டது என்று என் அகத்துக்காரருக்குச் சொல்லமுடியாத சந்தோஷம்.

குடிவந்து பதினைந்து தினங்கள்கூட ஆகவில்லை இடத்தைக் காலிசெய்துவிட்டு வேறு வீடு பார்த்துக்கொண்டு போய்விட்டோம் எதிரே ஒரு நாகசுரக்காரர் வீடு, ஐந்து பசங்கள் அவர் வீட்டிலேயே இருந்துகொண்டு நாகசுரம் கற்றுக்கொள்கிருர்கள் மாலை நாலு மணியிலிருந்து ராத்திரி பதினென்றரை மணி வரை, பிறகு பின் மாலை மூன்று மணியிலிருந்து, காலை எட்டு மணி வரை ஐந்து நாகசுரங்களிலிருந்தும் கிளம்பும் 'சப்த ஜாலங்கள் எங்களைச் சித்திரவதை செய்துவிட்டன போதாததற்கு எங்கள் வீட்டுக்குள்ளேயே ஒரு குடித்தனக்காரரின் பிள்ளை மிருதங்கம் கற்றுக் கொண்டிருந்தான் அதற்கு வேளை நேரமே கிடையாது நினைத்தபோதெல்லாம் மிருதங்கப் பயிற்சிதான்!

'இன்னும் ஒரு மாதம் சேர்ந்தாற்போல் அங்கே இருந்திருந்தோமோ காது செவிடாகப் போயிருந்திருக்குமென்பதில் சந்தேகமே கிடையாது

இது தவிர எங்கள் மாமா கொஞ்சம் ஆசாரக்காரர் எதிர் அறையிலிருந்த ஒருவர் சிகரெட்டை பப் பப் பென்று' ஊதித் தள்ளியபடியே இருப்பார்.

"ஆசார விஷயம் எப்படியாவது இருந்து தொலையட்டும் வயிற்றைக் குமட்டி வாந்தி எடுக்க வருகிறதே' என்று தலையில் தலையில் அடித்துக் கொள்வார் மாமா.

இதற்கிடையில் மற்ருெரு குடித்தனத்தில் அகமுடையான் பெண்டாட்டி இருவருக்கிடையே எப்பொழுது பார்த்தாலும் சண்டையும் கூச்சலும் அமர்க்களப்படும். சந்தை

இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. இந்த இரைச்சலில் அதெல்லாம் எம்மாத்திரம்?

கடல் மாதிரி வீடு வாடகை ரொம்பவும் குறைவு. என்ன உபயோகம்! அங்கே காணப்பட்ட சூழ்நிலையில் பதினைந்து நாள் நாங்கள் அங்கே காலத்தைக் கடத்தியதே பிரமாத ஆச்சரியம்.

அப்பொழுதானல் கிராக்கி இல்லாமல் இடம் அகப்பட்டுக் கொண்டிருந்தது அதை விட்டு விட்டு உடனே வேறு இடம் மாற்றிவிட்டோம் இப்பொழுது அப்படி இல்லையே ஒரு இடத்தில் வந்து புகுந்து கொண்டால் நல்லதோ கெட்டதோ அதிலேயே அடைபட்டுத்தானே கிடக்க வேண்டும்?



ஆகவேதான் வீடு பார்க்கும் போதே கூடியவரையில் நமக்குத் தகுதியுள்ளதாகப் பார்க்கவேண்டும். ஏதோ இடம் கிடைத்து விட்டதே என்று அவரசத்துக்கு அதில் புகுந்து கொண்டு பின்னிட்டு கஷ்டப்படுவதில் உபயோகமில்லை

நான் மேலே சொன்ன அசௌகரியங்களோடு வீட்டுக்குள்ளேயே இன்னும் பலஅசௌகரியங்களும்இருக்கும்.

அந்த வீட்டில் மூன்று, நான்கு குடித்தனம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நாம் சற்று சுமாரான வருவாய் உள்ளவர்களாகவும். மீதி பேர்கள் குறைந்த வருவாய் உள்ளவர்களாகவும் இருந்துவிட்டால் அதனல் ஏற்படும் தொல்லைகள் ஒருதினுசு பணம், பண்டம், ஏதாவது ஒன்று மாற்றி யொன்று கடன் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஐயோ பாவம் என்று கொடுத்தால் அதைத் திரும்ப வாங்குவதென்பது இந்த ஜன்மத்தில் இல்லை கேட்கும்போது கொடுக்காவிட்டாலோ மனஸ்தாபம்

கடன் என்ற ரீதியோடு போகாமல் விறகு, கரி வெள்ளிப் பாத்திரங்கள், மற்றும் ஏதாவது குழந்தைகளின் நகைகள் களவு போனபடி இருக்கும் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாலோ வீட்டில் கூச்சல் ஓய ஒரு வாரம் பிடிக்கும் பிலு பிலு என்று சண்டைக்குக் கிளம்பி விடுவார்கள். அழுவதற்கு அரை பணம் கொடுத்து ஓய்வதற்கு ஒன்பது பணப் கொடுத்தாலும் என்கிற கதையாக பண்டங்கள் போனல் போகிறது, அவர்கள் கூச்சல் போடாமல் இருந்தால் போதும் என்ருகி விடும்

நம்மை விடத் தாழ்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களுடன் வசிப்பதில் உள்ள கஷ்டம் இது. நம்மை விடப் பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களுடன் வசிப்பதிலும் சில கஷ்டங்கள் இல்லாமலில்லை

பணத்தை ஜலம் மாதிரி வாரி இரைப்பார்கள் அவ்வப்பொழுதுவிதம் விதமான ஆடைகள். ஆபரணங்கள் தின்பண்டங்கள், வாங்கியபடி இருப்பார்கள். சினிமா டிராமா, சங்கீதக் கச்சேரிகள் தவறமாட்டார்கள். அந்தக் குழந்தைகள் நம் வீட்டுக் குழந்தைகளுடன் இல்லாத பெருமையெல்லாம் அடித்துக்கொள்ளும் மனுஷ்ய ஜன்மந்தானே! ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ஒரு சமயம் மனது கஷ்டப்படும்,

நகரத்தில் இவ்வளவு பங்களாக்கள், இவ்வளவு கார்கள், நிமிஷத்துக்கொரு டிரெஸ்; எல்லாம் அனுபவிப்பவர்கள் இருக்கிருர்களே அவர்களையெல்லாம் பார்த்து ஆயாசப் படுவது என்பது எங்காவது உண்டா? ஆயாசப்பட்டுதான் முடியுமா? என்று நீ கேட்பாய், அதெல்லாம் ஒதுங்கின விஷயம் அதைப்பற்றிப் பொருள் படுத்தத் தோன்ருது நெருங்கின இடத்தில் தான் இதெல்லாம் தோன்றும் யாரோ நாகனுத் முதலியாரோ. கேசவ ரெட்டியாரோ, ஆத்மனுத அய்யரோ டணக்காரர்களாக இருந்து தடபுடல் வாழ்க்கை நடத்துகிருர்களென்ருல் அதைப்பற்றி நமக்கு அக்கரையே தோன்ருது நம்மைச்சேர்ந்த நெருங்கிய பந்துக்கள் யாராவது தடபுடல் வாழ்க்கை நடத்தி அவர்களெதிரில் நாம் கஷ்ட ஜீவனம் செய்தால் அப்பொழுது நம்மனது ஒரு மாதிரியாகத்தானிருக்கும். இதில் நீ, நான் என்பதில்லை. மனித ஸ்வபாவம் இது!

ஆகையால் கூடியவரை நம்முடன்கூட இருப்பவர்கள் நமக்குச் சமஅந்தஸ்தில் இருப்பவர்களாக உள்ள இடமாகப் பார்ப்பதுதான் புத்திசாலித்தனம். ஏதோகிடைத்த இடத்தில் புகுந்துகொண்டால். சூழ்நிலை சரியாக அமைந்தால் போயிற்று இல்லாவிட்டால் பின்னிட்டு ரொம்பவும்கஷ்டப்படவேண்டி வரும். முன்போலில்லை நினைத்தால் வேறு இடம் உடனே அகப்பட்டுவிடும் என்பதற்கு

இன்னொரு விஷயம் முக்கியமாக நீ கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். கூட இருப்பவர்கள் எல்லோருக்கும் கூடியவரை ஒத்தாசையாகவும் அனுசரணையாகவும் இருங்கள். ஏனோ தானோவென்று உதாசீனபுத்தியுடன் இருக்காதீர்கள் இந்தமாதிரி சூழ்நிலை நகரங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது எனக்குத் தெரிந்து ஒரு வீட்டில் ஒரு குடித்தனக்காரர் மற்ருெரு குடித்தனக்காரருடன் அந்த வீட்டில் குடி புகுந்தது முதல் அந்த வீட்டை விட்டுப் போகிறவரை ஒருவருக் கொருவர் பேசாமலே போயிருக்கிருர். அவர் அந்த வீட்டில் மூன்று வருஷகாலம் குடித்தனம் செய்திருக்கிருர், எப்படி இருக்கிறது வேடிக்கை!

ஒருவருக்கொருவர் சண்டை மனஸ்தாபம் ஒன்றும் கிடையாது. வேருென்றுமில்லை நகரத்து உதாசீன புத்தி இதெல்லாம். இந்த பாஷனுக்கு நீங்கள் அடிமையாகிவிட வேண்டாமென்றுதான் சொல்லுகிறேன்.

இப்படிக்கு, உன் அன்புள்ள.
சாந்தா.

ஆருடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ 2.

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ 7-8-0 பிரத்யேக ரக்ஷை ரூ. 72-8. வி. பி செலவு தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane :. Madras 5.



99

விஞ்ஞானம்

★

பகவான் சர்வ வியாபியாய் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் முத்தொழில்களுக்கும் கர்த்தாவாய், தன்னிடமிருந்தபோதிலும் காற்றுடன் சம்பந்தப்படாத ஆகாயம்போல் இருக்கிருர். இவ்விதமான பகவத் சொருபத்தையும் யோக மகிமையையும் அறியமாட்டாதவர் அவதார ரகசியத்தை விபரீதமாகக் கிரகித்துக் கொண்டு, பகவானை நிந்தித்துக் கெடுகிருர்கள் தத்துவத்தையும் அதன் காரணமாக அவதார மேன்மையையும் அறிந்த பக்தர்களுள் ஞானிகளும் பகவானை உபாசித்து நலம் பெறுகிருர்கள்' என்று கண்ணன் இவ்வத்தியாயத்தில் 15-ம் சுலோகம் முடியக் கூறிய பகுதியை ஞானம் என்று சொல்லலாம் அடுத்து வரும் நான்கு சுலோகங்களில் கூறப் போகும் விஷயம் விஞ்ஞானம்.

ஞானத்திற்கு 'பகவத் சொருபத்தையறிதல் அல்லது பகவத் விஷயமான சிரவண மனனுதிகளால் உண்டாவது' என்றும், 'பகவான் ஸர்வோத்தமன் என்பதை வேதங்களால் அறிவது' என்றும் பல வகையாக உரை செய்யப்பட்டுள்ளன

விஞ்ஞானம் என்பதற்கு 'பகவத் மகிமைகளை விசேஷமாயறிவது; அல்லது சிரவணுதிகளாலுண்டாய ஞானத்தால் கிடைக்கும் பகவத் தரிசனம்; பகவான் மகிமைகளை வேதங்களாலறிவது' எனப் பல வகையாக உரை செய்துள்ளனர்.

நான் கிருது நான் வேள்வி
நான் சுவதை நான் மருந்து
நான் கருது மந்திர நெய்
நான்தானே—நான் கனலும்
அங்கியதுவும்
அதிற்சிறந்த ஓமமுமாய்
தங்கியது மைவென்ன தான்.

(இ-ள்) நான்—, கிருது—(ஜியோதிஷ்டோமாதி) கிருதுசொருபன்; நான்—, வேள்வி—யக்ஞ சொருபன்; நான்—, சுவதை-(பித்ருக்களுக்குரிய) அன்னம்; நான் மருந்து-நான் ஔடதம் அல்லது தானியாதி சொருபன்; நான்—, கருது மந்திரம்—எண்ணப்படும் மந்திர சொருபன்; நான்தானே நெய்—நானே நெய் முதலிய ஓமத் திரவியங்களாயிருக்கிறேன்; நான்—, கனலும்—அக்னியும், அதிற் சிறந்த அங்கி அதுவும்—அதில் சிறப்பாகச் சொல்லப்படுகிற ஆவேநீயம் காருகபத்தியம் தட்சிணுக்கினியும் ஓமமுமாய் தங்கி அமைவதும் தான்—ஓமாக்கினி சொருபனும் அமைந்தவனுகின்றேன்.

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ:
4 4
ஸ்வதாஹ மஹ மௌஷதம்
மந்த்ரோஹ மஹ மேவாஜ்யம்
3
அஹமக்நிரஹம் ஹுதம்

(இ-ள்) அஹம்—நான்; க்ரது:—(ஜோதிஷ்டோமாதி) கிரது ஸ்வரூபன், அஹம்—நான், யக்ஞ:—யக்ஞ ஸ்வரூபன். அஹம்—நான். ஸ்வதா—(பித்ருக்களுக்குரிய) அன்னம் அஹம் நான், ஔஷதம்—மருந்து அல்லது தான்யாதிகள், அஹம்—நான், மந்த்ர: மந்திரம், அஹம் ஏவ—நானே, ஆஜ்யம்—நெய் அஹம்—நான் அக்னி:—ஓமாக்கினி அஹம்—நான், ஹுதம்—ஓம ஸ்வரூபன்,

க்ரது (கிருது), யக்ஞம் இவைகள் யாகத்தின் வகைகள், க்ரது என்பது மிகவும் சிரமத்தோடு கூடியது. செய்து முடிக்க அதிக காலமும் நீடிக்கும். ஸ்வதா (சுவதை) என்பது பித்ருக்களுக்கு எள், நீர் ரூபமாகவும் அன்னுதி ரூபமாகவும் கொடுக்கப்படும் சிராத்தாதிகளையும் குறிக்கும். ஏழாம் அத்தியாயத்தில் ரஸாதிகளை பகவானின் சொருபமாகச் சொல்லியதைப்போலவே இங்கும் யக்ஞம் சுவதை முதலியவைகள் பகவானின் சொருபமாக (காரணமாயும் ஆதாரவாயும் இருப்பதுபற்றி)ச் சொல்லப்படுகின்றன.

ராகவேந்திரர்:—ஸாரம். கிரது முதலிய தானே என்று பகவன் அருளிய தன் கருத்து யாதெனின், அவரே அவற்றிற்கு நியாமகனுகவும் (அவற்றின்) அவி முதலியவற்றைப் புஜிப்பவனுகவும் இருப்பதுபற்றி என்று கொள்க.

இந்தவுல குக்குநான்
ஏலும் பிதாவாவன்
பந்தநிகழ் மாதா
பயில்விதாதா—முந்தையுமாம்
பாட்டனறி தன்மை
பவித்திர நல் லோங்காரம்
ஈட்ட முறும் வேதங்கள் யான்,

(இ-ள்) இந்த உலகுக்கு—இந்தப் பிரபஞ்சத்திற்கு நான்—, ஏலும் பிதா—சக்திவாய்ந்த தந்தையும், பந்தநிகழ்—தொடர்பு உள்ள மாதா—தாயும், பயில்விதாதா—எப்பொழுதும் (ரக்ஷகன்) காப்பாளனும், ஆவன்-ஆகின்றேன், யான்—, முந்தையுமாம் பாட்டன்—(எல்லா உயிர்களுக்கும்) முன்னதாகின்ற பிதாமகனும், அறி தன்மை—அறியவேண்டிய வஸ்துவும், பவித்திரம்—பரிசுத்தமானதும், நல் ஓங்காரம்-சிறந்த (ஓம் என்னும்) பிரணவமும் ஈட்டம் உறும் வேதங்கள்—(ருக், ஸாம, யஜுர்) என்னும்

சேர்க்கையுடையவேதங்களும் (ஆகின்றேன்,)

3
பிதாமஹஸ்ய ஜகதோ

4
மாதா தாதா பிதாமஹ:

4
வேத்யம் பவித்ர மோங்கார

ர்உத்ஸாம யஜுரேவச

(இ-ள்) அஸ்ய—இந்த, ஜகத:—உலகத்திற்கு, அஹம்—நான் பிதா-தகப்பனும் மாதா—தாயும், தாதா—ரக்ஷகனும் பிதாம:—பாட்டனும் (ஆவேன்.) பவித்ரம்—பரிசுத்தமானதும், வேத்யம்—அறியவேண்டும் பொருளும் (நானே) ஓங்கார:—ஓங்காரமாகிய பிரணவமும், ரிக்—இருக்கு வேதமும், ஸாம — சாமவேதமும், யஜுரேவச — யஜுர் வேதமும், அஹம் ஏவ—நானே (ஆகின்றேன்)

பாட்டன் என்னும் பொருளுடைய 'பிதாமஹ' என்ற மூலத்தொடர் விசேஷமாக மரியாதை செய்து பூஜிக்கத் தகுந்த ஒருவரைக் குறிக்கும் இச்சுலோகத்தில் கடவுளின் தன்மையைக் குறிக்க வந்த சொற்கள் அல்லது விசேஷணங்களின் ஆழத்தையும் பெருமையையும் வேதாந்த பாஷ்யத்தில் (பிரும்ம சூத்திர உரையில்) விரிவாகக் காட்டப்பட்டிருக்கும் தாது விளக்கத்தால் அறிந்து மகிழலாம்

பகவான் பிதாவாயும் மாதாவாயும், வேத சொரூபமாயும் யக்ஞ சொரூபமாயும் இருக்கிறார் என்பதை. அனுபவித்துப் பக்தர்கள் வெளியிட்ட பாடல்களிலும் காணலாம்.

1. மேலாத்தாய் தந்தையரும்
அவரே இனி ஆவாரே

(நம்மாழ்வார்)

2. பண்டை நான் மறையும்
வேள்வியும் கேள்விப் பதங்களின்
[பொருளும்

....

அண்டமும் தானாய் நின்ற
எம்பெருமான்

(திருமங்கை மன்னன்)

3. வேதமாகி வேள்வியாகி
விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி ஆயனாய
மாயம் என்ன மாயமே.

(திருமழிசைப் பிரான்)

கண்ணன் மேலும் சொல்கிறார்:

பற்றாய்ப் பரிப்பவனாய்ப்
பாங்கிறையாய்ப் பார்ப்பவனாய்
மற்றுங் கிருப்பிடமாய்
வன்சரணாய்—உற்றானாய்
தோற்றமுடி வுக்கிடமாய்ச்
சூழ்நிதியாய் வீயாத
ஏற்றமுடை வித்தாவேன் யான்.

(இ-ள்) பற்றாய்-அடையத் தகுந்தவனாய், பரிப்பவனாய்-தாங்கி போஷிப்பவனாய், பாங்கு இறையாய்-(நியாமகனாய்) சிறப்பாக ஆள்பவனாய், பார்ப்பவனாய்-(நேரில் காணும்) சாட்சியாய், இருப்பிடமாய்-(எல்லாவற்றிற்கும்) இருப்பிடமாய், வன் சரணாய்—நன்கு சரணமடையத் தகுந்தவனாய், உற்றானாய்-(பிரியம் செய்யும், நண்பனாய், தோற்றம் முடிவுக்கு இடமாய்-உற்பத்திக்கும் அழிவுக்கும் (ஆதாரமாய்) ஸ்தானமாய், சூழ் நிதியாய்-மிக்க தனமாய், வீயாத ஏற்றம் உடை வித்து-அழியாத பெருமைவாய்ந்த விதையாயும், யான் ஆவேன்-நானே ஆகின்றேன்.

3 4 4
கதிர் பர்தா ப்ரபு: சாக்ஷீ

நிவாஸ: சரணம் ஸுஹ்ருத்

4 3
ப்ரபவ: ப்ரளயஸ்தானம்

4 3
நிதானம் பீஜமவ்யயம்.

(இ-ள்) கதி:-அடையப்பட வேண்டியவனும், பர்(த்)தா-போஷகனும், ப்ரபு:-(நியாமகனும்) ஆள்பவனும், ஸாக்ஷீ-சாட்சியும், நிவாஸ:—வாஸஸ்தானமும், சரணம்—சரணமடையத் தகுந்தவனும், ஸுஹ்ருத்-(இதபரனும்) பிரியம் செய்யும் தோழனும், ப்ரபவ: ப்ரளயஸ்தானம்—உற்பத்தி முடிவுக்கு ஸ்தானமும், நிதானம்—ஆதாரமும் அவ்யயம் பீஜம்-நாசமற்ற விதையும், 'அஹமேவ—நானே.'

பிரளய காலத்தில் மேல் நடு கீழ் ஆகிய மூவுலகங்களும் உயிர்களும் பகவானிடத்தில் நிதிபோல் ஒன்று சேர்ந்து இருப்பதால், 'சூழ்நிதி' எனப்பட்டது

சில தொடர்களுக்குச் சங்கரர் பின்வருமாறு உரை தந்துள்ளார்.

சாக்ஷீ (பார்ப்பவனாய்):—செய்தலையும் செய்யாதிருத்தலையும் பார்த்துக் கொண்டிருப்பவனாய்

நிவாஸ:(இருப்பிடமாய்):-பிராணிகளுக்கு இருப்பிடமாய்.

பீஜம் (வித்து):—சம்சாரமாகிய விருக்ஷத்திற்கு விதையும்.

'பந்தமும் பந்தம் அறுப்பதோர்
மருந்தும் பான்மையும்
பல்லுயிர்க்கெல்லாம்
அந்தமும் வாழ்வும் ஆய
எம்பெருமான்'

என்று திருமங்கை மன்னன் அருளிய பாடல் இக் கீதாச் சுலோகத்தையே வெளியிடுகிறது

தாவமது செய்வேனான்
பார்த்தா தடுத்து மழை
மேவவது தன்னை
விடுவேனான்—சாவவிடாத்
தெள்ளமுது நானே
செறுங்கூற் றமுநானே
உள்ளதில் தானதுநான் உற்று

(இ—ள்) பார்த்தா—பார்த்தனே!. நான் தாவம் அது செய்வேன்—நான் தாபத்தை உண்டாக்குகின்றேன் நான் மழை தடுத்து—நான் மழையைப் பெய்யாமல் நிறுத்துவதோடு அதுதன்னை மேவ விடுவேன்—அம்மழையைப் பெய்யச் செய்கிறேன் சாவவிடா தெள் அமுது நானே—சாகாமல் செய்கின்ற சிறந்த அமிர்தமும் நானே ஆகின்றேன், செறும் கூற்றமும் நானே-கொல்லும் யமனும் நானே ஆகின்றேன், உற்று உள்ளது இலது ஆனது நான்-காணப்படுவதும் காணப்படாததுமாகப் பொருந்திய(சூட்சுமஸ்தூலப்பொருள்களும்) நானே ஆகின்றேன்.

தபாம்யஹம் அஹம் வர்ஷம்

3
நிக்ருஷ்ணாம் யுத்ஸ்ருஜாம்

அம்ருதஞ்சைவ ம்ருத்யுச்ச

3
ஸதஸச்சாஹ மர்ஜுந யஹம்

(இ-ள்) அர்ஜுந—அர்ச்சுனா!, அஹம்—நான், தபாமி—தாபத்தை உண்டாக்குகிறேன், நிக்ருஹ்ணாமிச—மழைபெய்யாமலும்(வர்ஷிக்காமலும்) தடுக்கிறேன், உத்ஸ்ருஜாமி—மழை பெய்விக்கிறேன் அம்ருதஞ்ச—ஜீவித்திருக்க ஏதுவும், ம்ருத்யுஞ்ச—நாச ஏதுவும், ஸத்—உள்ளதும். அஸச்ச—இல்லாததும் அஹம்—நானே.

'அஹம் (நான்)' என்ற சொல்லைப் பலமுறைகூறியது 'வெறும் வார்த்தையாகவோ உபசாரமாகவோ சொல்லவில்லை பூரணமான அர்த்தத்தில் சொல்லுகிறேன்' என்பதைக் காட்டியது.

இத்தகைய பகவானின் மகிமைகளே பாகவதம் பாரதம் ராமாயணம் பாத்மம் முதலிய புராணங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுவே விஞ்ஞானம் எனப்படும். அந்தியாய ஆரம்பத்தில் சொல்லப்போவதாக அர்ஜுனனுக்கு வாக்களித்தபடியே கண்ணபிரான் இந்த நான்கு சுலோகங்களில் சுருக்கிக் கூறினார்.

எங்கள் வீட்டில் இந்த வருஷம் கொலு மிகவும் தடபுடல். வழியிலே போகிற, வருகிற பொம்மைகளை எல்லாம் வாங்கிவைத்துவிட்டேன். எங்கள் வீட்டுக் கூடத்து நிறைய பொம்மைகள். அப்பாவுக்கு அப்படி இப்படி நகரக்கூட இடமில்லை. அதனால் அவர் ஆபீஸிலேயே காலங் கழித்து வந்தார். இருக்கிற மேஜை, நாற்காலிகள் இன்னும் கண்டான் முண்டான் சாமான்கள் கொலுப் படிகளாக காட்சி அளித்தன. அன்றுதான் சலவையிலிருந்து வந்த அப்பாவின் வேஷ்டிகள் படிகளுக்கு விரிக்கப்பட்டன. அப்பா பார்த்தால் உயிரே போய்விடும். நல்ல வேளையாக அவர் வீட்டிலேயே இருப்பதில்லை.

இவ்வளவு அலங்காரங்களுடன் கொலு ஆரம்பமாயிற்று. எவ்வளவோ படிகள் படிகளின் அழகை எப்படிச் சொன்னாலும் முடியாது கிரிமர்தநக்களிலிருந்து தவளை. மீன்கள் வரையில் வரிசையாக வைக்கப்பட்டன. முதல் நாள் சுண்டல் வினியோகத்துடன் கொலு ஆரம்பமாயிற்று. பொம்மைகள் சுண்டலைக் கண்டவுடனே உற்சாகத்திலே உயிர் பெற ஆரம்பித்தன அத்தனை பொம்மைகளுக்கும் சிறிது நேரத்தில் உயிர் வந்துவிட்டது. அப்படியும், இப்படியும் அசக்கிக் கொடுத்து சிறிது பேச்சும் பேச ஆரம்பித்துவிட்டன நாரதர் பாடினார். ஊர்வசி ஆடினாள். நந்தி தாளம் போட்டார். மயிலும் ஆடியது. குயில் கூவியது. ஹனுமார் புன் சிரிப்பில் தாடையினனும் சிறிது உப்பியது. பிள்ளையார் கட்டிக்கரணம் போட்டார் நரசிம்மர் சிரித்தார். கிருஷ்ணன் புல்லாங்குழல் ஊதினார். இடைப்பெண்கள் மெய் மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். இப்படியாக கொலு அமர்க்களப்பட்டது அப்படியிருக்கும்போது திடீரென ஏற்பட்ட சத்தத்தினால் கொலுவில் நிசப்தம் நிலவியது.

"சகோதர, சகோதரிகளே, சகோதர விலங்குகளே! வருஷா வருஷம் கொலுவுக்கு ஒவ்வொரு தலைவர் தேர்ந்தெடுப்பது நமது வழக்கம் அல்லவா? அம்மாதிரியே இவ்வருஷம் தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகையால் நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடுவோம். வாருங்கள்" என்று நாரதர் கூறினார். மறுகணம் இடித்துப் புடைத்துக்கொண்டு எல்லா பொம்மைகளும் முதல் படியை அடைந்தன. உட்கார இடமில்லாமல் நெருக்கி அடித்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டன. அப்பொழுது பாரம் தாங்காமல் முதல் படி சிறிது வளைந்திருந்தது. முதலில் நாரதர் தாடியில் விரலை விட்டு தடவிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"நண்பர்களே! இவ்வருஷம் சாப்பாட்டுக்கு பஞ்சம் ஏற்பட்டிருப்பது நன்றாக உங்களுக்கு தெரிந்த விஷயம். மழை காற்று, பூகம்பம், வியாதி முதலியவைகளால் நமது பாரத மக்கள் நிலை கலங்கி நிற்கிறார்கள். இத்துன்பங்களைத் தடுத்து நன்மையை உண்டுபண்ண சக்தியுள்ளவர் நமது ராமபிரான்தான். ஆகவே அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க உங்களை நான் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார்.

உடனே அங்கு கருப்புநிற சட்டை அணிந்திருந்த வாலிப பொம்மையார் எழுந்திருந்து, "முனிவரே! நீர் சொல்லுவதை நான் எதிர்க்கிறேன். ராமன் தலைவராக வந்தால் அவருக்கு உதவிசெய்ய ஏகப்பட்ட ஹனுமார்கள் வேண்டி இருப்பார்கள். அதற்கு நாம் எங்கே போவது? அப்படியே ராமராஜ்யம் நடந்தாலும், ஹனுமார் ராஜ்யமும் கூடவே நடந்துகொண்டிருக்கும் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. ஆகவே இக்கஷ்டம் எல்லாம் இல்லாதிருக்க நான் நமது தோழர் இராவணனைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி கோருகிறேன்" என்று கூறி உட்கார்ந்தார்.

விசுவாமித்திரர் அதை ஆக்ஷேபித்து, "ஒரு தலை உடையவர்களே ஒரு விஷயத்தைச் சொல்லி விட்டு மறு விநாடி தாங்கள் அதைச் சொல்லவே இல்லை என்று புளுகும்போது, பத்து தலை உடைய ராவணனா உண்மை பேசப்போகிறான். ஒவ்வொரு தலையும் ஒவ்வொரு உத்தரவிட்டால் நாம் எந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிவது? அது மட்டுமல்லாமல் இதுவரை நாம் ஒரு தலை உடையவரையே தலைவர் என்று அழைத்து வந்தோம். இனி ராவணன் தலைவ



ராஜல் அவரைத் தலைகள்வர் என்று அழைப்பதா அல்லது தலைவர் என்றே கூப்பிடுவதா? என்ற சந்தேகம் கிளம்பும். இந்தத் தொந்தரவில்லாமல் இருப்பதற்கு சரசுவதி தேவியை தலைவராக்கிவிடலாம் என்றூர் முனிவர்.

மனைவி தலைவியாகிவிட்டால் வீட்டில் சிறிதுகூட இருக்கமாட்டாள், தனக்கும் அடங்கி இருக்க மாட்டாள் என்று பயந்து கொண்டு பிரம்மதேவர் அதை எதிர்த்தார்.

"சரசுவதி தலைவி ஆனால் உலகத்தில் எல்லோரும் முன்னுக்கு வரமுடியாது. படித்தவர்களுக்கு மாத்திரம்தான் சலுகை ஏற்படும். புத்தி உள்ளவர்கள் மாத்திரமே முன்னேறினால் இப்பொழுது உள்ள உலகம் நாசமாகிவிடும். முட்டாள்கள் பின் தங்க நேரிடும். ஆகவே இனி புத்தி உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் தற்காலத்து உலகத்தில் வித்தியாயம் பாராட்டுவது அவ்வளவு நல்லதல்ல. தற்சமயத்துக்கு தகுந்த தலைவர் ஹனுமார் தான். அவரையே தேர்ந்தெடுக்கும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன்' என்று கூறி முடித்தார்.

ஹனுமார் என்ற பெயரைக் கேட்டவுடனேயே இராவணேசுவரருக்கு பத்து தலைகளிலும் கோபம் மூண்டது.

'ஹனுமாரைத் தலைவராகத்தேர்ந்தெடுத்தால், உலகத்துக்கே நாசந்தான். இப்பொழுது பூகம்பம் மாத்திரந்தான் உலகத்தை ஆட்டிவைக்கிறது. ஆனால் ஹனுமார் தலைவராக வந்தால் ஊரையே பொசுக்கிவிடுவார் ஒரு ஆகாய விமானத்தையும் சரிவர போகவிடமாட்டார். அது மாத்திரமா இவ்வளவு விமரிசையாக நடத்தப்பட்ட வனமஹோத்ஸவம் வீணாகப் போய்விடும். காட்டையே கண்ணால் காண முடியாது. ஆகவே உலகம் ஆனந்தம் அடைய வேண்டுமானால் க்ருஷ்ணனை தலைவராக எடுத்துக் கொள்ளலாம்' என்று மீசையை முறுக்கிக்கொண்டு பேசிமுடித்தான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் கம்ஸனுக்கு கண்ணில் நெருப்புப் பொறி பறந்தது.

"ராவணா! உனக்குப் பத்து தலையை எவனடா கொடுத்தான். இமமாதிரி எல்லாத தலைகளிலும் களிமண்ணை வைப்பானடா. ஒரு யுகத்துக்கு கொலு பொம்மை செய்யக் கூடிய அவ்வளவு களி மண் இருக்கிறது. யோக்யனான ஹனுமாரைவிட்டு, பாலில் தண்ணியைக் கலக்கும் அந்த கிருஷ்ணனையா தலைவராகத் தேர்ந்தெடுப்பது. உனக்குப் பெண் இருந்தால் கிருஷ்ணன் கொடுமைகள் தெரிந்திருக்கும். அவன் தலைவனாக வந்தால் உலகத்தில் வெண்ணையே கிடைக்காது. அதன் விலையும் இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் ஏறிவிடும். அவன் வந்தால் உலகமே அழிந்து சீர்கெட்டுவிடும்" என்று சொல்லி உறுமிக்கொண்டு உட்கார்ந்தான்.

தலைவர் தேர்ந்தெடுப்பதில் இவ்வளவு கலாட்டா எங்குமே இருந்ததில்லை. ஒரே கூச்சல், குத்துச்சண்டையும் சிறிது தலைகாட்டியது. கூடம் குழப்பத்தில் முடியவே அப்பொழுது மேலிருந்து பெரிய சத்தம் வந்தது. மறுக்கணம் அக்கூட்டத்தின் நடுவில் ஒரு சிறு உருவம் குதித்து நின்றது. அதைக் கண்டு நாரதர் சிரித்துக்கொண்டே 'என்ன அனுகுண்டாரே! சௌக்கியமா?' என்று கேட்டார். அனுகுண்டு என்ற பெயரைக் கேட்டதும் அங்கே நிசப்தம் நிலவியது. எல்லாப் பொம்மைகளும் நடுக்கத்துடன் நின்று கொண்டிருந்தன. நாரதர் அவர்

பெஸ்ஸி

க்ராம்வெல் என்பவன் இங்கிலாந்தையே தன் வசப்படுத்தி ஆண்டுவந்தபோது தனக்கு எதிராக போர் புரிந்த அத்தனை பேரையும் தூக்கிலிட உத்தரவிட்டான். ஒவ்வொரு நாளும் இரவில் ஒவ்வொருவராக தூக்கிலிடப்பட்டனர் ஒவ்வொரு நாள் இரவிலும் லண்டன் மாதா கோவிலிலுள்ள மணி அடித்த பிறகுதான் ஒவ்வொருவரும் தூக்கிலிடப்படவேண்டும் என்று உத்தரவும் போட்டுவிட்டான். அன்று முதல் மாதா கோவில் மணி சாவுமணியாக விளங்கிற்று.

இப்படியாக ஒவ்வொருவரும் தூக்கிலிடப்பட்டு வரவே பெஸ்ஸி என்ற கைதியின் தூக்கு தினமும் வந்தது. அவனுக்கு ஒரு அழகிய மனைவி இருந்தாள். தன் கணவன் அன்று இறக்கப் போவது குறித்து மிகவும் வருந்தினாள். தன் கணவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்தாள் சாவு மணியை எப்படியாவது அடிக்காமல் செய்தால் தூக்குப்போடாமல் தப்புவிக்கலாம். அதை அடிக்காமல் செய்வது எப்படி? இறப்பது எப்படி நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் சாவுமணி அடிப்பதும் ஏசுவின் அருளால் அவளுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று.

நன்ருக இருள் கவிந்த பிறகு ஒருவரும் அறியா வண்ணம்

களை எல்லாம் பார்த்துவிட்டு, 'அனுகுண்டாரே! தங்களை இவ்வருஷ கொலு பொம்மைத் தலைவராக தெரிந்தெடுத்திருக்கிறோம்' என்று கூறினர். அதற்கு ஒருவரும் மறுக்கவில்லை. ஆகவே இவ்வருஷ தலைவராக அனுகுண்டாரும். செயலாளராக யமதேவரும் வேலையை ஏற்றுக் கொண்டார். அந்த சந்தோஷத்தில் இருவரும் உ... எழும்பி பலகையின்மேல் குதித்தனர். மறு நிமிஷம் பலகை பிளந்தது. பொம்மைகள் மூலைக்கு ஒரு புறமாக சிதறின. ஒரு பெரிய பூகம்பமே ஏற்பட்டது போலிருந்தது.

நானும் தூக்கிவாரிப் போட்டு எழுந்தேன். ஆனால் பொம்மைகள் மௌனமாகவே இருந்தன. இருந்தாலும்எனக்கு ஏற்பட்ட பயத்தினால் மறு நாள் ஏராளமாக சுண்டல், பழம் வைத்து நிவேதனம் செய்தேன்.



நாக்கு சப்தம் செய்யாமல் இருக்க அதை இறுகக் கட்டிக் கொண்டாள். கயிறுல் இழுக்கப்பட்ட நாக்கு அங்கும் இங்கும் ஆடியதே தவிர துளி சத்தத்தைக் கூட எழுப்ப முடியவில்லை. அவள் மெல்லிய உடல் அங்குமிங்கும் மோதி வலியை உண்டாக்கியது. எனினும் அவள் மன உறுதியால் அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் இருந்தாள். மணி அடிக்காமல் போகவே பெஸ்ஸியின் தூக்கு தண்டனையும் நிறைவேற்றப் படவில்லை.

ஆனால் மணி அடிக்காத காரணத்தை அறியப் புறப்பட்ட அதிகாரிகள் அவளை கையும்களவுமாக பிடித்துவிட்டனர். க்ராம் வெல்லுக்கும் இது தெரிவிக்கப்படவே, உண்மையை அறிந்த அவன், பெஸ்ஸியை வெளியில்விட்டு, அன்று முதல் சாவுமணி அடிக்க வேண்டாம் என்ற உத்தரவிட்டான்:

குழந்தைகளே! இவள் என்ன மணியான பெண் பார்த்தீர்களா நீங்கள் எல்லோரும் இப்படி இருந்தால் உங்கள் பெற்றோர்கள், வாத்தியார் ஒருவரும் உங்களை அடிக்க மாட்டார்கள். ஆனால் ஒன்று மாத்திரம் செய்துவிடாதீர்கள். பள்ளிக்கூடம் நடக்காமலிருப்பதற்காக, அந்த ஒவ்வொரு நாளும் அடிக்கும் மணியின் நாக்கை கட்டிப் போட்டுவிடாதீர்கள். அப்படிச் செய்தால் உங்கள் முதுகில் பிரம்பினால் மணி அடிக்க ஆரம்பித்து விடுவார் வாத்தியார்.

மாதா கோவிலின் உள்ளே சென்று சாவு மணிக்குச் செல்லும் படிக்கட்டை அடைந்தாள். அவள் கால்கள் வெகு வேகத்தில் அவளைத் தூக்கிச் சென்றன. மணி அடிப்பதற்கு இன்னும் சில வினாடிகள்தான் இருக்கின்றன. சற்று கீழே திரும்பி பார்த்தாள். மை இருட்டு; கிடுகிடு பாதாளம் அவள் மனதைக் கலக்கியது லண்டன் நகரம் சிறிய கொலு பொம்மைபோல் காட்சி அளித்தது. மறுபடி மனதைத் திடப்படுத்திக்கொண்டு சரசரவென்று மணியினருகில் சென்றாள். அப்பொழுது மணியடிக்க அதன் பெரிய நாக்கை கயிறு தூக்கியது. மறுகணம்

ஒரு சுவற்றுக்கோ அல்லது கதவுகளுக்கோ பெயிண்ட் அடிக்கவேண்டுமா; எவ்வளவு பெயிண்ட் அச்சுவற்றில் இருக்கிறது; பொருள் கெடாமல்

பெயிண்ட் வேண்டுமா ?

★

இருக்க எவ்வளவு பெயிண்ட் அடிக்கவேண்டும் என்பதை தெரிந்துகொள்ள ஒரு கருவி கண்டுபிடித்திருக்கிறார்கள். இது வேஷம் போடுபவர்களுக்கு மிகவும் அவசியமாக இருக்கும் என்று மேல் நாட்டார் நினைக்கிறார்கள்.

11

ரேகா விமர்சனம்

★

31. தனிலா ரேகை

धनिला मणिबन्धात्तु रोहिणीवोर्ध्व-
गामिनी ।
अनामिकाग्रपर्यन्तं व्याप्नोतिधन-
धान्यदा ॥
धनिलेत्युदिता सद्भिः धनसम्पत्प्र-
सूचनात् ।
तां विद्याधररेखेति केचिदेनां जगुर्बुधाः॥

தனிலா என்ற ரேகை ரோஹிணியைப்போலவேயே மணி பந்தத்திலிருந்து இளம்பி மோதிர விரலின் நுனிவரை செல்லும். இதன் பலன் தன தான்ய சம்பத்தைக்கொடுப்பது. இதையே வித்யாதர ரேகை என்றும் சில பெரியார்கள் கூறுவர்.



32. ஊர்த்வ ரேகை

ऊर्ध्वरेखाऽऽत्मरेखायाश्चैवचोर्ध्वं विनि-
स्सृता ।
आमध्यमाङ्गुलं गच्छेत् सद्यात् वर्षशतं
सुखी ॥
जीवेदन्तेच परमपदं प्राप्नोतिशाश्वतम् ।
एकावाऽनेकरूपवा शाखापिचयद्भवाः॥
ऊर्ध्वंतु बन्धरेखान्तं विपरीतफलप्रदा ।
ऊर्ध्वरेखेति नामोर्ध्वपदप्राप्तिप्रसूच
नात् ॥
यद्वासैषोर्ध्वगमनात् ऊर्ध्वरेखेति
विश्रुता ।

ஊர்த்வ ரேகையும் ஆத்ம ரேகை (ரோகிணி)யைப்போலவேயே உயரே செல்லும் நடு விரல் வரை சென்றால் அம்மனிதன் நூறு வயது வரை ஸுகமாய் ஜீவித்திருப்பான் இறந்த பிறகும் பரமன் பாதத்தில் சேர்ந்து மறு பிறவி இல்லாத பதத்தையடைவான் இந்த ரேகை ஒன்றாகவும் இருக்கலாம், பலவாகவும் இருக்கலாம். கிளைகளோடும் இருக்கலாம். ஆனால் பந்த ரேகைக்கு மேல் செல்லாவிட்டால், பலன் தலைகீழாகச் சொல்லவேண்டும். அதாவது அற்பாயுள், கஷ்ட ஜீவனம், பல பிறவிகள்.



குறிப்பு:—இந்த ரேகையிலிருந்தும் ஆயுளைத் தெரிந்துகொள்ளலாம் என்று ஏற்படுகிறது.

33. மாதவீ ரேகை

माधवीयऽङ्गुष्ठस्योर्ध्वं तिर्यक्गता
स्फुटा ॥
रेखा समुत्थिता यस्य: यदि नित्य
सुखप्रदाः ।



मधुद्वेषित्वया नाम्ना माधवीत्युदिता
बुधैः ॥

மாதவி என்ற ரேகை கட்டை விரலின் மேல் பாகத்தில் தெளிவாகத் தோன்றும், இதன் பலன் செழிப்பு. பல ரேகைகள் இம்மாதிரி தோன்றினால், என்றும் சுகானுபவத்தைக் கொடுக்கும். இந்த ரேகையுள்ளவர்கள் மதுவை வெறுப்பார்களாகையால் பெரியோர் இப்பெயரிட்டழைக்கலாயினர்.

34. மதிரேகை

मतिरङ्गुष्ठमूलस्य किञ्चिदूर्ध्वं स्फुटा
कृतिः ।
रेखास्यात् ऊर्मिकातुल्या बुद्धिमान्द्य
प्रदा नृणाम् ॥
ऊर्ध्वमुख्यः सिरास्तुः चेत् प्रतिभांच
विनाशयेत् ।
मतिनाशकरत्वाच्च मतिरित्युच्यते बुधैः॥

மதி என்ற ரேகை கட்டை விரலின் அடி பாகத்திற்கு சற்று மேலே அலைபோல் வளைந்து தோன்றும் இதன் பலன் புத்திக் கோளாறு அல்லது அறிவீனத்தைக் கொடுப்பது



இந்த ரேகையில் மேல் நோக்கிய அரும்புகளும் இருந்தால், முகத்தில் களையே இராது. மதியைக் குலைக்கும் காரணத்தால் எதிரிடையான இப்பெயர் கொண்டு பெரியார் இதை அழைக்கின்றனர்.

35. கண்டு ரேகை

कण्डुरङ्गुष्ठमूलाधः कुशशङ्कु समाकृतिः ।
तन्मूलतत्पार्श्वयुगप्रोत्थ रेखात्रयो-
ज्वला ॥
यदि नैमित्तिकी सैषा बहुरूपाच
तर्जनीम् ।
गन्तु प्रवृत्ता भ्रातृणां वृद्धिदा यदिस
पुनः ॥
नानावर्णातु पुत्राणां भ्रातृणांच बहु-
स्वदा ।



यद्यनैमित्तिकी तर्हि भ्रातृपुत्रसमान्
हितान् ॥
बन्धून् पुत्रान् सूचयन्ति किञ्च अभी
ष्टफलप्रदा ।
कण्डुशब्दस्य शक्त्या इषा कण्डूति
सूचयेत्तनौ ॥

கண்டு என்ற ரேகை கட்டை விரலின் அடிபாகத்திற்கு கீழே ஈட்டி போல் மெல்லியதாகத் தோன்றும். அதன் இரண்டு பாகங்களிலும் அதே ஈட்டியிருந்து மூன்று ரேகைகள் கிளம்பி பிரகாசமாகத் தோன்றும். இந்த ரேகை நிரந்தரமாகவும், பல ரேகைகள் கொண்டதாகவும் கையில் அமைந்திருந்து, ஆட்காட்டி விரலின் திசையை நோக்கி நின்ருல், சகோதரங்களின் விருத்தியைக்காட்டும். மேலும், பல நிறங்கொண்டு பிரகாசித்தால், பல புத்திரர்களேயும், சகோதரர்களேயும் காண்பிக்கும். இந்த ரேகை எப்பொழுதும் இல்லாமல், அடிக்கடி தோன்றி மறைந்தால், ஹிதமான நண்பர்கள், பந்துக்கள், மக்கள் இவர்களைக் குறிக்கும். இன்னும் விரும்பியவற்றைக் கொடுக்கும் சக்தி வாய்ந்தது இந்த ரேகை யுள்ளவர்களுக்கு சொறி சிரங்கு ஏற்படும்.

36. கனிஷ்டா ரேகை

कनिष्ठाङ्गुष्ठमूलाधो भ्रातृस्थानात्समु
स्थिता ।



तर्जन्यभिमुखी रेखा यावत्संख्य।
भवन्ति ताः ।
तावत्संख्यां सूचयन्ति भ्रातॄन् सूक्ष्मास्तु
कन्यकाः ।
ऊर्ध्वस्थ बन्धरेखायाः ऊर्ध्वस्थानात्स
मुत्थिता ॥
तर्जनीमध्यमानामकनिष्ठाभिमुखा यदि।
अस्पृष्टाङ्गुल्योरेखाः कनिष्ठासदृश-
प्रभाः ॥



भ्रातृसंख्यां सुचयन्ति कनिष्ठाख्यास्तु
ता अपि ।
अधोमुखा न प्रमाणं इति व्यासादयो
जगुः ॥
रेखा सत्वे भ्रातृभावे तत्र बन्धून्वदेत्
बुधः ।

கனிஷ்டா என்ற ரேகை கட்டை விரலுக்கு கீழ் சகோதரஸ்தானத்தில் முளைத்து ஆள்காட்டி விரலை நோக்கி நிற்கும், இப்படி எத்தனை ரேகைகள் இருக்கின்றனவோ அத்தனை சகோதரங்கள் உண்டு. மெல்லிய ரேகைகளைச் சகோதரிகளாகக் கொள்ள வேண்டும். மேல் பந்த ரேகைக்கு மேல், விரல் மூடுகளைத் தொடாமல் நான்கு விரல்களையும் நோக்கி நிற்கும்

ரேகைகளுக்கும் கனிஷ்டா என்று பெயர். அவற்றின் எண்ணிக்கையும் சகோதரங்களைக் குறிப்பிடும் இவற்றில் ஏதாவது கீழ் நோக்கிய கிளையுள்ளதாக இருந்தால் அவற்றைத் தள்ளிவிடவேண்டும். என்று வியாஸர் முதலிய மகரிஷிகள் கூறியுள்ளார்கள். ரேகைகள் தெளிவாகத் தெரியாமல் அவற்றின் கரு மட்டும் தெரிந்தால் பந்துக்களைச் சொல்லவேண்டும்.



37. ஸௌராஷ்ட்ரிகா ரேகை

सौराष्ट्रिकाऽङ्गुष्ठमूलात् अङ्गुष्ठाङ्गुलिगा-
मिनी ।
यावत्यस्तावस्तावतः शत्रून्सूचयन्त्य-
स्योयदि ॥
स्पष्टासैषास्फुरत्तन्वा तदा दुःखप्रदा-
नृणाम् ।
आस्वेदिका मण्डलाकारसंस्थान
स्थानगा यदि ॥
स्थानात्स्थानान्तरप्राप्तिः तद्वतो नात्र
संशयः ।
बहुवर्णायदि ततः स्त्रीणां पुंसामथा
पिवा ॥
वर्णान्तरप्राप्तिकरी यद्वैषा घर्घराकृतिः ।
नृणां स्वाश्रयभूतानां जर्जराङ्गत्व
सूचनी ॥
राज्ञः शोभनराजस्य नियताबहुशत्रुता ।
असत्तद्वान् शोभनस्स्यात् बहुशत्रुश्च-
पूरुषः ॥
तस्मात्सौराष्ट्रिकेत्येषा कथितापूर्व
सूरिभिः ।

ஸௌராஷ்ட்ரிகா என்ற ரேகை கட்டை விரலின் அடிபாகத்திலிருந்து புறப்பட்டு கட்டை விரலின்மேல் செல்லும், அப்படி எத்தனை கோடுகள் இருக்கின்றனவோ அத்தனை சத்துருக்கள், இந்த ரேகை தெளிவாகவும், பிரகாசித்துக்கொண்டுமிருந்தால் துக்கத்தைக் கொடுக்கும், வியர்வைக் கசிவுடன் மண்டலாகாரத்தை நோக்கிச் சென்ருல், இடம் விட்டு இடம் பெயர்ச்சியோ அல்லது உத்யோகத்தில் ஒரு ஸ்தானத்திலிருந்து கீழ் ஸ்தானம் மாற்றலோ ஏற்படும் இந்த ரேகை பல வர்ணம் கொண்டிருந்தால், ஆணுயினும், பெண்ணுயினும் ஜாதி விட்டு ஜாதி மாற நேரிடும். இந்த ரேகை வளைந்து வளைந்து காணப்பட்டால் அம்மனிதர்களுக்கும் அவர்களையண்டினவர்களுக்கும் கிழத்தன்மையைக் குறிக்கும். எல்லோருக்குமே, பொதுவாக, இந்த ரேகை சோபனத்தையும் அதே சமயத்தில் பல சத்துருக்களையும் கொடுக்கும். (தொடரும்.)

சக்தி ஜோதிஷர்
OF
"சக்தி ஆருடம்!"
உங்கள் எதிர்காலத்தைப்பற்றி கூறுவார்
1 to 3 ஆருடகேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணு 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை
N B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணம் தேவை.
டாக்டர் P. மாணிக்கம், M.B.M H,E.A. (London) எழுதுகிறார் :—"நான் பார்த்த சில அயல்நாடு பல நம் நாடு ஜோதிடர்களில் தங்களை சிறந்தவராக கருதுகிறேன். பலன்களில் திருப்தி."
"சக்தி ஹோம்,"
விருத்தாசலம். P. O. (S. I.)



பொட்டு, பொடுகு, சுண்டு.

நண்பர் கிருஷ்ணமாச்சாரி கேசவன் இருவரும் கைகோத்துக்கொண்டு என்னைத் தேடிக்கொண்டு என் வீட்டிற்கே வந்துவிட்டனர், காலை நேரங்களில் ஸாதாரணமாக எனக்கு ஓழிவோ பொறுமையோ இருப்பதில்லை, "ஆச்சா? ஆச்சா?" வென்று துரிதப்படுத்திக்கொண்டே ஓடி ஓடி காலைக் கடன்களையும் ஸ்நாநாதிகளையும் மற்றுஞ் சில மடிஸஞ்சி சகாப்தத்தைச் சேர்ந்த நித்ய கர்மாக்களையும் முடித்துக்கொண்டு வயிற்றுப் பிழப்பை யுத்தேசித்து வெளியே ஓடிவிடவேண்டியது எனது தினசரி வழக்கம் பிற்பகல் மாலை நேரங்களில் தான் சாவகாசமாக வீட்டில் வரும் நண்பர்களை வரவேற்றல் முதலியவற்றிற்கு வசதியுண்டு. இதனிடையில்தான் படிப்பு நான் படிப்பதாயினும் படிக்கவேண்டிவரும் வித்யார்த்திகளுக்குப் பாடஞ் சொல்வதாயினும் பகல் 1-மணிக்கு மேல் இரவு 8--மணிக்குள்தான் இவ்வலுவல்களுக்கவ்காசம். மாலையிலும் கொஞ்சம் 'மடிஸஞ்சி'யையவிழ்க்குமலுவல்கள், பிறகு உண்டி. இரவு போஜனத்திற்குப் பிறகுதான் பத்திரிகைகளைப் படிப்பது ஒரு தூக்கம் தூங்கி-2 அல்லது 3 மணிக்கு விழித்து படிப்பது, எழுதுவது தபால்களை கவனிப்பது முதலிய ஜோலிகளைச் செய்துவிட்டு 5-மணி 5 30 மணிக்கு மறுபடியுமொரு குட்டித் தூக்கம் பிறகு 6-மணி 6-30 மணிக்கு எழுந்தால் பழைய ராமாயணந்தான்

நான்:—இவ்வித தினசரி அலுவலுள்ளவனென்று நண்பர் கேசவனுக்குத் தெரியாது. ஆனால் கிருஷ்ணனுக்குத் தெரியும் ஆயினும் இன்று ஏனோ காலையில்வந்து தமக்கும் எனக்கும் அசௌகர்யத்தை ஏற்படுத்திக்கொண்டார். வரும்போதே நண்பர்.

கேசவன்:—அடடா! வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறாப்போலிருக்கிறதே!

நான்:-இருக்கிறாப்போலிருக்கிறதா இருக்கிறாப்போலிருப்பதாகவே இருக்கட்டும் இருக்கிறாப்போலிருப்பதாக இருப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை

கிருஷ்ணன்:-இதென்ன 'இருத்தல்' ஸஹஸ்ரநாமாவளியா?

நான்:—அப்படி இருக்கிறாப்போலுமக்கிருக்குமானால் இருக்கட்டும்.

★

கிருஷ்ணன்:—உம்......இப்படியாயிற்று தமிழ்!

நான்:—உம்...காலம்போர போக்கு

கேசவன்:—போறும் இந்த அகடவிகடங்கள் நேற்றையதினம் ப்ரஸ்தாபத்திற்கு வந்த பொட்டு......

நான்:—பொட்டா?

கிருஷ்ணன்:—அதுதான் தலையில் பொடுகு......நான்:—பொடுகா?

கேசவன்:—அட ராமா பொட்டோ பொடுகோ சுண்டோ தலையில் நமைச்சல், சொறியாமலிருக்க முடிவதில்லை சொறிந்தால் தவடுபோல் ஒரு பொடி படிக்கணக்கில் உதிர்ந்துகொண்டே இருக்கிறது ஏதோ இது தாத்காலிகமாகச் சிறங்கு சொறிகள்போல் வந்தது போயிற்றென்றில்லாமல் மாஸக்கணக்கில் நின்று விடுகிறது.

நான்:—சொறியச் சொறிய, பொடி உதிர உதிர, சொறியுள்ளதும் பொடியுதிருவதுமான பிரதேசத்தில் காலக்கிரமத்தில் முடி உதிர, அவிடம் பொட்டை பட, பிறகு இப்பிரதேசம் நாளடைவில் விஸ்தரிக்க. தலையில் பெரும் பாகமும் கேசமின்றி வழவழவென்று வார்னிஷ் செய்த பிலியர்டு மேஜைபோலாக......

கிருஷ்ணன்—அடாடா! பட்டபாணன் மாதிரி ஆரம்பித்து விட்டீர்களே!

நான்:—இந்நோய் உண்டாவதற்கு முதற்காரணம் சரீரத்தில் போதுமானவளவு எண்ணெய்ப் பசையில்லாமை, அதாவது தேகத்தின் மேற்றோல் நன் நிலையிலிருக்க வேண்டுமாயின், தோலுக்கு அவசியமான எண்ணெய் தடவ வேண்டும்

கேசவன்—பூட் ஸுக்குக்கூட பாலீஷ் போடுகிறோமே. கொஞ்சநாள் பாலீஷ் போடா விட்டால் பளபளப்பு குறைந்து வறண்டது போல் மாறி மேற்றோல் வெடித்து...

கிருஷ்ணன்:—செருப்புக்கும் உடப்புறமெல்லாம் சதும்ப விளக்கெண்ணெய் தடவி வைப்பதால் மிருதுவாகிறது காலைக்கடிப்பதில்லை

நான்:—சரீரத்தின் மேற்றோலுக்கு ஒருவித எண்ணெய் அவசியம் தோலினுட்புறத்திலேயே இவ்வித எண்ணெயை அவ்வப்போது கசிந்து உதவக்கூடிய சில கிரந்திகளிருக்கின்றன. தாமாகவே இக்கிரந்திகள் ஸீபம் என்னும் இவ்வெண்ணெய்ப் பொருளைக் கசிந்து மேற்றோலை நயம்படவும் மிருதுவாகவும் நிகி நிகிப்புடனும் வைத்துக்கொள்கின்றன

நமது ஆகாராதிகளில் எண்ணெய் பசைகள் குறைவுபடுவதாலும், எண்ணெய் தேய்த்துக் குளித்தல் முதலிய பழக்கங்களை விட்டுவிடுவதாலும், சவுக்காரம் முதலிய சுண்ணும்புசத்து அதிகமுள்ளவைகளை உபயோகிப்பதாலும்—இரவு கண்விழித்தல் முதலிய காரணங்களால் சரீரத்தில் இந்த எண்ணெய் பசை குறைந்து ஒருவகை வறட்சி ஏற்படுகிறது சவுக்காரம் முதலியவை எண்ணெயைச் சுரக்கும் கிரந்திகளையும் உலர்த்தி வறளச் செய்து விடுகின்றன மேற்றோலும் வறண்டுவிடும் அரிப்புவுண்டாகும். சொறியுமிடமெல்லாம் வெளுத்த கோடுகளும் அடையாளங்களுமுண்டாகும் தேகமெல்லாம் ஒருவித சாம்பல் படிந்தநிறம் பரவிநிற்கும், மேற்தோலில் சிற்சில அணுக்களாக நாசமேற்பட்டுப்பொடி பொடியாக உதிர வாரம்பிக்கும் சில பிரதேசங்களில் வெடிப்புகளும் ஏற்படும். மொத்தத்தில் இதற்கல்லாமக வேண்டியது ஒன்றுதான். சரீரத்திற்குப் போதுமான எண்ணெய்ப் பசையைக் கொடுக்கவேண்டும் இதே மாதிரிதான் தலையிலுண்டாகும் பொட்டு, பொடுகு, சுண்டு என்பதும். கிருமிகளாலும் ஏறத்தாழ இதே, போன்ற ஒருவித உபாதி ஏற்படும் மற்றுஞ் சில நேரத்தில் இந்த சுண்டு ஒருபுறமிருக்கும்போது இத்துடன் கிருமிகளால் ஏற்படும் உபத்திரவமும் சேர்ந்து இதனால் அதுவா, அதனால் இதுவா, என்றுங்கூட தெரியவொட்டாமல் மிரளச் செய்யும் தலையில் மட்டுமே இருப்பதானாலும் தேகத்திற்கும் மேற்பூச தேனீ மெழுகு போன்றவை கூடியுள்ள தைலங்களைத் தேய்த்துக் குளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். மற்றும் அமுக்கிரானி கிழங்கு என்று ஒரு கடைச் சரக்கு இருக்கிறது இதில் சீமை அமுக்கிரானி கிழங்கென்றும், நாட்டு அமுக்கிரானி கிழங்கென்றும் இரண்டு வகையுண்டு. சிலர் ஒன்றை உயர்ந்ததென்றும். மற்றுஞ் சிலர் மற்றொன்று

தான் உயர்ந்ததென்றுஞ் சொல்லுவர். ஏறத்தாழ இரண்டுக்கும் ஒரே குணந்தான். மண்ணில்லாமல் இக்கிழங்கை சுத்தஞ்செய்து பிறகு பாலில் வேகவிட்டுக் கழுவி உலர்த்திப் பொடி செய்து (வஸ்திரகாளனஞ்செய்து மிகவும் நுண்ணிய சூரணமாக்கிக்கொள்ளுதல் அவசியம்) வைத்துக்கொள்ளவும். அவ்வாறே, சீனக் கற்கண்டையும் பொடிசெய்து. ஜல்லடையில் சலித்து வைத்துக்கொள்ளவும் முதற்சூரணத்தில் ஒரு சிடிகி முதல் ஒரு ஸ்பூனளவு வரையில் வயதிற்குத் தகுந்தமாதிரி எடுத்துக்கொண்டு அதேயளவு இரண்டாவது சூரணத்தையுங் கூட்டிக்கொண்டு கொஞ்சம் நெய்யிலோ வெண்ணெயிலோ குழைத்து உள்ளுக்குத் தினந்தோறும் இரண்டு நேரம் கொடுக்கவும் பாலில் கலந்து கொடுப்பதும் நலம், முன்காலத்திலெல்லாம் ஏழை பாழைகள்-நாட்டுப்புறங்களில் வாழ்ந்த தரித்திர நாராயணர்கள் ஒரு நல்ல பழக்கத்தைக் கையாண்டு வந்தனர் கேசவன்:-அதென்ன முன் காலத்திலெல்லாமென்கிறீர்களே?

நான்:—ஸ்வாமீ! காலை நேரங்களில் எனக்குச் சாதாரணமாக அவகாசமே இருப்பதில்லை. இது விஷயம் நண்பர் கிருஷ்ணனுக்குத் தெரியும் உங்களுக்குத் தெரியாது, ஏதோ என்றுமில்லாது அத்தி பூத்தாற்போல் வந்துவிட்டீர்கள். உங்களை திருப்பியனுப்புவது சரியல்லவென்று விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்ல முற்பட்டேன்.

கிருஷ்ணன்:—இவ்வளவு தூரம் அனுசரணையும் வந்தவரை முகமன் பேசிஉபசரிப்பதற்குக் காரணம் இவர் ஒருதமிழர் நான்:—என்னைத் தமிழன் சிரித்தேன். வந்தவரைச் சுமுகமாக வரவேற்பது பொதுவாக மனுஷ்ய தர்மம். அதையொட்டிதான் நானும் இன்று உத்தியோகத்திற்குப் போகக் கொஞ்சப் தாமதித்தாலும் பரவாயில்லை என்று-பையனிடம் ஆபீஸிற்குப் போன் செய்யச்சொல்லி உங்களுடன் பேச உட்கார்ந்தேன்.

கிருஷ்ணன்:—பையனிடம் ஒன்றுஞ் சொல்லவில்லவுமில்லை அவன்கேட்கவுமில்லையே? நான்:—ஓ! ஹோ! நியாயம் பையன் இப்போது சற்று முன் இங்கு வந்து நின்றதைப் பார்த்தீர்களல்லவா?

கேசவன;—ஆமாம், வந்து ஒரு இமைக்குல் நேரம் நின்றான். உடனே தலைதெறிக்கும் வேகத்தில் ஓடிவிட்டான் நான்:—ஆமாம் அப்போதுதான் அவன் என்னைக் கேட்டான் நானும் வரக் கொஞ்சம் நேரமாகுமென்று டெலிபோனில் தெரிவிக்கும்படி சொன்னேன். அவனும் கனவேகத்தில் பக்கத்து வீட்டிற்கு போனுக்காகப் போய்விட்டான். ஸம்பாஷணை முழுவதும் ஜாடையால் நடந்தது, அருகிலுள்ள உங்களுக்குக்கூட தெரியாதபடி, வாய்விட்டு இதைப்பேசி இருந்தால் உங்களால் எனக்கு அசௌகர்யமென்று எண்ணி நீங்கள் வருத்தப்படலாமென்று ஊகித்து இங்கிதம் தெரிந்து பையன் ஜாடையாய்க் கேட்டான். நானும் பதில் சொன்னேன். இதற்காக வேணுமானால் என்னைத் தமிஷன் என்று சொல்லுங்கள்,

கேசவன்:—பேஷ் ரொம்ப ஸந்தோஷம் எப்படியும் கொஞ்சம் தாமதித்தாலும் பரவாயில்லை யென்றுயிற்று ஆனால் கிருஷ்ணன் சொன்னதிற்கு அவ்வளவு சிரிக்கக் காரணமென்ன? நான்:—வேறு ஒரு விஷயத்தை மனதில்வைத்துக்கொண்டுசிரித்துவிட்டேன் கேசவன்:—அவ்வளவுசிரிக்கும்படியான அவ்விஷயம்என்னவோ?

நான்:—சொல்லித்தான் ஆகவேண்டுமானால் சொல்கிறேன் நான் ஒரு சமயம் ஒரு ஸினிமா பார்க்கப் போயிருந்தேன், அங்கு ஒரு நபர் பூலோக வாஸி நாகலோகத்திற்குப் போய்ச் சேர்ந்ததாகக் கதை நாகலோக வாஸிகளின் சில போக்குகளும் பழக்க வழக்கங்களும் இந்த பூலோக வாஸிக்கு அருவெருப்பை யூட்டின. அவர் ஒரு நாகனிடஞ் சொன்னார். "ஹே நாக! இதென்ன இழிவான பழக்கம் இது நாகலோகத்தில் சரி என்றிருக்கலாம். நாகலோக வாஸிகள் இதில் ஒரு இழிவையுங்காணமலிருக்கலாம். ஆனால் நானிதை ஒப்புக்கொள்ள முடியாது. நான் ஒரு "தமிழன்..." என்றார்......"

நண்பரிருவரும்சிரிதனர் பிறகுநண்பர்

கிருஷ்ணன்:—நாகலோகத்தில் "தமிழ்"னென்ன? அங்கும் தமிழன் தெலுங்கன் என்று பாஷாவாரிப் பிரச்னையை விதைக்க வேண்டுமா?

கேசவன்:—சரி சரி, எடுத்துக்கொண்ட விஷயம் இன்னதென்றே தெரியாமல் பேச்சு எங்கெல்லாமோ போய்விட்டது விட்டவிடத்தில் தொடங்குங்கள்.

நான்:—முன் காலத்தில் நாட்டுப்புறத்தில் வெந்தயம், வெள்ளை மிளகு—போன்ற பொருள்களை அரைத்துப் பாலில் கரைத்துக் குழம்பாக்கித் தலையில் தேய்த்துக் கொண்டு கொஞ்ச நேரம் ஊறின பிறகு நன்றாக தலையை அலசி முழுகுவர் குளங்கள், கிணறுகள் ஏரிகள்-ஆற்றின் வெள்ளமிவற்றில் முழுகிக் குளிப்பர். தலை நன்றாகக் கழுவப்படுவதோடு முடியும் அப்பழுக்கில்லாமல் அலசி சுத்தமாக்கப்படும். பட்டணங்களில் இப்பழக்கமே இல்லை ஜலத்தை கணக்காக தலையின்மேல் ஊற்றிக்கொண்டு அதோடு ஸ்நானம் முடிந்துவிட்டதென்று வந்துவிடுகிறார்கள்,

கேசவன்:—என்ன ஸார். நாட்டுப்புறத்தில் மட்டும் எல்லோருக்குமே வெள்ளைமிளகும்பாலும் கிடைக்குமாக்கும்! நான்:—அதுவுங் கிடைக்காத அனேகம்பேர் இருந்தனர். ஆனால்அவர்கள் தமது சக்திக்கு இசைந்த பழக்கங்களை அறிந்திருந்தனர். சக்திக்குத் தக்கபடி தமது தேவையைத் தொகுத்துக் கொண்டனர். "உள்ளவர்கள்" இரண்டு நேரமுஞ் சோறுண்டனர். அதற்கு வசதி இல்லாதவர் தமக்குஞ் சோறுதான் வேண்டும். தாமும் சோறுண்பவனைப் போல் மனிதன் தானே என்றெல்லாம் வீண்வாதம் செய்யவில்லை ஒரு நேரம் வரகு, கேழ்வரகு. கம்பு இவற்றையேற்று மறு நேரத்திற்குச் சோறுங் கூட்டி வந்தனர். இப்பொழுதோ எல்லோருக்கும் காபி, டீ என்பவை முதல் தமக்கு பழக்கமே இல்லாதவற்றையெல்லாம் விரும்பிக் கேட்கின்றனர், அப்படிப்பட்டவற்றை எப்படியாவது சம்பாதித்துக் கூட்டாவிட்டால் தாம் மற்றையவரை விடத் தாழ்ந்தவராகிவிடுவோம் என்ற எண்ணமுண்டாகி ஒவ்வொருவனும் தனக்குப் பழக்கமில்லாதவற்றையெல்லாஞ் சேவித்துக் கொண்டுவிட்டனர், அதேபோல் அக்காலத்தில் வெள்ளை மிளகும் பாலும் இடைக்காதவர் களிமண்ணைத் தண்ணீரில் கரைத்து, மணிக்கல் செத்தைகூளங்களைக் களைந்துவிட்டு, அதைத் தலைக்குத் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்து வந்தனர் பழக்கப்பட்டிருந்ததால் இந்த மண் ஸ்நானம் அவருக்கு யாருக்கும் யாதொரு கெடுதலையுஞ் செய்ததில்லை, உண்டானவர் மிளகு வெந்தயங்களைத் தேய்த்து ஸ்நானஞ் செய்ததால் பெற்றதை விட அதிக ஸுகத்தையும் இக் களிமண் முழுக்கினால் பெற்றனர். இதனாலெல்லாம் ஒருவன் மேலானவன் என்றோ மற்றொருவன் கீழானவன் என்றோ ஒருவரும் ஒருநாளும் எண்ணியதில்லை. இவருள் யாருக்காவது பொட்டோ, பொடுகோ, சுண்டோ வந்திருக்குமா? தற்போது எதற்கெடுத்தாலும் டாக்டரிடம் ஓடுவது டாக்டரோ-கண்ணுக்கு ஒருவன், பல்லுக்கு ஒருவன் சருமவியாதிகளுக்கு வேறொருவன் என்றெல்லாம் ஆகிவிட்டனர். ஆகவே மேற்சொன்னவற்றுள் ஒன்றை செய்து இந்தப் பொட்டுபொடுகுகளைப் போக்கிக் கொள்ளலாம். தவிரவும், ஐந்து பலம் நல்லெண்ணெயில் அரைப்பலம் வேப்பம்பூவையும் கால் பலம் வெல்லத்தையுமிட்டுக் காய்சி, வடிகட்டி ஆறிய பின் சீஸாவில் வைத்துக்கொண்டு இதையே தினந்தோறும் தலைக்குத் தடவிவரவும், கரிசிலாங்கணியின் சார் ஒருஆழாக்கு, அருகம்புல்இடித்து பிழிந்தசார் ஒருஆழாக்கு, தேங்காய்ப்பால் கால் படி, நல்லெண்ணெய் கால்வீசை, அதிமதுரம் கல்கமாய் அரைத்தது அரைப்பலம் இவற்றை அடுப்பிலேற்றிக் காய்ச்சிய எண்ணெயையுமிப்படியே உபயோகிக்கலாம். கண்டகண்ட வாஸனை எண்ணெய்கள் ஷாம்பூ என்னும் பூச்சுக்களிவற்றை ஒருபோதும் உபயோகிக்கவே கூடாது. இனி நான் வெளியே போய்த்தானகவேண்டும். தாங்கள் இனி வருவதானால் தயவு செய்து பிற்பகல் நேரங்களிலேயே வரவும். நண்பரிருவரும் வணக்கங்களைத் தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் : 1909 டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—

சுராஜ் ஏஜன்ஸீஸ்,
157 லாயிட்ஸ் ரோட்,
மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ 7 8 0
3 பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்குரூ. 8 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 8 12 0
2, ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட் ரோடு சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும்உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை. நீடித்த நறுமணம். தபால் சார்ஜிக்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.



[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, அக்டோபர் 9—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

		ரூ	அ	பை.
உப்பு	1-படி	0	1	0
துவரம் பருப்பு	1-படி	1	1	0
உளுத்தம் பருப்பு	,,	1	4	0
பயத்தம் பருப்பு	,,	1	4	0
கடலைப்பருப்பு	,,	0	15	0
எள்ளு	,,	1	8	0
கடுகு	1 விசை	2	0	0
வெந்தியம்	,,	2	0	0
மிளகு	,,	23	0	0
மிளகாய்-(பேட்டை புதியது)		4	10	0
தனியா	,,	4	4	0
புளி [புதுசு]	,,	1	4	0
சீரகம்	,,	4	0	0
வெல்லம்	,,	1	10	0
நாட்டு சாக்கரை	,,	1	11	0
அஸ்கா சர்க்கரை	,,	1	5	0
மஞ்சள்	,,	2	2	0
பூசு-மஞ்சள்	,,	2	0	0
குங்குமம்	,,	2	0	0
பாதாம் கொட்டை	,,	4	4	0
சீயக்காய்	,,	1	2	0
வாஷிங் சோடா	,,	0	10	0
திராக்ஷை	,,	5	12	0
முந்திரிபருப்பு	,,	5	4	0
களிப்பாக்கு	,,	6	8	0
நெய்	,,	9	8	0
நல்லெண்ணெய்	,,	3	8	0
ஜவ்வரிசி	,,	2	4	0
தேங்காய் எண்ணெய்	,,	3	12	0
கடலெண்ணெய் 1 விசை		2	13	0
ரேடியோ எண்ணெய்		3	4	0
விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு		1	12	0
கேசவர்த்தினி		0	13	0
வாசனை விளக்கெண்ணெய் 4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு		1	5	6

		ரூ	அ	பை.
வாக்க்கர் ஓட்ஸ் 1 டின்		2	2	0
சேமியா	1 ப.	1	2	0
காப்பிக்கொட்டை பீபரி 1 விசை		5	9	0
,,	'A' ,, ,,	5	3	0
காப்பி 1-விசை	'B'	4	2	6
பார்லி	1-விசை	2	8	0
கசகசா	1 விசை	3	12	0
கரி 1 மூட்டை	(56 ப.)	4	0	0
'டால்டா வனஸ்பதி 10 ப		12	1	0
கற்பூரம்	1-பலம்	0	8	0
சாம்பிராணி	1 பலம்	0	6	0
பெருங்காயம்	,,	0	4	0
லவங்கம்	,,	0	3	0
ஏலக்காய்	,,	1	0	0
சுக்கு பலம் 1 க்கு		0	3	0
வால் மிளகு	,,	0	3	0
எல் ஜி பெருங்காயம் 1 சேர்		2	2	0
தீப்பெட்டி, 1 டஜன்		0	8	6
ஓவல்டின்	1 பவுண்ட்	3	10	0
போர்ன்விடா		3	8	0
,,	½ பவு	2	1	0
போர்ன்வில் கோகோ 1 பவுண்ட்		2	12	0
,,	½ பவு	1	8	0
ப்ரைஸ் ப்ரெக்பாண்ட் கொக்கோ	½ ப	1	7	0
'ரௌண்டிரீஸ் (R T.) கொக்கோ	½ ப	1	8	0
கோரா டீ (டஸ்ட்) 1-பவுண்ட்		2	5	6
கோரா டீ ¼ பவுண்ட்		0	4	9
ஹமாம் சோப்		0	6	3
லைப்பாய்		0	6	0
டாம்கோ 501 பார்		1	3	6
லக்ஸ்		0	6	3
பம்மாலிவ் சோப்		0	6	3
ரெக்ஸோனா (3½ அவுன்ஸ்)		0	6	6
மார்கோ சோப்பு		0	8	9
777 பார் 1-க்கு		1	4	0
காந்தி டாய்லட் சோப் 1-க்கு		0	6	0
மைசூர் "ஸாண்டல்' சோப்		0	10	0
கேரளா ஸாண்டல் சோப்பு		0	6	6
மெடிகோ டாயிலட் சோப்		0	8	0
காட்ரீஜ் சோப்	நெ 1	0	11	0
ஷை	நெ 2	0	8	6
ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு		0	6	0
,,	கெஸ்ட் ஸைஸ்	0	2	0
'டாம்கோ'ஹேர் ஆயில்(சிறிய பாட்டில்)		1	1	0
ஷை (பெரிய பாட்டில்)		2	12	0
குங்குமப் பூ [1 பாட்டில்]		1	6	0
பச்சை கற்பூரம் 1 விராகனிடை		0	6	0
"பினைல்' பாட்டல்		0	13	0
நீம் டுத் பேஸ்ட்		1	0	0
மாக்லீன் பேஸ்ட்		1	0	0
பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது)		2	12	0
7 ஓ"க்ளாக்" க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்)		1	0	0



பஸிபிக் பிரதேச மகாநாட்டின் (11-வது) நடவடிக்கைகளை சமீபத்தில் லக்ஷ்மணபுரியில் பண்டித ஹிருதயநாத் குன்ஸ்ரு தலைமையில் பண்டித நேரு ஆரம்பித்துவைத்தார். (வலமிருந்து) உத்தரப் பிரதேச கவர்னர் ஸ்ரீ ஹோமி மோடி, பண்டித குன்ஸ்ரு, பண்டித நேரு, உத்தரப் பிரதேசப் பிரதமர் பண்டித பந்த்.



சமீபத்தில் சர்தார் படேல் இந்தூருக்கு விஜயம் செய்தபோது அங்கு "கஸ்தூரிபா நகரி"ன் அஸ்திவாரக்கல்லை நாட்டினூர். விழாவுக்கு முன்னதாக நடந்த பூஜையில் சர்தார் பங்கு எடுத்துக்கொண்டதைப் படம் காட்டுகிறது.

நாடகநயம்

—ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்

நிலைமைக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ற படி கதா பாத்திரங்களின் சொல்லும் செயலும் வளரும் வழி அமைப்பது நாடகத்திறன். ஆசிரியன் ஆட்டி வைத்தபடி ஆடுவதும், அவன் கட்டித் தந்த சொற்களைப் பாத்திரங்கள் புகல்வதும் நேருமாயின், அந்நூல் நாடக நயம் பெற்ற நூல் ஆகாது.

ஆட்டுவிக்கும் நூலாசிரியனின் சூத்திரக் கயிற்றினைக் கடந்து, பாத்திரங்கள் நிகழ்ச்சிகளின் ஏற்றதலுக்கு இணங்க வியவகரிக்கும்போதுதான் நாடகச் சுவை சுரக்கலாகின்றது. இவ்வண்ணம் நாடகச் சுவை பெருக ஒரு நூலைச் செய்வது உத்தம கவிகளுக்கே சாத்தியம்.

உத்தம கவிகளில் முதலிடம்பெற்றவர் கம்பர். அவர் பாடியருளிய இராமாயணம் நாடகம் அல்லாவிடினும் நாடக மனோபாவத்துடன் இயற்றப்பட்ட மகா காவியம் ஆகும். அதனில் ஒரு கட்டத்தை இங்கு கவனிப்போம்.

பரதன் பாராளவும், இராமன் கான்செல்லவும் கைகேசி தசரதனை வஞ்சித்து வரம் இரண்டு வாங்கிவிட்டாள். இராமன்மேல் அளவற்ற அன்புடைய தசரதன் உணர்வற்றுக் கிடக்கின்றான்.

இராம பட்டாபிஷேகத்திற்குரிய வேளை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. ராஜசபைக்குக் குறித்த நேரத்தில் அரசன் வாராமையால் அங்கே கூடியிருந்தோர் காரணம் தெரியாமல் கலங்கலானூர்கள். அந்நிலையில் வசிஷ்டர் விஷயம் தெரிந்துகொள்ளும் கருத்தோடு கைகேசியின் மாளிகை வருகின்றார். வந்தவர், அரசனது நிலையையும் அன்னதற்குக் காரணமாய் அமைந்த கைகேசியின் வரத்தையும் அறியலானூர்.

மாமுனி வசிஷ்டனோ மும்மையும் உணரவல்லவர். "தேவரும் முனிவரும் உணரும் தேவர்கள் மூவரில் நால்வனும்" தகைமையுடையவன் என்று கம்பர் வசிட்டனைப் பாராட்டுகின்றார். எனவே அவர் இராமாவதார இரகசியத்தை அறிவார். இராமன் நடிப்பது ஒரு நாடகம் என்பதும், அவன் எடுத்த அவதார-கருமம் நிறைவேறுதற்கு அவன் காடு செல்ல வேண்டிய அவசியத்தையும் அவர் அறிந்தவரே.

இந்த நாடக இரகசியம் மற்றவர்க்கு வெளியாகா வண்ணம், உபபாத்திரமாக அமைந்து நடிக்கவேண்டுவதும் வசிஷ்டருக்கு அவசியமாகின்றது. ஆகவே, எம்பிரான் நிகழ்த்தும் நாடகம் வெளியாகா வண்ணம் காப்பதற்கு வேண்டிய அளவொடு முனிவரது சொல்லும் செயலும் அமைதல் போதும். அவ்வழியே, கைகேசி மேற்கொண்ட கருமத்தினின்று அவளை விலக்க முயலும் முனிவர் கூறுவார்:—

'இனியுன் புதல்வற் கரசும்
ஏனையோர்க் கின்னுயிரும்
மனுவின் வழிநின் கணவற்
குயிரும் உதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே
புனையாய் பொன்னே.'

இன்னபடி நயமொழிகளால், துணிந்த கருமத்தைத் தொடராமல் இருக்குமாறு கைகேசியை வசிஷ்டர் வேண்டிக் கொள்கின்றார். அவளோ இவ் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை, மேலும் கூறுவார் முனிவர்:—

'கொழுநன் றுஞ்சும் எனவும்
கொள்ளாது உலகம் எனவும்
பழிநின் றுயரும் எனவும்
பாவம் உளதாம் எனவும்
ஒழிகின் றிலை அன்றியும் ஒன்று
உணர்கின் றிலை யானினிமேல்
மொழிகின் றன என் என்று
முனியும் முறையன்று என்பான்'

[வசிஷ்ட்ட முனிவன், 'கணவன் சாவான் என்றும் உலகத்தார் இதனை ஏற்றுக்கொள்ளார் என்றும் உன் பழியே நாளுக்கு நாள் வளரும் என்றும் இதனில் பாவம் உளது என்றும் நினைத்து நீ இக் கருமத்தைத் தொடராமல் ஒழியமாட்டேன் என்கின்றாய். (இதனில் உள்ள இரகசியம்) ஒன்றையும் நீ அறியாய், ஆதலினால் இதற்கு மேல் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? எனினும் இது உனக்கு முறையன்று, என்பதை மட்டும் கூறுவேன்.' என்றார்.]

இதுவே இப்பாசுரத்தின் பொருள் "மாதே, கற்பின் நலமும் மாண்புடைய நல்ல குணங்களும் உடையவள் நீ. அப்படியிருந்தும், இப்பொழுது நீ பழியும் பாவமும் பாராமல் கருமம் புரிகிறாய். உனக்கு இது முறை அன்று என்பது ஒன்றின்றித் திருவுளத்தின் கருத்து நடப்பதற்கு நீ ஒரு கருவியாய் அமைந்திருப்பதை அறிந்த நான் உன்னை வெறுத்துக் கூறுவதில் யாது பயன்?" என்ற பொருளையே கருத்தாகக்கொண்டது இச்செய்யுள். எல்லாம் அறிந்த வசிஷ்டர் கூறவேண்டியதும் இவ்வளவே. கதை மேலே நடக்க இது போதுமானது. ஆகவே, கம்பர் கற்பித்த பாடத்தை முனிவர் கூறிவிட்டார்.

இன்னபடி நூலாசிரியர் வகுத்தபடி பேசிவந்த முனிவனை இரண்டு விஷயங்கள் முன்னெனத் தைத்து உறுத்தின,

ஒருவனுக்குத் தீங்கு இழைக்க ஒருவன் விரும்புகின்றான் என்று வைத்துக் கொள்வோம். தீங்கிழைக்க விரும்புவன், தனது வலிமையைக்கொண்டு விளைத்த தீங்கை இழைத்து முடிப்பதினும் கொடியது. தனது தீங்கிற்கு இலக்கு ஆனவனது மென்மையும் மேன்மையும் ஆகிய தன்மைகளைக் கொண்டே அவனை அழியச் செய்வது. அதனினும் கொடியது நட்பின் நெருங்கிய ஒருவனால் இவ்வாறு இழைக்கப்படுவது.

அறத்தின் உருவம்போன்ற தசரதன் உணர்வு அற்றவனாய்த் தரையிலே சாய்ந்து கிடக்கின்றான் அவனோ வாய்மை அறம் வழுவாத மேன்மையோன். அவ்வாய்மை அறத்தைக் கொண்டே அவனை அழிக்க முயல்கின்றாள் கைகேயி. மேலும் அவளோ அவனது காதல் மனைவி. இதனைக் காண வசிஷ்டரால் சகிக்க முடியவில்லை, அவரது தூய உள்ளத்தில் வெஞ்சினம் மூள்கின்றது

விலங்குகளையும் பறவைகளையும் அம்பு செலுத்திக் கொல்கின்ற வேடர்களின் தீமையை நாம் ஒருவாறு பொறுக்கலாம் இசையையே நயந்து வாழும் அசுணமாக்களை இசையால் ஒரு சிறை கொணர்வித்துப் பின், நல்லிசையின் நலம் இல்லாப் பறையைக் கொட்டிக் கொல்விக்கும்கொடுமையை யாரே பொறுத்தல் கூடும்? கைகேசி தொடரும் கொடுமையை முனிவரால் பொறுக்க முடியவில்லை.

'ஐய, முனிபுங்கவரே, பெற்ற வரத்தின் பயனை நான் ஏன் அனுபவிக்கலாகாது' என்று அவள் கூறியிருப்பாளாயின், 'எல்லாம் நடக்க வேண்டியபடியேதான் நடக்கின்றன,' என்று கொண்டு முனிவர் பேசாது இருந்திருப்பார். ஆனால், அவளோ, "என்னே மன்னா இதுதான் வாய்மை அறமோ!" என்றும், "மெய்யினின்று அரசன் திரிவான் என்னில், வாய்மையறம் பிழைத்த பழி அவனதாக நான் உயிர் துறப்பேன்' என்றும் இரக்கம் இலாவழி கூறிக் கருதிய ஊதியத்தைப் பெற அவள் முயல்வதைக் கண்ட முனிவர் தன் வயம் துறக்கலானார் தன் காதற் கணவனது வாய்மையறத்தைக் கொண்டே அவனை வதைக்க முயல்கின்றாளே இப்பாவி எனப் பொங்கிய முனிவர் கூறுவார்:—

"கன்னோடாதே கணவன்
உயிரோடிடர் காணதே
புன்னுடோடும் கவலோ
வீடமோ என்னுப் புகல்வாய்!
பெண்ணோதீயோ மாயாப்
பேயோ கொடியாய் நீயிம்
மண்ணோடுன்னோ டென்னும்
வசையோ வலிதே யென்றான்"

"தாட்சண்யம் இல்லாமலும் கணவனது உயிர் நீங்கும் என்னும் துன்பத்தை நினையாமலும், புண்ணில் பாயும் நெருப்போ விஷமோ என்னும்படி பேசுகின்றாயே. நீ ஒருபெண்ணோ! நெருப்போ! அல்லது (விட்டு நீங்காமல் எதிர் நின்று உயிர் குடிக்கும்) பேயோ! கொடியவளே, நீயும் நீ பெற்ற இம் மண்ணுமாய் ஒன்று சேர்ந்து என்ன ஆகப்போகின்றீர்கள்! (விலக்க முடியாத) பழிதான் உனது ஆகப்போகின்றது!" என்று முனிவர் அவளை ஏசினார்

இவ்வாறு கேகேசியை ஏசிய முனிவரது கோபம் மேலும்மேலும் வளரலாக, இன்னும் வன்மையொடு அவர்

"வாயான் மன்னன் மகனை
வனமே கென்று முன்னம்
நீயோ சொன்னாய் அவனே
நிமிர் கானிடை வெந்நெறியில்
போயோ புகலோ தவிரான்
புகழோ டுயிரைச் சுடுவெம்
தீயோய் நின்போல் தீயார்
உளரோ செயலென் என்றான்"

["காட்டிற்குச்செல் என்று அரசன் தன் வாயால் சொல்லும் முன்னம் மகனைப் போவென்று நீ சொன்னாய். இராமனோ மரங்களால் நிறைந்த காட்டின் கொடிய பாதையில் போய்ச் சேர்வதைத் தவிர்க்கமாட்டான். கணவனது உயிரையும் உன் புகழையும் ஒருங்கே பொசுக்குகின்ற நெருப்பைப் போன்றவளே, உன்னைப்போல்கொடியவர் உலகத்தில் இருக்கின்றார்களோ! இதன்மேல் செய்வதற்கு என்ன இருக்கின்றது' என்று தகைந்தார் வசிஷ்டர்.)

எல்லாம் உணர்ந்த முனிவர் முதலில் ஒப்பிற்கே கைகேசியைத் தடுக்க வந்தார். கதை நிகழ அவர் செய்ய வேண்டுவதும் அவ்வளவே ஆனால் அவர் கண்ட காட்சியும், மனைவியின் கொடுமையும், தசரதன் தளர்ந்து கிடக்கும் நிலைமையும் ஆகிய எல்லாம் அவரது அறிவினை அலைத்து விடுகின்றன நிகழ்ச்சியின் கொடுமையைத் தாங்கமாட்டாதவராய்க் கைகேசியை ஏசி விடுகின்றார்.

பிரகலாத நாடகத்தில் நரஸிம்ம வேஷதாரி ஹிரண்ய வேஷக்காரனை மெய்யே கொன்றுவிடுவது போல் ஆகின்றது வசிஷ்டரது செயல். இப்படி நிகழ்வதுதான் நாடக நயம்.

அழகிய பட்டு & நூல் புடவைகள் வசீகரமான டிசைன்களில் கவர்ச்சியான கலர்களில் மிக மலிவான விலைகளில் கிடைக்கும்.

உங்கள் வீட்டில் டெலிவரி வி. பி. பி. யில் கிடைக்கும். தபால், பாக்கிங் செலவு அணா 12 பிரத்யேகம்.

கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதம்

101 நூல்புடவை 6 கெஜம், பிளெயின் அல்லது கலர்	ரூ.	3-12
102 நூல் புடவை 6 கெஜம் கலர் ஜரிகை பார்டருடன்	ரூ.	6-8
103 நூல்புடவை 9 கெஜம், பிளெயின், அல்லது கலர்	ரூ.	9-0
104 பட்டுப்புடவை 6கெஜம் பிளெயின், கலர்	ரூ.	7-4
105 பட்டுப் புடவை பூ டிசைன் அச்சடித்தது	ரூ.	8-8

ஸ்பெஷல்

சேர்ந்தாற்போல் ஏதேனுமிரண்டு புடவைகள் வாங்கினால் தபால், பாக்கிங் செலவு இலவசம்.

மூன்று புடவைகள் சேர்த்து வாங்கினால் தபால் பாக்கிங் செலவு இல்லாதது டன் ஒரு சென்ட் புட்டி இலவசம்.

ATTRACTIVE GIFT MART

23/25, Girgaum, BOMBAY-4.

அட்டைப்படம்

☆

சென்ற மாதம் கோதன்பர்க்கிற்கு வடக்கே 10மைல் தூரத்திலுள்ள சுர்தே என்ற ஸ்வீடிஷ் கிராமம் முழுவதும் மலையிலிருந்து அடியோடு பெயர்ந்து நதியில் விழுந்தது வீடுகளும் கடைகளும் மட்டுமின்றி ரயில்வே ஸ்டேஷனும் சரிந்து நதியில் விழுந்தது சில வாரங்களாக மழை பெய்ததன் பயனாக இந்த விபரீதம் நிகழ்ந்தது.